[illegible]
[illegible]
[illegible] 1938

8L—
m211,N30TA
N38.9.4,
207664

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

(மாத வெளியீடு)

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்....'

ஆசிரியர் : டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் 9 | வெகுதான்யஸூ சித்திரைமீ 1938ஸூ ஏப்ரல்மீ 15 உ | இதழ் 4 |
|---|---|---|

17 MAY 1938 MADRAS

## இன்பத் தமிழ்

[சங்கராபரண ஜன்யம் – மிசிர சாபு]

தமிழுக்கும் அமுதென்று பேர் !—அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர் !
தமிழுக்கு நிலவென்றுபேர் !—இன்பத்
தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர் !
தமிழுக்கு மணமென்றுபேர் !—இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர் !—இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம்பயிருக்கு வேர் !

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் !—இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்குவேல் !
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் !—இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன் !
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் !—இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின்வாள் !
தமிழ் எங்கள் பிறவிக்குத்தாய் !—இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ !

—புதுவை - பாரதிதாஸன்

# பொருள் அடக்கம்

207664


| | | |
|---|---|---|
| ஆசிரியர் குறிப்புகள் | .... | 243 |
| ஏற்கெனவே வரிச் சுமையை தாங்க முடியாமல் தவிக்கும் மக்கள் மேல் காங்கிரசு கவர்ன்மெண்ட் வந்த பிறகு ஏற்படுத்தப் பட்ட புது வரிகளின் விவரம் | .... | 248 |
| பத்தினி பக்தி | .... | 249 |
| மனைவியின் யுக்தி | .... | 253 |
| சினிமாவில் நடிக்க வேண்டுமா ? | .... | 258 |
| தென்னாடும், திரைப் படமும் | .... | 263 |
| 'சினிமா' கிண்டல் | .... | 267 |
| பரத நாட்டியம் | .... | 271 |
| 'காதலில் சாதல்' | .... | 273 |
| என் ஆம்படையாள் வியாபாரம் | .... | 280 |
| ஏமாந்த நரிகள் | .... | 284 |
| காதலும் கட்டுப்பாடும் | .... | 285 |
| பரமானந்தர் அல்லது குளவிக் கூட்டம் | .... | 291 |
| தொழிலாளர் துயரம் | .... | 298 |
| துக்க ஜீவியத்தின் பேரொலி | .... | 302 |
| விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் | .... | 305 |
| மோட்டார் முதலிய போக்கு வரவு சாதனங்களின் சீர்திருத்த மசோதா | .... | 327 |
| நட்பும் காதலும் | .... | 329 |


குறிப்பு:—'தமிழர'சில் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளியாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவையாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.

M 211, N30TA
N38.9




## (பு)திய ஆண்டு பிறந்தது

தமிழ்ப் புதிய வருஷம் பிறந்தது. புதிய ஆண்டில் நாம் அனை(வ)ரும் புதிய தமிழராகக் கடவோம்.

ஏன் இப்படி நம் தமிழ் குன்றிக் கிடக்கிறதென்ற எண்ண(வே)ண்டும். உயிரோடு ஐக்கியப்பட்ட 'பாஷை'யை இழந்தோ(மா)னால், அன்றே நாம் உடலை விட வேண்டியதுதான். எப்படியாவது (ந)து தமிழை வளர்க்க வேண்டுமென்று உறுதி கொள்ள வேண்டும்.

பழைமையின்மேல் படிந்துள்ள மாசுகளைப் போக்குவதே (மு)தல் வேலையாக இருக்க வேண்டும். அன்புக்கன்றி வேறு (எ)தற்கும் பணியாத வீரம் வேண்டும். சலியாத மனம் வேண்டும். (தி)டமான மன உறுதி வேண்டும். முன்னே செல்வதன்றிப், (பி)ன்னுக்கு ஒருபோதும் போகக் கூடாது.

புதிய வருஷத்தில் நாமனைவரும் புதிய தமிழராகக் கடவோம். புதிய குணங்களை வளர்க்கக் கடவோம். நம் வாழ் நாட்களில் எத்தனையோ வருஷங்களை எப்படி எப்படியோ போக்கி விட்டோம். இந்தப் புதிய தமிழ் வருஷத்தையாவது, நமது பரிபூரண வெற்றி(யி)ன் துவக்கத்திற்கு முதலாவது வருடமாகக் கொண்டு, மனப் பூர்வமாக உழைத்துக் கீர்த்திபெறக் கடவோம். உழைக்கவே நாம் பிறந்தோம். நம் 'கடன் பணி செய்து கிடப்பதே'.

## சுங்க வரிச் சுமை

காங்கிரஸ் மந்திரி சபை வந்ததும் எவ்வித வரியும் இருக்கா(து) தென்று நம்பினார்கள். இப்போது புதிய புதிய பெயர்களில் 'நாசு'க்(கா)கான வரிகளை விதித்து வருகிறார்கள். சுங்க வரியால் குடியானவர்கள் படும் தொல்லையைச் சகிக்காமல் ஜஸ்டிஸ் கட்சியார் சுங்கச் சாவடி வரியை ரத்து செய்தார்கள். திடீரென்று காங்கிரஸ் மந்திரிகள் இவ் வரியை இப்போது புதுப்பித்து விட்டார்கள். ஆனால், இதைச் செய் திருக்கும் முறை மிகவும் தந்திரமானது. அதாவது, ஜில்லா போர்டு முனிசிபாலிடி முதலிய ஸ்தல ஸ்தாபனங்கள், சர்க்காரிடமிருந்து கடனாகவோ, கிராண்டாகவோ பணம் வாங்கி 1931-ஆம் வருஷம் ஏப்ரல் 1-ந் தேதிக்குப் பின் புதிதாகப் பாலங் கட்டியிருந்தாலும் ரோடு போட்டிருந்தாலும் அல்லது ஏற்கனவே இருக்கும் பாலப்

ாடுகளை அந்தக் காலத்துக்குப் பின் ரிப்பேர் செய்திருந்தாலும், தற்காகச் செலவான பணத்தை, அந்த இடத்தில் போக்குவரத்தி ள்ள வண்டி வாகனுதிக்குச் சுங்க வரி போட்டு வசூலிக்க வேண்டு ன்பதே காங்கிரஸ் மந்திரிகள் சமீபத்தில் நிறைவேற்றிய சட்ட ுகும். புது ரோடும், புதிய பாலமும் போடப்படும் இடங்களுக்கு ட்டும் சுங்க வரி போட்டிருந்தால் பாதகமில்லை. சர்க்கார் பணத் ல் ஏற்கனவே 1931-இல் கட்டப்பட்டதும், ரிப்பேர் செய்யப் ட்டதுமான பாலம் ரோடுகளில்கூட சுங்கம் வசூலிப்ப தென்று டிவு செய்ததுதான் மோசனமான காரியம். இது பெரிதும் குடி ானவர்களேயும், வண்டி யோட்டிப் பிழைக்கும் ஏழைகளையும் துதியும் பாதிக்கும். பிரஸ்தாப மசோதா பிரேரிக்கப் பட்ட பாது, சர் ஏ. டி. பன்னீர் செல்வமும், ராவ் பகதூர் என். ஆர். ாமியப்பாவும் இரண்டு திருத்தங்கள் கொண்டு வந்தார்கள். மாட்டு ண்டிகள், கை வண்டிகள், சைகில் வண்டிகள் ஆகியவற்றிற்குச் ங்க வாங்கக்கூடா தென்பதுதான், அத் திருத்தங்களின் சாரம். த் திருத்தங்களையாவது காங்கிரஸ் மந்திரிகள் கண்காணித் திருக்க ாம். அப்போது அவர்கள் ஏழைகளுக்குப் பாடு படுகிறவர்கள் ன்பது உண்மையாகும். அதுவுமில்லை. இம் முறையை என்ன வன்று சொல்வது!

## விளம்பர மந்திரி கவனிப்பாரா?

'விக்டோரியா மகா ராணியின் தலை பதிப்பிக்கப்பட்ட ரூபாய்கள் செல்லத் தக்கது. மேற்படி ரூபாய்களை வாங்கிக்கொள்ள ாவரும் மறுக்கக் கூடாது' என்று சென்னை விளம்பர மந்திரி, பத்திரிக்கைகளுக்குச் சமீபத்தில் அறிக்கை விட்டிருக்கிறார். ஆனல், மேற்படி ரூபாய்களை வாங்க மறுத்தால், மறுதளிக்கப்பட்டவர் என்ன செய்வது என்று மந்திரி அவர்கள் தமது அறிக்கையில் கூறாதது வருந்தத் தக்கது. மறுக்கப்பட்ட ரூபாய்களைத் தங்கள் வீட்டில் கொண்டுபோய் வைத்துக் கொள்வதா? விளம்பர மந்திரி அவர்களுக்கு அனுப்புவதா? அல்லது பிரதம மந்திரிக்குத் தந்தி கொடுப்பதா? போலீசாரிடம் சொல்லுவதா? என்று ஒன்றுமே விளங்கவில்லை. கனம் மந்திரி தமது அறிக்கையை வெளியிட்டும் பல வியாபாரிகள் மேற்படி ரூபாய்களை வாங்க இன்னும் மறுக்கிறார்கள். விளம்பர மந்திரியின் அறிக்கையைச் சொன்னல், அது அவர்களுக்கு விளங்கவில்லை. ஆதலால், ராணித் தலை ரூபாயை வாங்க மறுப்பின் ரூபாய்க் குடையவர் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சர்க்கார் விளம்பர மந்திரி விளக்குவாரா என்று எதிர்பார்க்கிறோம்.

## சினிமாக் கூட்டம்

போன வருஷம் சென்னையில் நடைபெற்ற 1-வது மாகாண சினிமா மகா நாட்டின் தொடர்ச்சியாக இந்த வருஷமும் இரண்டாவது மகாநாட்டை கோயம்புத்தூரில் இம்மாதம் 16, 17-ந் தேதி களில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் வெகு ஜரூராக நடந்து வருகின்றன. 'அகில இந்திய' என்றும் 'மாகாண' என்றும் சென்ற வருஷம் இரண்டு கட்சிகள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டார்கள். கடைசியில் இரண்டு மகாநாடுகளும் நிறைவேறி, அதோடு அந்த அத்தியாயம் முடிவிற்கு வந்தது.



இந்த வருஷம் நடக்கும் மகாநாடு வெறும் பத்திரிகைக்காரர் கள் மகாநாடாக இல்லாமல் முதலாளிகள், ஸ்டூடியோக்காரர்கள், நடிகர்கள் ஆகிய எல்லோரும் ஒற்றுமையாகக் கூடி, தங்களுடைய ப்ரச்னைகளைப் பரஸ்பரம் எடுத்துச் சொல்லி சரியான முடிவிற்கு வர வேண்டும். தவிரவும் வெறும் தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றி விட்டு, பின்னல் தூங்குவதில் பிரயோஜனமில்லை 'அந்த முடிவுகளை' ல்ல முடிவான அமுலுக்குக் கொண்டுவந்து, எல்லோரும் அதற் கு் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

பட முதலாளிகளும், இதர தொழிலாளிகளும், தாங்கள் நிறை வேற்றும் தீர்மானங்களைத்தாங்களே உதாசீனம்செய்து அவற்றிற்கு விரோதமாகக் காரியங்களை நடத்தி வருவார்களானல் இந்த மகா நாடுகளைக் கூட்டுவதால் பிரயோஜனமே இல்லை. இவற்றிற்காக செய்யப்படும் எல்லா பிரயாசைகளும் வீணே.

இப்போது தமிழ் நாட்டினர் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் ஒன்றே யாகும்.

வட நாட்டுப் படங்களும், தெலுங்குப் படங்களும் நம் முடைய சொந்த தமிழ்ப் படங்களைவிட நம் ஊர்களிலேயே அதிக வெற்றியுடனும் ஆதரவுடன் தொடர்ந்து பல வாரக் கணக்காக கூட ஓட ஆரம்பித்திருக்கின்றன.

தமிழ்ப் படங்கள் இன்னும் மோசமான நிலையிலேயே இருப் பதுதான் இதற்குக் காரணம்.

இந்த ஆபத்தைத் தடுக்க நாம் ஏதாவது வழி தேட வேண்டும்.

யோசித்துப் பார்த்தால், தமிழ்ப் படங்களுக்காக செலவழிக் கப்படும் பணத்திற்கும் குறைவில்லை. சில சமயங்களில் தெலுங்கு, ஹிந்திப் படங்களைவிட இரண்டத்தனை அல்லது மூன்றத்தனை அதிக மாக பணம் செலவழிக்கிறார்கள். நடிகர்களும் கொள்ளை கொள்ளை யாக பணம் வாங்குகிறார்கள்.

இத்தனை யிருந்தும் நல்ல கதாசிரியர்களும், திறமை வாய்ந்த டைரக்டர்களும் இல்லாத ஓர் குறையால் படங்கள் தலையெடுக் காமல் மடிந்து வருகின்றன.

கோயம்புத்தூர் மகாநாடு சினிமா சீர்திருத்தம் சம்பந்தமாக தீர்மானங்களை நிறைவேற்றுவதோடு நம்முடைய வாலிபர்களி

லேயே சினிமாக் கலையில் ஊக்கமும், அறிவும் உள்ளவர்களுக்கு நல்ல சந்தர்ப்பங்களும் கொடுத்து நுணுக்க விஷயங்களிலும் தக்க பயிற்சி பெற வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க முயல வேண்டும்.

கோயம்புத்தூரில் கூடும் 2-வது மாகாணக் கூட்டம் என்ன செய்கிறதோ பார்ப்போம்!

## புலுசுவின் பிரயாணம்

சென்னை சட்ட சபைத் தலைவர் ஸ்ரீ. புலுசு சாம்பமூர்த்தி கோடை காலத்தில் சீமைக்குப் போவதாக ஏற்பாடு செய்திருந்த பிரயாணத்தை காரியக் கமிட்டியார் ஒரே அடியில் நொறுக்கித் தள்ளிவிட்டார்கள்.

சீமைக்குச் சென்று பார்லிமெண்ட் நடவடிக்கைகளைக் கவனித்து அதன் சட்ட திட்டங்களையும், சம்பிரதாயங்களையும் நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக மேல்நாட்டுப் பிரயாணம் திட்டம் போட்டிருந்தார்.

சட்டசபைத் தலைவர் சர்க்கார் செலவில் (பொது ஜனங்களின் பணத்தைக் கொண்டு, மேல் நாட்டிற்குப் பிரயாணம் செல்வது முறைதானா? அவசியம்தானா? இதனால் சட்ட சபைக்காவது நாட்டிற்காவது என்ன பயன்? என்பன போன்ற பல கேள்விகள் ஏற்பட்டன.

சட்ட சபையில் இவ் விஷயம் விவாதத்திற்கு வந்தபோதே எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் வெகு தீவிரமாக எதிர்த்தார்கள். அவர்கள் கூறிய பல வாதங்களில் ஒன்று பின்வருமாறு:—

'காங்கிரஸ் எத்தனைக் காலம் உத்தியோகம் வகிக்கப் போகிறதென்பதே நிச்சயமில்லை. எந்த வேலையில் வேண்டுமானால் என்ன நெருக்கடி வேண்டுமானால் நேரிடலாம். சட்ட சபைத் தலைவர் சீமைக்குப் போவதால், அவரைப் பொருத்தமட்டில் ஏதாவது அனுகூலம் ஏற்படலாமே ஒழிய பொது ஜனங்களைப் பொருத்தமட்டில், இதற்காகச் செலவழிக்கப்படும் பணம் வீண் ஆகும். இது நீதியும் அல்ல' என்றே சொன்னார்கள்.

பிரதம மந்திரி ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாச்சாரியார் இந்த வாதத்திற்கும் ஏதோ ஒரு சமாதானத்தைச் சொல்லி, கடைசியில் மான்யமும் நிறைவேறியாய் விட்டது.

ஆனால், காங்கிரஸ் காரியக் கமிட்டி இந்த முடிவைத் தீவிரமாகக் கண்டித்து, உடனே புலுசுவின் பிரயாணத்தை ரத்து செய்ய வேண்டு மென்றும் உத்திரவிட்டது.

காரணம் ஸ்ரீ. சாம்பமூர்த்தி போன்ற ஒரு தீவிர காங்கிரஸ் வாதி இந்த நிலையில் சீமைக்குச் செல்வாரானால் காங்கிரஸ் ஏதோ



புதிய அரசியல் திட்டத்தைப் பரிபூரண சம்மதத்துடன் நடத்தி வைக்க இசைந்து விட்டதாக தப்பர்த்தம் செய்துகொள்ள அது இடம் கொடுக்கு மென்பதுதான்.

ஸ்ரீ. புலுசுவும் நல்ல பிள்ளையைப்போல் உடனே தன் சீமை பிரயாணத்தை ரத்து செய்துவிட்டார்.

அவருடைய கோடைக்கால விடுமுறை மாகாணத்திலேயே செலவழியும்.

இவ்விதம் மாகாண சர்க்கார் ஏகமனதாகத் தீர்மானித்த ஓர் ஏற்பாட்டை காரியக் கமிட்டியார் ஒரே அடியில் நிராகரித்து விட்டது முறைதானா என்பதும், சட்டசபைத் தலைவர், கட்சிக் கட்டுப்பாட்டிற்கு எவ்வளவு தூரம் உட்பட்டவர்கள் என்பதும், சர்ச்சைக்குரிய விஷயங்கள்.

எது எப்படி இருந்தாலும் ஸ்ரீ. புலுசு சாம்பமூர்த்தி சீமைக்குப் போக ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவ்வளவு மோசமான அரசியல் நெருக்கடி தற்சமயம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை என்பதை யார்தான் மறுப்பார்கள்?

---


## கவலை வேண்டாம்

மலச்சிக்கல், கணச்சூடு, எலும்புருக்கி நோய் இவைகளுக்கு ஒப்பற்ற லேகியம். குழந்தை முதல் முதியவர் வரை அனைவரும் சாப்பிடலாம். சுகமாக மலம் நீக்கி, சரீர உஷ்ணத்தைப் போக்குவதில் நிகரற்றது. குளிர்ச்சியை உண்டாக்குவதில் சிறந்தது. யாதொரு பத்தியமு மில்லை. இளைத்தவர்களுக்குத் தேக புஷ்டியையும் அழகையும் கொடுக்கும்.

## கூழ்ப்பாண்ட லேகியம்

ஒரு பவுன் பெட்டி விலை ரூ. 2.

விலாசம்:

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

## ஏற்கனவே வரிச் சுமையை தாங்க முடியாமல் தவிக்கும் மக்கள் மேல் காங்கிரசு கவர்ன்மெண்ட் வந்த பிறகு ஏற்படுத்தப்பட்ட

## புது வரிகளின் விவரம்

| | | |
|---|---|---|
| (1) | ஜவுளிக் கடை வரி | (அரசாங்கம்) |
| (2) | விளம்பர வரி | (கார்ப்போரேஷன்) |
| (3) | லாரி மோட்டார் பஸ் வரி அதிகரிப்பு | (அரசாங்கம்) |
| (4) | வருமான வரி அதிகப்படுத்த சட்ட சபையின் தீர்மானம் | ( ,, ) |
| (5) | தோல்கேட்டு வரி | ( ,, ) |

இன்னும் ஏற்படப் போகும் வரிகளை எதிர்பாருங்கள். இதுவே நாம் அடையும் நன்மை போலும் !

### தேர்தல் முறை

புதிய முறையில் கலர் பெட்டியால் தேர்தல் நடைபெறும் முறையானது முழு மோசமாகவும் வாக்காளர்களின் உரிமையைப் பராமரித்ததாயும் காணப்படுகின்றது. காங்கிரஸ் அட்டாக் கமிட்டி தேர்ந்தெடுத்த ஆளையே வாக்காளர்கள் எடுக்க வேண்டுமே தவிர வாக்காளர்கள் தேர்ந்தெடுத்து காங்கிரசுக்கு அனுப்ப வேண்டிய நியதியை அறவே அழிக்கப்பட்டுவிட்டது. காங்கிரசில் பல பேர் அபேட்சகர் இருந்தால் அவர்களில் யாரை தேர்ந்தெடுப்பது என்பதை வாக்காளர்களிடம் கலந்து கேட்காமலும் அவர்களின் முடிவைக் கவனியாமலும் அவர்களைப் பொருட்படுத்தாமலும் அட்டாக்கமிட்டி ஆளை நியமித்தாய்விட்டது அவரைதான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லுவது வாக்காளர்களை அலட்சியம் செய்ததாகும். இம் முறையை அரசாங்கம் கைக்கொண்டால் வாக்காளர்களிடம் ஓட்டு வாங்குவது பயனற்றதாகும் இதைவிட அட்டாக் கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நபர்களை மெம்பர்களாக சேர்த்து ஓட்டு முறையை நீக்கி விடலாமே? ஏன் இதற்காக வீணில் செலவு செய்ய வேண்டும்?

இப்போது காங்கிரஸ் கட்டுப்பாடு என்று கூறிக்கொண்டு வர்ணப் பெட்டி மூலம் தேர்தல் நடத்தும் முறை காங்கிரஸ் கமிட்டியால் நாமினேஷன் கொடுத்து சட்ட சபைக்கோ, கார்ப்பரேஷனுக்கோ, முனிசிபாலிடிக்கோ, ஜில்லா போர்டுக்கோ அனுப்பப்படுவதாக ஏற்படுமே யொழிய ஜனநாயக ஓட்டு முறையால் தேர்ந்தெடுத்தனுப்பும் முறையாகாது. ஜனநாயக முறையில் தேர்தல் நடத்த வேண்டுமானால் கலர் பாக்ஸ் முறையை ஒழித்துவிட வேண்டும், அட்டாக் கமிட்டியை அழித்துவிட வேண்டும்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 MAY 1938
MADRAS

## பத்தினி பக்தி

[தேவக்கோட்டை ஸ்ரீ V. இராமநாதன்]

(All rights reserved with the author)

### ஏழாம் அத்தியாயம்

**வீரபுர** சாம்ராஜ்யத்தின் சேனாதிபதியின் அருமந்தப் புதல்வனான சுரேந்திரநாதனை வெற்றிபுரியினின்றும் பயணம் செய்தனுப்புவித்த நாம், இதுகால பரியந்தம் உள்நாட்டுக் குழப்பத்திலேயே ஆழ்ந்து விட்டோம். அவனைப்பற்றி இனிச் சிறிது நோக்குவோம்.

வலங்கைத் தீவை வந்தடைந்து நமது வாலிப வீரனை அங்கிருந்த வீரபுர சாம்ராஜ்ய மக்கள் குதூகலமாக வரவேற்றுபசரித்தனர். யாரோ வீரபுர சாம்ராஜ்யத்திலிருந்து வந்து விட்டதாகவும், எங்கும் ஏகக் கிளர்ச்சிகள் நடக்கப் போவதாகவும், அதன் முடிவு எப்படியாகுமோ வென்றும், வலங்கைத் தீவு மக்கள் தங்களுக்குள் பேசிப் பேசிப் பயந்தனர், இயற்கைதானே! மக்கள் மலையைத் துரும்பாகவும் மதிப்பர்; துரும்பை மலையாகவும் எண்ணுவர்! ஆனால், இஃது எப்படியோ வரவர அறிவோம்.

சுரேந்திரநாதன் முதன் முதலாக ஒரு பெரிய கூட்டம் கூட்டினான். அத் தீவிலுள்ள வீரபுர சாம்ராஜ்ய மக்கள் அனைவரும் ஆண் பெண் என்ற பாகுபாடோ, பாலர் விருத்தர் என்ற தாரதரமோ, உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பிரிவோ அற்று அனைவரும் ஒன்றாகக் கூடினர். அவர்கள் மத்தியில் குப்பைக்குள் குண்டுமணி போல நமது சுரேந்திரநாதன் பிரகாசித்து அவர்களையெல்லாம் நோக்கி, 'அன்பார்ந்த தாய் நாட்டுச் சகோதர, சகோதரிகளே! ஓசை செய்யாமல் நான் கூறுவதைக் கவனமாய்க் கேட்க வேண்டும். கேட்டபின் நீங்கள் உங்கள் பதிலைத் தெரிவிக்க வேண்டும். தெரிவித்தபின் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஆவன செய்வோம்' என்றான். 'அப்படியே செய்வோம்! அப்படியே செய்வோம்!!' என்று ஆர்ப்பரித்தனர் அங்குக் குழுமி யிருந்த மக்கள்.

'நன்று! இப்பொழுது இங்கு நாம் எதற்காகக் கூடியிருக்கிறோம் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். வீரபுர சாம்ராஜ்ய மக்களாகிய நம்மை இத் தீவு மக்கள் சரி நிகர் சமானமாக நடத்த வேண்டும் என்ற முடிவு கொள்ளவேயாகும். இம் முடிவை அடைய அதிகச் சிரமப்பட வேண்டிய அவசியமே யில்லை. ஆனால், இத் தீவில்

இப்பொழுதுள்ள நம் மக்கள்மட்டும் ஒன்றுபட்டு ஒரு முகமாக நிற்க வேண்டும். ஜாதிப் பிளவுகளும், சமயப் பூசல்களும் இப்பொழுது வேண்டாம். அதைப்பற்றிப் பேச இதுசமயமு மல்ல. அன்றி, அதையே பேசிக்கொண் டிருந்தால் நமது நிலைமை இன்னும் பன்மடங்கு மோசமாகி விடுவது திண்ணம். ஒன்று கூறுகின்றேன். கேளுங்கள்! நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்' என்ற சமயம் தேயிலைத் தோட்டக் கூலி ஒருவன் எழுந்து,

'ஆமாஞ் சாமி! ஆனாக்க இந்தக் கங்காணிமாருக பண்ணுர அட்டூழியத்தைப் பொறுத்துக்கிட்டு அவங்களோடே ஒத்துமையாக எப்படிச் சாமி இருக்க முடியுங்க? அதுதானே சாமி கயிட்டமாருக்கு' என்றான். அங்கிருந்த மற்றக் கூலிகளும், 'ஆமாஞ்சாமி! அதுக்கு ஒரு முடிவு மொதல்லே கட்டிப்புட்டு அப்பற மத்ததைப் பாருங்கசாமி!' என்று கூக்குறலிட்டனர்.

'ஏழைக் கூலிச் சகோதரர்களே! அவர்களைச் சொல்லக் குற்றமில்லை. நமது வீரபுர சாம்ராஜ்யத்தில் இன்னும் எண்ணற்ற கோடி மக்கள் தங்கவும், உண்ணவும், உடுக்கவும், போதிய வசதி இருக்கிறது. அப்படி யிருக்க அங்கு உழைத்து உண்ண மனமற்று இங்கோடிவந்த உங்கள் குற்றத்திற்கு நீங்கள் கஷ்டப்பட்டுத்தானே ஆக வேண்டும்! இப்பொழுது என்றாலும், வீரபுர சாம்ராஜ்யம் அடிமைப்பட்டு விட்டது, அங்கு நடக்கும் அட்டூழியத்தைக் காணச் சகிக்கவில்லை; அதனால் இத் தீவிற் புகுந்தோம். என்று ஒரு சமாதானம் சொல்லித் திருப்தி யுறலாம். ஆனால், நீங்கள் இங்கு புகுந்த அக் காலமோ அங்கு சுதந்திரம் நிலவியகாலம். எவ்விதக் குறைவுமற்று சகலபோக பாக்கியங்களுடன் வாழ ஹேதுள்ள காலம்' என்றான் சுரேந்திரநாதன்.

இப்பொழுது, எல்லோருக்கும் தலைமையாயுள்ள கூலி ஒருவன் எழுந்து, 'சாமி! நாங்க என்ன பண்ணுவம்? கங்காணிமாருக சாயவேட்டியையும், சாயச்சேலையையுங் காட்டி எங்களை மயக்கிப் பிட்டாங்க! நல்ல சொவமா யிருக்கலாமிண்டு சொல்லிக் கூட்டிக்கிண்டு வந்தாங்க! ஆனாக்க நிக்க நெழலு இல்லை! படுக்கிறதுக்கு ஒரு பீத்தப்பாய்க்கி வழியில்லை! உங்கிறதுக்கு சுண்ணம்பரிசிச் சோத்தைவிட்டா வேறே கெதியில்லை! அதோடே மட்டுமின்னாக் குத்தமில்லையே! எங்க பொம்பள்ளைகளையும் கெடுக்கிறாங்க! நெத்திவேறுவை நெலத்திலே சொட்ட நாங்க பாடுபட்டுச் சம்பாதிக்கிற சல்லீலே காணிக்கைபோலே அந்தக் கங்காணிமாருக பிடுங்கிக்கிறாங்க! இப்பிடி இருக்க நாங்க எப்படியய்யா ஒத்துமையா யிருக்கிறது? ஊருக்குப் போறமின்னா விட மாட்டேங்கிறாக! தப்பிப் போறதுக்கோ கையிலே காசு பணங் கெடையாது!' என்றான்.



'இங்கு கூடியுள்ள எனது நாட்டு மக்களே! உங்களுக்குள் இவ்வாறு பிளவுற்றால் நீங்கள் க்ஷேமமுறுவ தெங்ஙனம்? கங்காணிமார்களே! ஏழைக் கூலி ஜனங்களை நல்ல முறையில் கண்காணித்து ஒற்றுமையா யிருங்கள். கூலி ஜனங்களே! கங்காணிமார்கள் இனி உங்கள் நன்மைக்காகப் பாடுபடுவார்கள். அவர்களுடன் ஒத்துழையுங்கள். ஒரு நாட்டில் பிறந்த மக்கள் தங்களுக்குள் சச்சரவிட்டாலும் சகோதரர்கள் என்பதை மறந்து எதிரிகளுக்கு இடங் கொடுத்து விடாதீர்கள்' என்றான் சுரேந்திரநாதன். எல்லோரும் வானம் இடியும் வண்ணம் கரகோஷம் செய்தனர். 'சகோதர சகோதரிகளே! நீங்கள் கரகோஷம் செய்வதால் நான் திருப்தி யடைய மாட்டேன். எல்லோரும் ஒரு முகமாக நின்று ஆகாயமே இடிந்து தலையில் வீழ்வதாக இருந்தாலும் பிளவுறாமல் நிற்பீர்களாயின் அப்பொழுதுதான் நான் திருப்தி யடைவேன்' என்றான். மீண்டும் கரகோஷம் நிலவியது. 'என் அன்பார்ந்த தேச மக்களே! இப்பொழுது நீங்கள் எல்லோரும் அமைதியாக இருப்பதை நோக்கினால், இனி அத் தீவில் நம் மக்களுக்கு அல்ல லில்லை என்பதற்கு அறிகுறிபோற் தோன்றுகிறது. இன்று அசைக்க முடியாதபடி அஸ்திவாரம் போட்டுவிட்டோம். இனி வரவர தினே தினே வேலை செய்து இத்தீவு மக்களுக்கு நற்புத்திப் புகட்டுவோம். நமது திறமையைக் காட்டுவோம். எல்லோருக்கும் வந்தனம்' என முடித்தான். அன்று கூட்டம் ஒருவாறு மங்களகரமாக முடிந்தது.

இவ்வாறாக, வலங்கைத்தீவில் நமது சுரேந்திரநாதன் சமத்துவ விதை விதைத்ததைக் கண்ட அத்தீவு மக்கள் ஒரு வேளை தங்களுக்கேதேனும் கெடுதல் விளையுமோ வென்றெண்ணி அஞ்சினர். சுரேந்திரநாதன் அநேக கூட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கூட்டுவித்து அங்குள்ள தன் நாட்டு மக்களின் தாங்கொணாத் துன்பத்தை நீக்க தன்னா லியன்ற அளவு தொண்டு புரிந்து வந்தான். அத் தீவு அரசாங்கத்தைப் பலபடி கண்டித்தான். இவனின் தீவிர முயற்சியைக் கண்டு அங்குள்ள வீரபுர சாம்ராஜ்ய மக்களே பயந்தனர். எந்த நிமிஷத்திலும் அரசாங்கம் அவனை அத்தீவை விட்டோட்டவோ, அன்றிக் கைது செய்யவோ முனையுமென்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு வினாடியும் எதிர் பார்த்துக்கொண்டே யிருந்தனர்.

ஆனால், அவன் கைது செய்யப்பட்டானா? அன்றி அத்தீவை விட்டோட்டப் பட்டானா? அவன் நிலை எப்படியாயிற்று? என்றவைகள் மேலே போகப்போக விளங்கு மாதலின் இங்கே கூறாது விடுத்தோம்.

ஒன்று கூற விழைகிறோம். இன்றைய உலகத்தில் ஒரு அரசாங்கம் நியாயமாகவோ நியாயமில்லாமலோ ஒருவனை நாட்டைவிட்டோட்ட சட்டபூர்வமாக அதிகாரம் பெற்றிருக்கிறது. இதனைக்

கூர்ந்து கவனித்தாலோ அன்றி ஆராயப் புகுந்தாலோ விந்தையாகவும் விபரீதமாகவும் முடியும். உதாரணமாக ஒரு ராஜப்பிரதிநிதியை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் ஒரு கற்புக்கரசிமேல் கண் வைத்துவிட்டால் அநேகமாக அவளை அடைவது முடியாத காரியமே யாகும். அப்பொழுதென் செய்வார் தெரியுமா? சட்ட மொன்றிருக்கிறது, அவருக்குத் துணையாக! உடனே பிரயோகிப்பார்! அவளை நாட்டைவிட்டுத் துரத்தி விடுவார்! இதுவும் இன்றைய அரசாங்கத்தின் கூற்றுக்கு ஒரு தெளிவான எடுத்துக் காட்டாகும். இதி லிருந்து நீதிக்கு ஆழக் குழி தோண்டி அழுந்தப் புதைத்துவிட்டு 'இம்' என்றால் சட்டம், 'ஏன்' என்றால் சட்டம் என்று சகலமும் சட்ட மயமாக்கி விட்டார்கள். சோதரிகளே! சோதரர்களே! நாம் இன்று எந்த உலகத்தில் வாழ்கின்றோமென்றால் நீதி உலகத்தி லல்ல! சட்ட உலகத்தி லென்பதை மறந்து விட வேண்டாம்! என் செய்வோம்! நமது நிலை அப்படியாகி விட்டது? இனி நமது கடமை என்ன? நம்மைப் பொறுத்த மட்டிலாவது நமது நாட்டை சட்ட உலகத்தி னின்று மீட்சி செய்ய முனைய வேண்டு மன்றோ!

(தொடரும்)

நீங்கள் நெடுநாளாக எதிர்பார்த்திருந்தது!
முன்னர் வாரப் பதிப்பாக யிருந்து
தாய் நாட்டிற்குத் தொண்டாற்றியது!

'வீர சக்தி'

இப்பொழுது மாதப் பதிப்பாக

சமுதாய, ராஜீய பொருளாதார, இலக்கிய, கலை வளர்ச்சி முதலியன பற்றிய ஆராய்ச்சி மிகுந்த கட்டுரை கதைகளோடும், கண்ணைக் கவரும் வனப்பு மிக்க சித்திரங்களோடும், வருகிற மே மதத்தில் வெளியாகிறது!

தனிப் பிரதி விலை அணு 1. வருட சந்தா ரூபா 1.

வெளி நாட்டு அன்பர்கள் நமக்கெழுதித் தெரிந்து கொள்ளலாம். நமக்கு ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை. நமது பழைய ஏஜண்டுகள் தேவையான பிரதிகளுக் கெழுதவும்.

விலாசம்: — **'வீர சக்தி' காரியாலயம்,**
நெ. 1, வீராச் செட்டி தெரு, பெரம்பூர் பாரெக்ஸ், சென்னை.

# மனைவியின் யுக்தி

[கா. தி. ஸ்ரீ.]

நடு நிசி. மணி பனிரெண்டும் அடித்து விட்டது. எங்கும் நிசப்தம். தூக்கமோ பிடிக்க வில்லை. மேஜையின்மீது என் முன் எரிந்து கொண் டிருக்கும் விளக்கும் நானுமேதான் ஒருவருக் கொருவர் துணை. என் சித்தம் எங்கெல்லாமோ பறந்துகொண் டிருந்தது. 'அட ராமனே! எத்தனை ஜகஜாலங்கள்—போடாத குட்டிக் கரணங்கள் (களைக் கூத்தாடிக்கூட கெட்டான் கேடு) அவ்வளவும் செய்தாய் விட்டது. ஒரு அற்ப விஷயத்தால் எத்தனை பேர்கள் கியாதி அடைகிறார்கள். எதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும்' என்று புலம்பியவாறே பெருமூச்சுடன் தலை நிமிர்ந்தேன்.

'ஹா, திடுக்கென்று என்னைத் தூக்கிவாரிட்டது. என் முன்னே தலைவிரி கோலமாய் மிகவும் கோபத்துடன் நின்ற ஓர் மாது....என் படபடப்பு அமரவே சற்று கூர்ந்த பார்வையால் அவள் என் சகதர்மினியே என அறிந்தேன். 'இதென்ன அநியாயம்—விளக்கையும் எரித்துக்கொண்டு தூக்கமும் கெட்டு—இதென்ன பாடு, கால் துட்டுக்கு சம்பாத்ய மில்லாவிடினும்........' போன்ற சொல்லம்பு அவள் வாயினின்றும் கொதித் தெழுந்தது.

முகஸ்துதியில் முகம் மலரும் பெண்களின் சீற்றம் எம்மட்டு என்று நினைத்துக்கொண்டு பின்வருமாறு சமாதானம் செய்ய லானேன். 'அடியே! இதோ பார். உலகத்திலே மனிதனாய்ப் பிறந்தால் பேர் வாங்க வேண்டும். திருவள்ளுவர்கூட 'தோன்றில் புகழொடு தோன்றுக' என்றுள்ளார். நானும் எத்தனையோ பேப்பர்களுக்கு எவ்வளவோ எழுதி எழுதி அனுப்பியாய் விட்டது. ஒன்றிலும் என் பெயர் காணவில்லை. அதுதான் பிரயாசைப் படுகிறேன். நீயோ கூச்சல் போடுகிறாய்.

'அதற்கு இதுதானா வழி. விடிய விடிய விளக்குப் போட்டுக் கொண்டு மண்டையையும் உடைத்துக்கொண்டு ஆடத் தெரியாமல் ஆடினால் தெருவின்மேல் என்ன குறை.'

'அப்படிச் சொல். அதுதான் உன்னிடம் யோஜனை கேட்பது'

'இந்தா—பாருங்கோ—எங்கள் மாமன் நான்காவதுகூடப் படிக்கவில்லை. அவர் பெயர் பிரமாதமாய் ஒரு புத்தகத்தில் போட்டு வந்து விட்டது.'

'உங்கள் மாமன் என்ன செய்தார்? எந்தப் பேப்பருக்கு எழுதினாராம்?'

'உங்களுக்குத்தான் தெரியுமே. எங்கள் அத்தைக்கு ரொம்ப நாளாய் பிள்ளை உண்டாகவே யில்லை. என்ன வெல்லாமோ மருந்து

கள் சாப்பிட்டாளாம். கடைசியில் ஒரு கம்பெனிக்கு எழுதி மருந்து வரவழைத்து சாப்பிட்டபின் வெங்கு பிறந்தானாம். அப்படியே எழுதி கம்பெனிக்கு அனுப்பிவிட்டார். அது உடனே அச்சடித்து ஒரு புஸ்தகமாய் வந்து விட்டதாம்.'

'பேஷ், நன்றாய்ச் சொன்னாய், நமக்குக் குழந்தை குட்டிகள் இல்லாவிட்டா லன்றோ அப்படிச் செய்யலாம். மருந்தின் அனுபவம் பார்க்க வேண்டாமா?'

'இதுதானா பிரமாதம், ஏதேனும் ஒரு சீக்கு என்றும் கடையிலே (மெடிகல் ஷாப்பிலே) வாங்கிச் சாப்பிட்டதாயும், குணமாய் விட்டதென்றும் சிலாகித்து எழுதிவிட்டால் போகிறது. மேலும், இன்றைக்குக்கூட ஒரு புத்தகத்தில் ஒரு மருந்து விளம்பரம் கண்டேன் என்று கூறி ஒரு கடிதத்தை மேஜைமேல் வைத்தாள்.

அதைப் படித்துப் பார்த்ததும் எனக்கு அளவிலா ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. என் சகதர்மினியின் யுக்திப்படியே என்ன வெல்லாமோ எழுதித் தபாலில் போட்டுவிட்டேன். அநேக நாட்கள் சென்றன. ஒரு நாள் இது விஷயமாய் எங்கள் இருவருக்கும் லடா மூண்டு கொண்டது. இருந்த போதிலும் இதில் நான் நிச்சயம் ஜயம் பெறுவேன் என்றே கூறினாள். அவள் வாக்கு மெய்த்தது. ஒரு 'புக்போஸ்டு' என் விலாசத்துக்கே வந்தது. அவசரத்துடன் உடைத்து ஆவலுடன் படித்தேன். ஆம், சந்தேகமில்லை. நான் முன்பார்வையிட்ட அதே விளம்பரந்தான். நூற்றுக் கணக்கான 'லட்டர்களும்' காணப்படுகின்றன.

## 'தசகண்ட ஜயத்துவஜம்'

ஒப்பற்ற ஔடதம்! உயர்ந்த முறை!!

அற்புதசக்தி! அளவிலா நற்சாக்ஷிகள்!!

இலங்கேஸ்வரனான ராவணன் அஷ்ட திக்கஜங்களை ஜயித்த போது தன் மார்பில் புகுந்த தந்தங்களைத் தறித்துவிட்டுப் பதிந்த முகப்புகளை இரத்தின மிழைத்து அலங்கரித்துக் கொண்டான். அவ்வளவு வன்மையும் வஜ்ஜிரம்போன்ற சரீரமும் எப்படிக் கிடைத்தது? நமது தசகண்ட ஜயத்துவஜமே காரணமாகும். ஒரு சமயம் தான் மிகுந்த பலாட்டியனாக விரும்பி பிர்மாவைக் குறித்து தவம் செய்ய, அவர்முன் தோன்றி விருப்பத்தை அறிந்து, கிடைத்தற்கரிய பச்சிலை மூலிகைகளையும், காண்பதற்கரிய மருந்து சரக்குகளையும் தாமே சேகரித்து லேகியமாக்கிக் கொடுத்து அனுக்கிரகம் செய்தார். அதை யுண்டு ஆனந்தங்கொண்டு ஜயக்கொடி நாட்டிய தசகண்டன் மாபெரும் வலிமைகொண்ட இந்த அமிருத பாகத்தை



ஏட்டில் எழுதி வைத்தான். இதைத் திரிலோக சஞ்சாரியான நாரத முனிவர் கண்டெடுத்து அகத்தீஸ்வரருக்கு வடமொழியில் சொல்ல அவர் அதை திராவிட பாஷையில் பத்துப் பாடல்களில் அமைத்தார். அப்படிப்பட்ட அபூர்வமான முறை மிகவும் அரிய பெரிய முயற்சியால் கிடைக்கப்பட்டு சிரமத்துடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

நீங்கள் எவ்வித நிலைமையிலும் இருந்த போதிலும் நாற்பதே நாளில் பூர்ண பலம் பெறுவீர்கள். பசி, தாகம், நித்திரை மூன்றையும் வெல்வீர்கள். விலை ரூபாய் ஐந்தே தான். தபால் சார்ஜ் பிரத்யேகம். எங்கும் எல்லா மெடிகல் ஸ்டோர்களிலும் கிடைக்கும். எமது டிரேட் மார்க் அரவக் கொடியைப் பார்த்து வாங்குங்கள்.

விலாசம்:— **தசகண்டன் மெடிகல் டிபோ**

நியூ பில்டிங் சிலோன் பஜார் தெரு, பம்பாய்.

பிராஞ்சுகள்:—கல்கத்தா, சென்னை, ரெங்கோன், கொழும்பு.

முக்கிய விஷயம் என்னுடைய லட்ட ரல்லவா. அதையே நாலைந்து தடவை திருப்பித் திருப்பி வாசித்தேன். மற்று மோர் முறை உரக்க.......

ஓர் அறிவாளி கூறுவது:— அனுப்புங்குளம்

தேதி....................

அன்பார்ந்த தசகண்டன் டிபோ அவர்களுக்கு, தாங்கள் லோகோபகாரமாய்ச் செய்திட்ட இணையிலா ஜயத்துவஜம் பரவி வரும்படி கடவுள் அருள் செய்வாராக. ரெங்கோன் குறுணை அரிசியே எங்கள் ஜீவாதாரமா யிருந்தும், அதிக நாள் உயிர்பெற்று வாழ்வதற்குத் தங்கள் துவஜத்தைக் கையாடுவது அத்யாவசியமே. ஆயுள், ஆரோக்யம், ஆண்மை முதலியன குன்றிக்கொண்டே வருதலால், தங்கள் ஔடதத்தைக் கையாண்டு வாயு பக்ஷணம் செய்து திடசரீரமும் ஆரோக்யமும் யௌவனமும் வன்மையும் அடைவதற்குச் சிறிதும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. இவைகளை நான் எனது அனுபவ பூர்வமாகச் சொல்லுகிறேன் என்பதில் யாதொரு தடையு மில்லை. இப்படிக்கு,

ஸ்ரீவத்ஸ பூஷணன்

அனுப்புங்குளம்.

நான் நினைத்த காரியம் ஜயம் பெறவே உற்சாகம் தலைகால் தெரியாமல் கூத்தாடத் தொடங்கியது. அடிக்கடி குஸ்திக்கு அழைத்துக்கொண் டிருந்த எனது தலையை அந்தச் சண்டாளலை கோபித்துச் சூடுபோட்டு விட்டது. அப்பொழுதே என்னை

யறியாது ஆட்கொண்ட சிறு துயிலும் பறந்தோடி விட்டது. அந்தோ! என்முன் கிடந்த அந்த மருந்து கேட்லாக் நாப்பத்தாறும் பக்கத்தில் எனது நற்சாக்ஷிப் பத்திரம் எப்படி! ஐயோ! அவ்வளவும் பொய்! கனவு! கனவு!

குறிப்பு:—அனுபவ மில்லாது செய்த குணங்கெட்ட மருந்துகளால் தான் ரேன்றித்தனமாய்ப் பொருளீட்டும் நிமித்தம், செய்யும் விளம்பரங்களையும் விமரிசனங்களையும் கண்டு விமோசனம் தேடப் போய் விபரீதங்களை உண்டாக்கிக் கொள்ளா திருத்தற் பொருட்டே இருசாரினர்க்கும் ஓர் நன்மொழி.


**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும் கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

**முத்துவிநாயகர் ஸ்டோர்,**
கல்லல் S. I. R. (இராமநாதபுரம் ஜில்லா.)

**லங்கா குரேஸாரி ஸ்டோர்,**
செட்டித் தெரு, கொளும்பு.

**தி. ஞானப்பிரகாசம்,**
122, மோகல் வீதி, ரங்கோன்.

**வி. சா. காசி செட்டியார்,**
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

**A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,**
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

**A. N. லெட்சுமணன் செட்டியார்,**
வலம்புரி. வலையபட்டி
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

**A. V. R. A. ADYCAPPA CHETTIYAR,**
Lalji Mansing Building, 1st Floor Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.




சென்னை, ஆர்ஸ் கிராமபோன் டாக்கீஸ், ஸ்ரீ. ராஜா சாண்டோவைக்கொண்டு தயாரிக்கும் 'விஷ்ணு லீலா' தமிழ்ப் படத்தில் ஒரு காட்சி. கம்சன் தேவகியைக் கொல்ல முயற்சிக்கும் கட்டம். கம்சனாக சுந்தர ராவும், தேவகியாக எம். எஸ். தேவசேனாவும் நடிக்கிறார்கள்.

# சினிமாவில் நடிக்க வேண்டுமா ?

[‘சினிமா உலகம்’ ஆசிரியர்: பி. எஸ். செட்டியார்]

**பீடிகை :**

எனக்கும் அந்த ஆசை இருந்தது. உங்களுக்கும் இருக்கலாம். அதிசயமான, அழகிய சினிமாக் காட்சிகளைக் காணும் யாருக்குத் தான் அந்த ஆசை உதிக்காது? அத்தகைய ஆசை இருக்குமானால் அடியில் வரும் நடிப்புப் பயிற்சிக் குறிப்புகளைப் படித்துப் பாருங்கள்.

முதலாவது ஒருவரும் தான் தோன்றித் தம்பிரான்களாய்த் தங்களைத் தாங்களே சினிமாவுக்குத் தகுதி வாய்ந்தவர்கள் என்று மனப்பால் குடிப்பதில் பயனில்லை; மற்றவர்களே அதை நிச்சயப் படுத்த வேண்டும்.

பின்னர் காமிரா முன் உங்கள் உருவம் செல்லுபடி யாகுமா? ஒலிக் கருவியில் உங்கள் குரல் தெளிவாகப் பதியுமா? இவற்றைச் சினிமா அனுபவ முடைய ஒருவரிடம் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

இம் மாதிரியான பீடிகைகள் எல்லாம் ஒருவாறு முடிந்த பிறகு எத்தகைய வேடங்களை நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கை வேடங்களிலா? செயற்கை வேடங்களிலா? அல்லது இரண்டிலுமா? முன்னதைக் காட்டிலும் பின்னது கஷ்டமானது; இரண்டும் என்றால் நீங்கள் ஓய் வொழிச்ச லின்றி வேலை செய்ய வேண்டும்.

சினிமாவில் நடிப்பது இப்படித்தான் என்று சில வார்த்தை களில் கூறுதல் அசாத்தியம். முகவெட்டும், கண்ணடிப்பும், புன் னகையும், அங்க அசைவுகளும், நடைநொடி பாவனைகளும் ஒன்றோ டொன்று போட்டி போட்டுக்கொண்டு, உணர்ச்சிகளை வெளிப் படுத்த வேண்டும். பொதுவாக நாம் நம்மை மறந்து, நடிக்கப் போகும் பாத்திரமாகவே மாறிவிட வேண்டும். இதுதான் சிறந்த வழி.

நீங்கள் ஏதாவது உத்தியோகத்தி லிருந்தால், அனுவசியமாக அதை விட்டுவிட்டுத் திண்டாட வேண்டாம். சினிமா நடிப்பு என் பது, ‘மலை கல்லி எலி பிடிப்பது’ போன்ற அத்தனைக் கஷ்டமான காரியம். மிகமிகப் பொறுமை வேண்டும். ஓயாது உழைக்க வேண்டும். சலியாத முயற்சியும், தளராத ஊக்கமும், சிரிப்பிற் கும், ஏளனத்திற்கும் அஞ்சாத திடச்சித்தமும் இருந்தா லொழிய வெற்றி பெற இயலாது.

கீழ்வரும் குறிப்புகள் உபயோகமானவை.



**முகஆட்சி :**

ஒரு கண்ணாடி முன் அமர்ந்து, உங்கள் இயற்கையான முக வடிவைச் சிறிது நேரம் உற்றுப் பாருங்கள். கண் பிறழாத பார்வை, அசைவற்ற சிலைபோல் இந்த நிலையில் சிறிதுநேரம் உட்கார்ந்திருக்க வேண்டும். அப்போது முகத்தில் உண்டாகும் சிறுசிறு நெளிவு



‘அம்பிகாபதி’யில் ஒரு ஹாஸ்யக் காட்சி (என். எஸ். கிருஷ்ணன்-ஜானகிராம்)

களையும், சுளிப்புகளையும் கவனிக்க வேண்டும். அவை நரம்புத் தளர்ச்சியால் ஏற்படுபவை. அவற்றை முதலாவது நீக்கிக்கொள்ளப் பாடுபட வேண்டும். முகத்தில் பல உணர்ச்சிகளையும் எழுதிக் காட்டு முன், அதிலுள்ள கோணல் கிறுக்குகளை மாற்றிக்கொள்வது அவசிய மல்லவா?

முகபாவ விலாசம் :

சினிமா நடிப்பில் மிகவும் முக்கியமானது முகபாவமே. ஆகவே, நடிப்பு மாணவர்கள் இதைப்பற்றி மிகவும் அக்கரையோடு



நியாம்பள்ளி நம் நாட்டில் ஒரு நல்ல நடிகர்.

'மேக்-கப்' வித்தையிலும் வல்லவர். தமது அழகான உருவத்தை எவ்வளவு கொடூரமாகச் செய்துகொண் டிருக்கிறார் பாருங்கள்! இத் தோற்றம் அவர் நடித்த 'உலக அதிசயம்' என்ற படத்தில் ஒன்று.

பயில வேண்டும். முதலாவதாகக் கண்ணாடிமுன் அமர்ந்து குறுநகை செய்யுங்கள். அக்குறுநகை சிறிது சிறிதாய்ப் பெருநகையாய் மாற வேண்டும். திடீரென்று கண்ணை அகல விரித்து, வாய் திறந்த ஆச்சரியப் பார்வையோடு நோக்குங்கள். பிறகு இப் பாவத்தைப்



பயத்தால் மிகுந்த ஆச்சர்யமாகச் செய்யுங்கள். இவ்வாச்சர்யம் வெறுப்புக் கலந்ததாக மாறட்டும்; சிறிது சிறிதாக நடுக்கத்தை முகத்தில் உண்டாக்கிக் கொள்ளுங்கள். மெல்ல உதடுகள் துடிக்கட்டும். கண்ணிமைகள் அடித்துக் கொள்ளட்டும். மெல்ல மெல்லப் புன்னகைக்கு இறக்கி விடுங்கள். இதையே மாற்றி மாற்றி மெதுவாகவும், வேகமாகவும் செய்து கொள்ளுங்கள். இவ்வப்பியாசத்தில் ஆறு உணர்ச்சி பாவங்கள் அடங்கி யுள்ளன. இவை யாவும் நன்கு தெளிவாகப் படவேண்டும். கண்களுக்கும், முகத்தின் தசைகளுக்கும் நல்ல பயிற்சி யளிக்க வேண்டும்.

பேச்சு :

பெரும்பான்மையான நடிகர்கள் பேசும்போது தங்கள் வாயிதழ்களை எவ்வாறு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை அறிவதில்லை. சிலர் ஒரே யடியாகத் தங்கள் உதடுகளை மூடிக் கொள்ளுகின்றனர். சிலர் ஒரே யடியாகத் திறந்து கொள்ளுகின்றனர். இது மிகவும் தப்பு. கண்ணாடிமுன் அமர்ந்து உயிர்மெய் எழுத்துக்களை ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லிப் பழக வேண்டும். பின்னர் வார்த்தைகள், அப்புறம் சம்பாஷணை. தவிர, அவரவர் முகவெட்டுக் கேற்ப, வாய் வெட்டும் காட்ட வேண்டும்.

நடை :

நடிப்பில் நடை மிகவும் முக்கியமானது. பல மாதிரி குணமுடைய மக்களின் நடைபாவனைகளை 'இமிடேஷன்' செய்து செய்து பழக வேண்டும்.

விழுதல் :

சினிமாவில் அடிக்கடி வெட்டப்பட்டு விழும் மரக் கட்டை போல் விழ வேண்டி நேருகிறது. சிறிது அப்பியாசத்தின்மேல், இம் மாதிரியான வீழ்ச்சியினால் காயம் படாமல் செய்துகொள்ள முடியும். முதலில் படுக்கை விரிப்பின்மேல் செய்து பழகி, பின்னர் தான் தரையில் பழக வேண்டும். முதலில் விறைப்பாக, முழங்கால் மண்டியிட்டு, தரை மட்டமாக விழுந்துப் பழக வேண்டும்.

பொது :

பொதுவாக, ஒவ்வொரு நாளும் சினிமாவுக்குப் போய், அக் கதையையும், அதன் நடிப்பு முறைகளையும் மனனம் செய்து கொண்டு, அம்மாதிரியெல்லாம் நடித்துப் பழகுவது மிகவும் நலம். இவ்வாறு பலரையும் பார்த்துப் பார்த்துக் காப்பி யடிப்பதால், உங்களுக் கென்றே ஒரு நடிப்பு முறை ஏற்படும். அதற்குப் பிறகு தான் நீங்கள் சினிமாவுக்கு லாயக்காவீர்கள்.



ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார் தாமே, எழுதிய 'மனோஹரா' தமிழ்ப் படத்தில் புருஷோத்தமனாகத் தோன்றியது. மறுபடியும் எங்கே படத்தில் காணோம்! இப்போது 'ராமலிங்க சுவாமிகள்' தமிழ்ப் படத்திற்குக் கதை - வசனம் எழுதிக்கொண் டிருக்கிறீர்களோ ?

# தென்னாடும், திரைப் படமும்

[வடசை-வாசகன்]

**தமிழ்** மொழி பழமை மிக்கது. தமிழ்நாடு தொன்மை மிக்குடைத்து. தமிழினைப் பற்றியும், தமிழரைப் பற்றியும் பலர் ப'ல திறப்படக் கூறுவர். அதனை ஈண்டு ஆராய்தல் இக்கட்டுரையின் நோக்க மன்று.

பண்டைத் தமிழர் நாடகக் கலைக்கு முக்கிய இட மளித்துள்ளனர். தமிழ் மொழியினை இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பாகுபாடு செய் திருப்பதே மேற்கூறிய கருத்தினை நிலை நிறுத்தும்.

மேற் குறித்த நாடக வுறுப்பின் ஓர் பகுதியே தற்பொழுது திரைப் படமாக நின்று நிலவுகிறது. திரைப் படத்திற்கும் நாடகத்திற்கும் பெரிதும் வேற்றுமை யுண்டு. எனினும், திரைப்படம் நாடகத்தை அடிப்படையாகக் கொண் டெழுந்தது என்பது யாவரும் ஒப்ப முடிந்த விஷயம். நாடகத்தைவிட அதிக வசதிகள் சினிமாவில் உண்டு. காட்டு சீன்கள் காண்பிக்க வேண்டு மென் றிருந்தால் திரையைத்தான் நாடக வரங்கில் காண்பிக்க வேண்டி யிருக்கிறது. சினிமாவில் காடொன்றினை அப்படியே படம் பிடிக்கலாம். இதனால் பார்ப்பவர்களை வசீகரித்துவிட முடிகிறது. இது ஓர் உதாரணம்.

'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்—அச்செல்வம்—செல்வத்து ளெல்லாந் தலை' என்பது பொய்யா மொழியாரின் கூற்று. எல்லாச் செல்வங்களையும்விடக் கேள்விச் செல்வம் மிக்க மேன்மையுடைத்து என்பது பொருள். உதாரணமாக ஒரு நாவலை எடுத்துக் கொள்வோம். ஒரு முறைக்கு மூன்று முறை அதனைப் படித்துப் பதிய வைக்கின்றோம். இதே கதையைப் பிற ரொருவர் சொல்லக் கேட்கு மிடத்து, அது மூன்று முறை ஊன்றிப் படித்ததைக் காட்டிலும் கூடுதல் மனத்திடையே பதிகின்றது. அதனை நாடக ரூபமாய் நேரிற் பார்க்கு மிடத்து, முன்னதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாய் மனத்திடையே பதிகின்றது. அப்பொழுதுதான் அக்கதையைப் பற்றியுள்ள முழு விவரங்களையும் நாம் மனத்திடையே அனுபவிக்கின்றோம்.

ஆயிரம் பிரசங்கங்களைவிட ஒரு நாடகம் (உயரிய முறையில்) பொது மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டவல்லதா யிருக்கு மென்பது பெரியார்களின் கூற்று. இக் கூற்றின் உண்மையை நாம் அனுபவத்திலும் பார்த்து வருகின்றோம். தேர்ச்சி பெற்ற நடிகர்கள் உண்மை உணர்ச்சியோடு (With real feelings) நடிக்கும் பொழுது பார்ப்போர் மெய் மறந்தே போய் விடுகிறார்கள். விஷமியின் (Villain) வேடம் புனைந்து கொடுஞ் செயல்கள் நாடகத்தில் நடிக்கப்படும்

பொழுது கூட்டத்தி லிருந்து சிலர், ‘அடே சண்டாளா, இம்மாதிரி அநியாயம் செய்யாதே’ என்று கூவுகின்றார்கள். நடப்பது நாடகந் தான், உண்மையாக அப்படி யொன்றும் நடக்கவில்லை என்பதை பார்ப்போர் மறந்து விடுகின்றனர். இதுதான் உண்மை நடிப்பின் லக்ஷணம். நாடகத்தின் நல் லமைப்பு.



இயற்கை இன்பம்

இத்தகைய உண்மை நடிப்பைத் தற்பொழுது நாடகமேடையி லாவது, திரைப்படத்திலாவது எதிர் பார்க்க முடியுமா வென்று கேட்குமிடத்து, சட்டென்று பதி லளிக்கச் சிறிது தயங்கத்தான்



வேண்டி யிருக்கிறது. மிகவும் குறைவு என்றே கூறலாம். வேலு நாயர், ஸ்திரீபார்ட் அனந்தநாராயண ஐயர் (இவ் விருவரும் நாடக மாடுதலை நிறுத்தி விட்டார்கள் என்று நினைக்கின்றேன்), நவாப்–ராஜமாணிக்கம் பிள்ளை, எம். எஸ். தமோதரராவ் முதலியவர்களது நடிப்பு மிகவும் போற்றத் தகுந்தனவே. தாமோதரராவ் மனோஹரன் என்றால், இன்றும் எங்களூர் நாடகக் கொட்டகையில் அமர்க்களந் தான். மேலும், தற்பொழுது, மதுரை பாலஷண்முகானந்த சபை யாரின் சொந்தக்காரர்களான டி. கே. சகோதரர்கள் நாடகக் கலைக்கு அருந்தொண்டாற்றி வருகின்றனர். எனினும், நம் தமிழ் நாட்டில் நடத்தப் பெற்று வரும் நாடகங்களின் எண்ணிக்கைக்கும் ‘நடிகர்’ என்ற வேஷத்தில் மேடைமீது காக்ஷி யளிக்கும் சங்கீதப் புலிகளின் எண்ணிக்கைக்கும் மேற்குறிப்பிட் டுள்ளவர்களின் தொகை மிகவும் குறைவே.

உண்மை நடிப்பிற்கு முக்கிய இட மளித்து விளங்கும், தமிழ்த் திரைப் படங்களும் இல்லை யென்று துணிவாய்க் கூறிவிட முடியாது. வேல் பிக்சர்ஸாரது ‘பட்டினத்தா’ரில் நடிக்கும் தண்டபாணி தேசிகரின் நடிப்பு போற்றத் தகுந்த தொன்று. ‘பக்க நந்தனா’ரில் ஸ்ரீமதி சுந்தராம்பாளின் நடிப்பும், இதயபூர்வமான பேச்சும், இறைவன் மாட்டு உழுவலன்பு ததும்பி வழியும் பாடல்களும் பார்ப்போரின் மனத்தைக் கொள்ளை கொள்வன. நந்தன் ஆண்டே என்று வேதியர் முன் குறை யிரந்து நிற்கும் காக்ஷி, கெஞ்சும் பாவனை இவை நடிப்பின் தனி லக்ஷணமாகக் காணப்படுகின் றன. ‘சிந்தாமணி’யில் அஸ்வத்தம்மாளின் நடிப்பும், ஒய். வி. ராவின் நடிப்பும் இயற்கை மணம் நிரம்பப் பெற்றிருந்ததால் (Natural) பொதுஜனங்களை மிகவும் கவர்ந்தன. இன்னும் எம். கே. ராதா, கே. பி. கேசவன் முதலியவர்களது நடிப்பும் போற்றுதற் குரியனவே.

‘நடிப்பு’ என்பது ஓர் தனிக் கலை. நமது வாழ்க்கையையே ஓர் நாடக வரங்கிற்கு ஒப்பிடலாம். நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நடிகர். ஒவ்வொருவரும் நமது வாழ்க்கை யரங்கில், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பாகத்தினை நடித்துக் காண்பிக்கின்றோம். நமக்குக் கோபம் வந்தால் கோபமாக நடிக்கின்றோம். விசனம் வருமிடத்துச் சோகம் காட்டுகின்றோம். காதல் நாடகம் வாழ்க்கை யிலேயே செய்து காட்டுகின்றோம். நம்மை யறியாமலேயே நாம் இவைகளை நடிக்கின்றோம். இந்த இயற்கைத் தன்மையை நாமாகப் பிறிடத்துத் தோன்றச் செய்யுமிடத்துத்தான் கஷ்டமாக விருக் கின்றது. இதனைப் பயில்வது சிரமம்.

தமிழ்ப் படங்களில் அறிந்தோ அறியாமலோ சங்கீதத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டு வருகின்றது. பாகவதர்களையும், சங்கீதப் புலிகளையும் படத்தில் புகுத்தினால்தான் பணம்வந்து சேரும் என்ற

எண்ணம் தமிழ்ப் பட முதலாளிகளிடையே குடியிருந்து வருகின்றது போலும், இத்தகைய காலம் மலையேறிவிட்டது. நடிப்பே பிரதானமாகக் கவனிக்கப் படுகிறது என்பதை தற்பொழுதுதான் படமுதலாளிகள் கிறிது உணர வாரம்பித்திருக்கிறார்கள் எனலாம். எனினும், இப்பொழுதும் சினிமா விளம்பரங்களில் 'கொஞ்சும் அஞ்சுக மொழியாள்....', 'கோகிலத் தொனி....', 'சங்கீத சண்டமாருத....' என்றெல்லாம் விளம்பரம் செய்யப்படுகிறது. இதன் அர்த்தம் என்ன என்று தெரியவில்லை. திரைப்படத்திற்குப் பாட்டும் வேண்டியதுதான். பாடல்களை இடமறிந்து, குறைவாய்ப் படத்தில் புகுத்தல் வேண்டும்.

இனி தற்கால தமிழ்ப்பட் டைரக்டர்களைப்பற்றி ஒரு சில கூறி கட்டுரையை முடிக்க முயல்வோம். தமிழ்ப் படத்தை டைரக்ட் செய்யும் டைரக்டர்கள் தமிழ் தெரிந்தவராய் இருத்தல் அவசியம். தமிழ் தெரிந்த டைரக்டர்களாயிருந்தால் சமயா சமயங்களில் நடிகர்களுக்குப் பாவரஸங்கள் சொல்லிக் கொடுக்க இயலும். கோபமாய்ப் பேச வேண்டிய இடத்தில் கோபமான பாவனைகள் காட்டப்படவேண்டும். கோபவார்த்தைகள் வாயிலிருந்து கிளம்புமிடத்து கோபப் பார்வை பார்ப்பதும் ஒன்றிருக்க வேண்டும். பாஷை தெரிந்த டைரக்டர்களுக்கே இக்குறையை அறிந்து கொள்ள முடியும். ஆகையால், தமிழ்ப் படங்களுக்குத் தமிழ் தெரிந்த டைரக்டர்களே தேவை. தற்போதய தமிழ்ப்பட டைரக்டர்களில் பெரும்பாலரும் தமிழ் தெரியாதவர்களே. மேலும், டைரக்டர்கள் ஒவ்வொரு பாவனையையும் தாமே நடிகர்களுக்கு நேரில் நடித்துக் காட்ட வேண்டும். டைரக்டரே ஒரு சிறந்த நடிகராயிருத்தல் வேண்டும். ஒரு படத்தை டைரக்ட் செய்யும் ஒருவர் அப்படத்தில் வரும் எல்லாப் பாகங்களையும் செவ்வனே நடிக்க வல்லவராயிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவர் சரியான டைரக்டராவர். தற்போதைய டைரக்டர்களைப்பற்றிக் கவனிக்குமிடத்து, அவர்களில் பெரும்பாலரும் மதுபானத்திற்கும், மன்மதபானத்திற்கும் அடிமைப் பட்டவர்களாய்க் காணப்படுகின்றனர்.

இதுவரை வெளிவந்துள்ள படங்களில் புராணப் படங்களின் எண்ணிக்கையே மிகவதிகம். புராணப் படங்களைப்பற்றிய கவலை போதும். எழுத்து வாசனையற்ற மௌடீக நடிகர்களையும், ஹாஸ்யத்திற்காகத் தொந்தி பெருத்த குண்டோதரன்களையும், ஆபாச ஹாஸ்யக் காக்ஷிகளையும், தப்பாமல் காட்டப்பெற்றுவரும் 'டர்பார்டான்சை'யும் இன்றுடன் நிறுத்துவோம். சமூகப் படங்களும், சரித்திரப் படங்களும் கிளம்ப வேண்டும். பொதுமக்களின் அறிவு வளர்ச்சிக்கேற்ற வழிகளில் திரைப்படத் தொழிலும் ஒன்று. நம் தாய்நாட்டுச் சினிமாக் கலையின் வளர்ச்சிக்காகப் பெரியார்கள் பல்லோர் பற்பல துறைகளில் பாடுபட்டு வருகின்றனர். விரைவில் இக் கலையானது, நம் தமிழ் நாட்டில், தற்போதைய நிலைமையைக் கடந்து முன்னணியிற் செல்லும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# 'சினிமா' சிண்டல்

[நாகன்]

## மறுபடியும் வருகிறார்!

மிஸ். தவமணி தேவி—இவரை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். மாடர்ன் தியேட்டர்ஸ் 'சதி-அகல்யா'வில் அகல்யாவாக நடித்தவர் தான். இலங்கையைச் சேர்ந்தவர். கண்ணியமான குடும்பத்தில் வந்தவர். சிலோன் ரேடியோவில் பாடிப் புகழ் பெற்றவர். இவர் தற்போது, சென்னை, லக்ஷ்மி சினிடோன் தயாரிக்கப் போகும் 'ச்யாம்-சுந்தர்' தமிழ்ப்படத்தில் ராதாவாக நடிக்கப் போகிறார். பொருத்தமான பாத்திரந்தான். இப்படம் கோலாப்பூர், ஹன்ஸ் பிக்சர்ஸ் ஸ்டுடியோவில் பிடிக்கப்படுமென்று தெரிகிறது.



## 'இன்பசாகரன்' ஆசிரியர்

'இன்பசாகரன்' நாடகத்திற்கும், 'இன்பசார' மாத்திரைக்கும் எனக்கு அடிக்கடி வித்தியாசம் தெரியாமல் மயக்க மேற்

படுவது வழக்கம். இரண்டையும் அடிக்கடிப் பார்க்கிறேன். பெயர்களும் பெரிதும் ஒத்திருக்கின்றன. 'இன்பசாகர' நாடகம் சென்னையில் பத்து வாரங்களுக்குமேல் நடந்து விட்டது. காரணம் கதை அமைப்பு, சம்பாஷணை, நடிப்பு, காட்சி ஜோடனைகள் அனைத்தும் சேர்ந்து, அந் நாடகத்தை ஒப்பற்றதாகச் செய்து விட்டன. ஆசிரியர்—ஸ்ரீ சி. ஏ. ஐயாமுத்துக்கும் இதனால் பெருமை. இந்த 'இன்பசாகர' நாடகம் மதுரை தேவிபாலவிநோத சங்கீத சபை நடிகர்களைக் கொண்டே, தமிழ்ப் படமாகத் தயாரிக்கப்போவது மகிழ்ச்சிகரமான செய்தி. இந்தப் பணியைச் சென்னை மகா லக்ஷ்மி ஸ்டுடியோஸ் முதலாளிகள் மேற்கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ 'அம்பிகாபதி'யில் அரசிளங்குமரி அமராவதியாக நடித்துப் புகழ் பெற்ற ஸ்ரீமதி எம். ஆர். சந்தான லக்ஷ்மியும் இப் படத்தில் நடிக்கப் போகிறார். மற்றொரு சமாசாரம். இதே 'இன்பசாகர'னை ஹிந்திப் படமாகவும் எடுக்கப் போகிறார்கள். மிஸ். ராம்பியாரி முதலிய வடநாட்டு நட்சத்திரங்கள் இந்த ஹிந்திப் படத்தில் தோன்றுவார்களென்று தெரிகிறது. தமிழ் நாட்டில் தயாராகும் முதல் ஹிந்திப் படம் இதுவே யாகும். இந்தப் படங்களிரண்டும் ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மியின் டைரக்டர் ஸ்ரீமான் கே. சுப்ரமண்யம் முயற்சியின் கனியாக விளங்கும் மோஷன் பிக்சர்ஸ் ஸ்டுடியோவில் தயாரிக்கப்படும். இப்போது ஒத்திகைகள் நடைபெற்று வருகின்றன.



## படத்தில் 'ஜீவக சிந்தாமணி'

பஞ்சகாவியங்களில் 'மணிமேகலை'யில் ஸ்ரீமதி ராஜீவி தோன்றப் போவதாகச் செய்தி வெளிவந்தது. ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளும் அதே கதையில் நடிக்கப் போவதாக வதந்தி யிருந்தது. 'சிலப்பதிகார'த்தைக் 'கோவலன்' என்ற பெயரில் இரண்டு 'கோவலன்கள்' முன்னரே வெளிவந்து விட்டன. மற்றொரு கோவலனைச் சேலம் ஏஞ்சல் பிலிம்ஸ் கொண்டு வரப் போவதாகத் தெரிகிறது. இப்போது புதிதாகத் தோன்றியுள்ள ஒரு பிலிம் கம்பெனி 'ஜீவக சிந்தாமணி'யைப் படமாக எடுக்க ஏற்பாடு செய்து வருவதாகக் கேள்வி. பஞ்சகாவியங்கள் படத்தில் வருவது நல்லது தான். ஆனால், அவைகள் சிறப்பாக வெளிவர வேண்டுமே!



## இப்போது எப்படி!

இந்தப் படத்திலுள்ள பாவையை நீங்கள் அறிவீர்கள். இந்திய நட்சத்திர மண்டலத்தில் இணையற்ற நடிகையாக விளங்கும் மிஸ். கோஹர். இவர் மனோகரமான தோற்றமுடையவர் இயற்கையான நடிப்பு வாய்ந்தவர். இத்தகைய அரிய நடிகைசென்ற சில வருஷங்களாக உடல் பருத்துத் தமது அழகான தோற்றத்தில் மாறுதலடைந்து வருவதாகப் படங்களிலிருந்து அறிந்தோம். அது கலா ரசிகர்களுக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. இப்போது இவர் ஆகார நியதியிலும், உடற் பயிற்சியிலும் சில முறைகளைக் கையாண்டு தமது தேகத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதாகக் கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைகிறோம். இந்த வழியை நமது தமிழ் நாட்டு நட்சத்திரங்களாகிய எம். எஸ். தேவசேனா, சபிதாதேவி, கே. ஆர். சாரதாம்பாள், பாய் சகோதரிகள் முதலியவர்கள் பின்பற்றினால் எவ்வளவு நன்றாக இருக்கும்!





மாஸ்டர். மோகனதாஸ் என்னும் இச் சிறுவன் இரண்டு நாய்களை வளர்க்கிறான். தெலுங்கு, தமிழ், இங்கிலீஷ் ஆகிய மூன்று பாஷைகளில் அவன் இடும் கட்டளைகளை இந்நாய்கள் உடனே நிறைவேற்றுகின்றன.



நாய்களும், அவற்றின் நண்பனும்

# பரத நாட்டியம்

## சமய சம்பந்தமான நர்த்தனம்

[ஸ்ரீமதி ருக்மணி தேவி]

**நாட்டியம்** என்பதற்கு நடனம் என்று அர்த்தம். பரதன் என்ற (தபஸ்வி) மஹரிஷியின் மூலமாக வந்ததால் இக் கலைக்குப் பரத நாட்டியம் என்ற பெயர் வழங்கலாயிற்று. பரதன் சிவபிரானிட மிருந்தே இக்கலையைப் பெற்றார். பரதனே பகவானுடைய ஓர் அம்சம்தான். ஹிந்து மதத்துக்கு ஆதாரமா யிருக்கும் நான்கு வேதங்களின் மகிமையை எல்லோரும் அறிவர்.

கலா நிபுணர்களுக்கு மிக ருசிகரமான விஷயம் யாதெனில் இந்த நடனமும், உண்மையில் மற்றோர் வேதமாக அமைந்துள்ளது தான். ஆனால் இவ்வேதம் லயம், சங்கீதம், சலனம் அல்லது நடை, அசைவு ஆகியவைகளின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதாகும். தெய்வீக உண்மைகளை நடன ரூபமாகக் காட்ட வேண்டுமென்று ஜனங்கள் பகவானைப் பிரார்த்தித்ததின் பேரில் சிவபெருமான் விரிவாகவும், பரந்த முறையிலும் மதாசார உண்மைகளை நாட்டிய ரூபமாக உபதேசித்தாராம்.

நடனம் எளிதில் யாவரும் அறியக் கூடியது. அழகே வடிவானது. கண்ணுக்குக் குளிர்ச்சியையும், செவிக்கு இனிமையையும் அளிப்பது. மனதுக்குச் சந்தோஷத்தை அளித்து ப்ரம்மானந்தமான உணர்ச்சியை உண்டுபண்ணுவது.

ஆதலால், நாட்டிய மென்பது பிரும்ம சிருஷ்டியின் அரிய பல ரகஸ்யங்களை நுட்பமான எளிய முறையில் யாவரும் கண்ணால் காணும் விதத்தில் காட்டுவதே யாகும். ஹிந்து மதானுபவ அர்த்தங்களை மிகவும் எளியது முதல் மகா சிக்கலான கடின உண்மைகள் வரை யாவற்றையும் விளக்கிக் காட்டிப், பார்ப்போரைப் பக்தி மார்க்கத்தில் இழுத்து, ஞானக்கண்ணைத் துலக்கிப் பேரானந்தத்துக்கிட்டுச் செல்வதாகும்.

உண்மைகளை நாம் அடிக்கடி கேட்கிறோம். படித்தும் தெரிந்து கொள்ளுகிறோம். ஆனால் பரத நாட்டியத்தில் நாம் இதே உண்மைகளைக் கண்ணால் நேரில் பார்க்கிறோம். கண்கூடாக நேரில் பார்த்துக் கல்வி பயில வேண்டு மென்று இக்காலத்தில் அடிக்கடி கூறப்பட்டு வரும் விஷயத்தை ஹிந்து மதம் தொடங்கியபோதே பரிபூரணமாகச் செய்து வைத்துவிட்டனர். உயரிய கல்லாபி விருத்தியைத் தேடும் ஒவ்வொருவருக்கும் மற்றக் கலைகளைப்போல் நாட்டியக்

கலையும் ஒரு அவசியமான கல்வியாகுமென்பதே என்னுடைய அபிப்பிராயம்.

பண்டைக்கால, சாஸ்திரீய நடனம் ஒரு நிரந்தர உருவுடையது. ஒரு நிரந்தர ஸத்யத்தைப் போதிப்பதாகும். அது என்றுமழியாத ஒரு சாசுவத உண்மையைக் கூறுவது. ஆனால், அது எக்காலத்திலும் ஓரளவு புதுமை வாய்ந்தது. அது அந்த மற்ற சிருஷ்டி அம்சமுடையது, மூலாதாரமானது. ஆகையால் அது மிகப் பழமையானதாயினும் மிகவும் நாகரிகமும் உள்ளதே யாகும். அது வெகு காலத்திய கலைதான். ஆனால், நிரந்தரமாய்ப் புதுமையுடனேயே இருந்து வருவதாகும்.

இக் கலை அதன் முறையிலும், அர்த்தத்திலும் காலந் தவறியதாய்விடாது. அந்தந்தக் காலத்திற்குத் தக்கபடி புதுமை நிரம்பியபடியிருக்குமாறு நடிப்பதே எனனுடைய லக்ஷியமாகும். புதுமைபோல் தோன்றினாலும் இன்று புதியதாய்த் தோன்றி நாளை புதுமை குன்றிவிடுவதல்ல. பார்ப்போர் உள்ளத்தை உருக்கிப் பரம்பொருளுடன் சகலமும் லயமாகும். இன்பத்தை ஓரளவு உண்டாக்குவதாக இருக்க வேண்டும். இவ்வித உயரிய தத்துவத்தையே நான் நாடி வருகிறேன்.


## முதல் தரமான
## உயர்ந்த சந்தனக்கட்டை

எங்களிடம் முதல்தரமான உயர்ந்த சந்தனக்கட்டையும், சந்தனத் தூளும், சந்தனச் சக்கையும், வேரும் கிடைக்கும். உலகத்திலேயே வாசனையில் சிறந்த முதல்தர சந்தனக்கட்டையை நாங்கள் வரவழைத்து வியாபாரம் செய்வதால், உயர்தர சந்தனக்கட்டை வேண்டியவர்கள் எங்களிடம் வந்து பார்த்து வாங்கவும். சில்லரையிலும் மொத்தத்திலும் கிடைக்கும்.

**பழனியாண்டவர் கம்பெனி,**
சந்தன வியாபாரம்,
**126c.** ஆதியப்ப நாய்க்கன் தெரு, சென்னை.


# 'காதலில் சாதல்'

[செங்கரி 'சேன்']

(சென்ற மாதத் தொடர்ச்சி)

## அத்தியாயம் 9

### தெய்வத்தின் திருவருள்

**வாயு வேகம்** மனோ வேகமாக வந்த மோட்டாரானது சாலையோரத்தில் நிற்கும் மோட்டாரைக் கண்டதும் சடக்கென்று நின்றது. 'ஸார்! பேர்வழிகள் இங்கேதா னிருக்க வேண்டும். தாமதம் செய்யாதீர்கள். அவர்கள் எங்குப் போயிருக்க வேண்டும்!' என்று கூறிக்கொண்டே அவசரமாக இறங்கினாள் ஜம்னாபாய். அவருக்குப் பின் இன்ஸ்பெக்டர் நாராயணசாமி நாயுடு இறங்கினார். இன்னும் நான்கு போலீஸ் ஜவான்கள் இறங்கினர். 'இதோ இந்த ஒத்தடிப் பாதையில் புதிய அடிகள் இருக்கின்றன. இந்தப் பக்கமாய்த்தான் சென்றிருக்க வேண்டுமென்று கூறிக்கொண்டே இன்ஸ்பெக்டர் செல்ல, மற்றவர்கள் அவரைப் பின்தொடர்ந்து சென்றனர்.

'கொலை! கொலை!! பாவிப் பயல்கள் வனஜாவைக் கொன்றுவிட்டார்கள். இன்ஸ்பெக்டர் ஸார்! அதோ பாருங்கள் போலிச்சாமியும் பொன்னுசாமியும் ஒரு குழியை மூடிக்கொண் டிருக்கிறார்கள். ஓடுங்கள்! ஓடுங்கள்!! ஓடுங்கள்!!!' என்று கதறினாள் ஜம்னாபாய். அவளது கூறிய கண்களுக்கு அந்தக் காக்ஷி பட்டது தெய்வத்தின் திருவருளென்றே நிச்சயமாய்ச் சொல்ல வேண்டும்.

செந்தலை மனிதர்கள் ஓடி வருவதையும் ஜம்னாவின் குரலின் ஒலியையும் கேட்ட கொலை பாதகர்கள் திடுக்கிட்டனர். ஆனால், மறு நிமிடம் தன்னிடமிருந்த கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டான் போலிச்சாமியார். அவனிடமுள்ள துப்பாக்கியைக் கண்ட போலீஸார் சற்று பின் வாங்கினார்கள். ஆனால், நாராயணசாமி நாயுடு இடத்திலா அவர்கள் பாக்ஷா பலிக்கும்? இவர்களைப்போல் எத்தனையோ போக்கிரிகளை அவர் 'டிரில்' வாங்கி யிருக்கிறார்.

'பொன்னுச்சாமி! நமது அந்தியகாலம் சமீபித்து விட்டது. இவர்களிடமிருந்து நாம் தப்ப முடியாது. எப்படியும் நமது தலை, தூக்கு மரத்தில் தொங்கியே தீரும். இவர்களிடம் அகப்பட்டு இறப்பதைவிட நம் கையாலே நாம் இறப்பது மேலல்லவா? என்ன சொல்லுகிறாய்? சீக்கிரம் சொல்!' என்றான் போலிச்சாமியார். பொன்னுச்சாமி உலகையே மறந்து ஓர் மரம்போல் அசைவற்று

நின்றான். மறு நிமிடம் தன் கைத்துப்பாக்கியைத் தன் மார்புக்கு நேராகப் பிடித்து குதிரை அழுத்தினான். 'படீர்' என்ற சப்தம். அடுத்த வினாடியே உயிரற்று அவன் தரையில் சாய்ந்தான். போலீசாரும் பொன்னுசாமியின் கைகளுக்கு இரும்புக் காப்பைப் போட்டனர். புத்திசாலியான ஜம்னா தெய்வத்தின் திருவருளால் வனஜாவை அக்குழியி லிருந்து எடுத்தாள். குற்றுயிருடன் அவள் கிடந்தாள்.

சேலத்தை நோக்கி கணவாயில் நின்றுகொண் டிருந்த இரு மோட்டார்களும் பறந்தன. ஆஸ்பத்திரியிலே வனஜா குணமடைந்தாள். போலிச்சாமியாரின் சவம் பரிசோதனை நடந்தது. சாமியாரின் பொய்த் தாடியும், மீசையும் கசாயமும் அகற்றப்படவே போலிச் சாமியார்தான் சீனிவாசனால் கொல்லப் பட்டவ னென்று கருதப்பட்ட இராஜசேகர னென்று தெரிய வந்தது. அப்படியானால் உண்மையில் கொலை செய்யப்பட்டு இறந்தது யார்? சீனிவாஸன் தூக்கிடப்பட்டது நியாயந்தானா?

## அத்தியாயம் 10

### இன்பசாகரம்

'அக்கா! மந்திரி யிடத்தி லிருந்து உனக்கு அடிக்கடி கடிதம் வருகிறதே. நீயும் அடிக்கடி மந்திரிக்குக் கடிதம் எழுதவும் அவரை நேரில் சந்திப்பதின் மர்மமும்தா னென்ன? அக்கா! நமது பர்த்தா இறந்தும் இன்னும் உன் கழுத்தில் மாங்கல்ய மிருக்கிறதே! உன்னை நானோர் மர்மப் பெண்ணாகவே கருதுகிறேன். என் சந்தேகங்களை யெல்லாம் தீர்த்தால்தான் நான் பூரண குண மடைவேன்' என்று படுக்கையில் படுத்துக்கொண் டிருக்கும் வனஜா தன்னருகே உட்கார்ந்துகொண்டு பத்திரிகை வாசித்துக்கொண் டிருந்த ஜம்னாபாயைக் கேட்டாள்.

'எனன்பே! உன்னிடத்தில் மறைத்து வைக்கக்கூடிய காரியம் ஒன்றும் கிடையாது. ஆனால், சில காரியங்களை மிகவும் ரகஸ்யமாய் வைத்திருக்க வேண்டி யிருந்தது. இனி உனக்கு அவைகளைப்பற்றிக் கூறுவதில் ஆக்ஷேபணை கிடையாது. உன் உடம்பு நல்லாகட்டுமம்மா! அதுவரையில் பேசாம லிரு என் பிரிய வனஜா!' என்று கூறினாள் ஜம்னாபாய்.

வனஜா :—'அக்கா! எனக்கு நீதான் வைத்தியர். நீதான் தாய். நீ தான் தகப்பன். எல்லாம் நீ தான். என் வியாதிக்கு மருந்து என் சந்தேக நிவர்த்தியே. என் பிரிய அக்காள்! இவ்வேழையின் மேல், உனக்கு-உன்னை தஞ்ச மென்று அண்டிய இவ்வடிமையின்



மேல் உனக்கு அன்பு இல்லையா?' என்று கூறி கண்ணீர் வடித்தாள். அதைக் கண்டு சகிக்காத ஜம்னாபாய் 'வனஜா! நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேள். அதாவது நமது பர்த்தாவிற்கு முக்கியமான ஆப்த நண்பனின் பெயர் புருஷோத்தமன். அவன்தான் பெரும்பாலும் எங்களுக்கு ஒத்தாசை புரிந்தவன். அவனையும் நமது பர்த்தாவையும் ஒழித்துவிட எண்ணங் கொண்டான் இராஜசேகரன். நாங்கள் இந்த ஊருக்கு வந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் புருஷோத்தமன் ஏதோ காரியார்த்தமாகச் சென்னைக்குச் சென்றான். 18—9—37-இல் புருஷோத்தமனை இரவு மெயிலில் புறப்பட்டு வரும்படியாக நமது பர்த்தா தந்தி கொடுத்ததுபோல் இரகசியமாக இராஜசேகரன் அவனுக்கு ஓர் தந்தி கொடுத்தான். மெயிலில் வந்த புருஷோத்தமனை சண்முகசுந்தரம் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று அழைத்து வந்தான். காபியில் மயக்க மருந்தைக் கலந்து கொடுக்கவே, பிரக்ஞையற்று விழுந்த புருஷோத்தமனை மாடியிலுள்ள ஓர் அறையில் அடைத்து வைத்தான் சண்முகசுந்தரம். அப்பொழுது, அதாவது புருஷோத்தமன் வருவதற்கு முன்னாடியே தந்திரமாக நமது பர்த்தாவை பிராந்திக் கடைக்கு அழைத்துச் சென்று, குடித்துப் பழக்கமில்லா அவரை மிதமாகக் குடிக்கும்படி செய்தான். தன்னிலை மறந்து இருக்கும் நமது பர்த்தாவை அழைத்துக்கொண்டு சென்றான் இராஜசேகரன். அறையிலே அடைத்துக் கிடக்கும் புருஷோத்தமனை, இராஜசேகரனும் சண்முகசுந்தரமும் சேர்ந்து கொலை செய்துவிட்டார்கள். ஆகவே, உண்மையில் இறந்தது புருஷோத்தமன். நமது வீட்டி லிருந்து திருட்டுத்தனமாய் நமது பர்த்தாவின் பெயர் செதுக்கப்பட்ட கத்தி யொன்றை ஏற்கெனவே அபகரித்துச் சென்று விட்டான் இராஜசேகரன். அந்தக் கத்தியைப் புருஷோத்தமனின் இரத்தத்தில் தோய்த்து அதனால் நாளைந்து இடங்களில் அவன் தேகத்தில் குத்தி, அதை நமது பர்த்தாவின் கையில் கொடுத்து, மேலும் அவரைச் சவமாய் இரத்தத்தில் கிடக்கும் புருஷோத்தமனின் மேல் தள்ளி அவர் மேலெல்லாம் இரத்தம் படும்படி செய்து வெளியேயும் அனுப்பிவிட்டார்கள். தட்டுத் தடுமாறித் தன் நினைவு இல்லாதபடி நமது பர்த்தா வீட்டுக்கு வந்தார். அவரின் நிலைமையைக் கண்டதும் நான் செய்வதின்ன தென்று தோன்றாமல் நின்றேன். அவரும் பேசாமல் பைத்தியம் பிடித்தவரைப்போல் நின்றார். அதற்குள் போலீசும் வந்து நிலைமையை அறிந்து அவரை 'அரஸ்ட்' செய்துகொண்டு போயினர். ஆனால், நமது பர்த்தா கொலை செய்திருக்கவே மாட்டாரென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். மற்றும் இராஜசேகரன்மேல் அவருக்கு எள்ளளவும் துவேஷம் கிடையாது. அந்தப் போட்டோபடம் விஷயம் கோர்ட்டிலே விசாரணை அன்றுதான் தெரிந்தது. இவைகளை யெல்லாம் நான் ஆர அமர யோசித்ததில் எல்லா விஷயங்

களிலும் சந்தேகமே தோன்றின. நமது பர்த்தா தண்டிக்கப் படுவது அவசியமென்று என் புத்தியில் பட்டதால் தான் நான் சும்மா இருந்தேன். ஏனெனில், அந்த மரண தண்டனையினால்தான் நமக்கு நன்மை ஏற்பட்டது....' என்று சொல்லுகையில் வனஜா குறுக்கிட்டு 'அக்காள்! நீங்கள் செய்ததுதான் ரொம்ப அக்ரமம். நமது பர்த்தாவின் மரண தண்டனையினால் நமக்கென்ன அநுகூலம். விதவையானதுதான் அநுகூலம் போலும்!' என்று கூறினாள்.

'வனஜா! நான் முன்னமே என்ன சொன்னேன்? நான் சொல்லுவதைக் கவனித்துக் கேள். குறுக்கிடாதே. உன் சந்தேகங்களைப் பின்னால் கேள். பதில் சொல்லுகிறேன்' என்றாள் ஜம்னாபாய்.

'என்மேல் தப்பித மக்கா! நான் பொறுமையுடன் கேட்கிறேன். சொல்!' என்றாள் வனஜா.

மறுபடியும் சொல்ல ஆரம்பித்தாள் ஜம்னாபாய். 'குறிப்பிட்ட தேதியில் நமது பர்த்தாவைத் தூக்கிலிட்டு விட்டதாகப் பேப்பர்களில் பிரசுரம் செய்யப்பட்டிருந்தது. என்மேல் அளவற்ற ஆசை கொண்ட இராஜசேகரன் எங்கே போயிருப்பானென்று தான் தெரியவில்லை. அவன் எண்ணமெல்லாம் புருஷோத்தமனையும் நமது பர்த்தாவையும் கொன்றுவிட்டால், பின் நான் அவனை மணந்து கொள்வேனென்பதே. அதன்படியே காரியம் நடந்தேறியது. நமது பர்த்தா தூக்கிலிடப்பட்டதாகப் பேப்பர்களில் பிரசுரமானதை அறிந்ததும், எப்படியும் ராஜசேகரன் என்னைத் தேடி வருவானென்று எனக்குத் தெரியும். மற்றும் அவனிடமிருந்த பொன்னுசாமி என்னிடம் வேலைக்கு வந்தவுடன், தன் பெயரை மாற்றிச் சொன்னான். பொன்னுச்சாமியால் எனக்கு அநுகூலமேற்படுமென்று கருதியே அவனை வேலைக்கு அமர்த்திக் கொண்டேன். சந்தர்ப்பங்களிலே அவனிடம் நான் ராஜசேகரன்மேல் காதல் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தேன். அவன் என்னிடத்தில் சில சமயத்தில் பேசியதிலிருந்து ராஜசேகரன் உயிருடன் இருக்கிறானென்றும் அவன் இருக்குமிடம் இவனுக்குத் தெரியுமென்றும் நிச்சயமாய்த் தெரிந்துகொண்டேன்.

போலிச்சாமியார் நம் வீட்டில் கால் வைத்ததுமே எனக்குக் கொஞ்சம் சந்தேகந்தான். ஆயினும், நான் நிச்சயமாய் அந்தப் போலிச்சாமியாரை இராஜசேகரனென்று நினைக்கவேயில்லை. அவர் ஜோசியம் சொன்னதிலிருந்து என் சந்தேகம் கொஞ்சம் வலுத்தது. உனக்கு வந்த தந்தியை நான் வாசித்தவுடன் உண்மையென்று தான் நம்பி உன்னை சண்முகசுந்தரத்துடன் அனுப்பினேன். ஆனால், வீட்டிலிருந்த சாமியார் மறையவே எனக்குச் சந்தேகமுதித்தது. தரையிலே கிடந்த அந்தத் தந்தி பாரத்தைத் தேடியும் அகப்படாமல்



போகவே நேராகத் தபாலாபீசுக்குச் சென்று எனக்கு ஏதாவது தந்தி வந்ததாவென்று விசாரித்ததில் அன்றைய தினத்தில் எனக்கு யாதொரு விதமான தந்தியும் வரவில்லையென்றும், நமக்கு வந்த தந்தி பொய்த் தந்தியென்றும், அது போலிச்சாமியாரின் ஏற்பாடென்றும் தெரிய வந்தது. ஆகவே, உனக்கு ஆபத்தை உண்டு பண்ணவே அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்களென்று அறிந்ததும், நடந்ததை இன்ஸ்பெக்டர் நாராயணசாமி நாயுடுவிடம் சொல்லி அவரையும் அழைத்துக்கொண்டு வந்தேன். கண்ணே! வனஜா! அப்பாவிகள் உன்னை உயிருடனே குழியில் புதைத்து விட்டார்கள். கடவுள்தான் என்னை வேகமாகத் தள்ளிக்கொண்டு வந்து உன்னைக் காப்பாற்றினார். நீ பிழைத்தது அந்த முருகன் செயல்தான். பிரேத விசாரணையில் போலிச்சாமியாரே இராஜசேகரனென்று தெரிய வந்தது. நான் சொன்ன விஷயங்களைச் சண்முகசுந்தரமும் ஒப்புக் கொண்டான்' என்றாள் ஜம்னாபாய்.

'அக்காள்! அப்படியானால் நமது பர்த்தா அனியாயமாகத் தானே தண்டிக்கப் பட்டார். இந்தக் கலிகாலத்திலே அதர்மமே தலைதூக்கி நிற்கிறது. ஆனால், பகவானருளால் கொலைக்காரன் மனைவிகளென்ற பெயர் நம்மைவிட்டு இனி நீங்கி விடுமல்லவா? அத்தான்! அத்தான்!!' என்று அவரை நினைத்துக் கண்ணீர் விட்டாள் வனஜா.

'வனஜா! ஏனம்மா அழுகிறாய்! கடவுளை நம்பினோர் கைவிடப் படாரென்பது திண்ணம். எப்பவும் லோகத்திலே அக்ரமம் செய்கிறவர்கள் அழிந்தே போவார்களென்பது நிச்சயம். உனக்கு ஒரு சந்தோஷகரமான சங்கதி சொல்லப் போகிறேன். அதாவது உனக்கு மறுபடியும் கலியாணம் செய்து வைக்கப் போகிறேன். அதற்கு நீ சம்மதிக்க வேண்டும். என்ன சொல்லுகிறாய்?' என்றாள் ஜம்னாபாய்.

'கேலி செய்ய இதுதானா அக்கா சமயம். நிரபராதியான நமது பர்த்தா தண்டிக்கப் பட்டாரே என்ற கவலைதான் எனக்கு. என்ன செய்தும் என்ன பிரயோஜனம்? மாண்டவர் மீண்டும் வருவாரோ?' என்றான் வனஜா.

'மாண்டவர் மீண்டு வரமாட்டார்தானம்மா! ஆனால், மாண்டதாகக் கருதப்பட்டவர் மீண்டும் வருவதில் ஆச்சரியமென்ன இருக்கிறது!' என்றாள் ஜம்னா.

'அக்கா! அக்கா!! என்ன சொன்னாய்? நீ சொல்லுவது ஆச்சரியமாயிருக்கிறதே. என்னைக் கலியாணம் செய்துகொள்ளச் சொல்லுகிறாய்! மாண்டதாகக் கருதப்பட்டவர் மீண்டும் வருவதாகச் சொல்லுகிறாய்! எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்போலிருக்கிறதே!' என்று கூறிப் படுக்கையைவிட்டு எழுந்து உட்கார்ந்து ஜம்னாவின் தோளின்மேல் தலையைச் சாய்த்தாள்.

'வனஜா! என் கழுத்தில் மாங்கல்யம் இன்னும் இருப்பதைப் பற்றி நீ பற்பலவாறு நினைத்திருக்கலாம். நான் காங்கிரஸ் மந்திரியைக் காண அடிக்கடி சென்றதைப்பற்றி ஜனங்கள் தப்பபிப்ராயம் கொண்டார்கள். முன்னே இருந்த மந்திரிகளைப் போலல்ல இப்பொழுதுள்ள காங்கிரஸ் மந்திரிகள். இவர்கள் சுயநலக்காரர்களல்ல. ஏழைகளின் பொருட்டு உண்மையாகவே பாடுபடுபவர்கள். அதிலும் முதல் மந்திரியானவர் ஓர் தியாக புருஷர். ஏழைகளுக்கு அவர் ஓர் தாய். நமது பர்த்தாவிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டவுடன் நான் முதல் மந்திரியிடம் சென்று உண்மையான விஷயங்களை உள்ளது உள்ளபடி. அவரிடத்தில் சொல்லி குறிப்பிட்ட தேதியில் நமது பர்த்தாவைத் தூக்கிலிடப்பட்டதாகப் பேப்பரில் மாத்திரம் பிரசுரம் செய்யும்படியாகவும், ஆனால் அந்தத் தேதியிலிருந்து மூன்று மாத காலம்வரை நமது பர்த்தாவை ரகசியமாகச் சிறையிலேயே உயிருடன் வைத்திருந்தால் நான் உண்மைக் குற்றவாளியை நிச்சயமாகப் பிடித்துத் தருவதாகக் கூறினேன். அதற்கு வேண்டிய காரணங்களையும் கூறவே அதற்குச் சம்மதித்து 'சீனிவாஸனை தூக்கிலிட வேண்டாம். மறு உத்தரவு வரையில் அவனை சிறையில் ரகசியமாக வைத்திருக்கவும். ஆனால், ஜட்ஜ்மெண்டில் குறிப்பிட்ட தேதியில் அவனைத் தூக்கிலிட்டதாகமட்டும் பேப்பர்களுக்கு அறிவித்து விடவும்' என்று ஓர் உத்தரவை ஜட்ஜுக்கு அனுப்பினார். அதன் பிரகாரமே பொய்யாகப் பேப்பர்களில் நமது பர்த்தா தூக்கிலிடப்பட்டதாகப் பிரசுரமாயிருந்தது. அதை நம்பித்தான் இராஜசேகரனும் சாமியார் வேஷத்துடன் நம்மைக் காண வந்தான். ஆனால், அதுவரையில் அவன் எங்கிருந்தானென்று மட்டிலும் எனக்குத் தெரியாது' என்று கூறி வனஜாவின் முகத்தை உற்று நோக்கினாள் ஜம்னாபாய்.

அதைக் கேட்ட வனஜா கட்டிலைவிட்டு இறங்கி அவளின் தோளின்மேலே கையை வைத்து 'அக்காள்! அப்படியானால் நமது பர்த்தா தூக்கிலிடப்படவில்லையா! அவரெங்கே! அவரெங்கே!!' என்று ஆத்திரத்துடனும் ஆவலுடனும் கேட்டாள். 'அவர் வர இன்னும் ஒரு வார காலமாகும், இந்த விஷயமெல்லாம் ஜட்ஜுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. மந்திரியிடத்திலும் சொல்லியிருக்கிறேன். அவர் இப்பொழுது சேலம் சென்ட்ரல் ஜெயிலிலிருக்கிறார்' என்று கூறினாள்.

'எம்பிரானின் கருணையே கருணை! இவ்வளவு கஷ்டங்களுக்கும் நான் உள்ளாகியும் அவர் வந்ததும் என்னை ஏற்றுக் கொள்வாரோ மாட்டாரோ? அவர் மனத்தை அக்காள்! நீதான் திருப்பவேண்டும்' என்றாள் வனஜா.

'வனஜா! பயப்படாதே! அவர் அவசியம் உன்னை ஏற்றுக் கொள்ளும்படி நான் செய்கிறேன். அவர் உன்னை ஏற்றுக் கொள்ளா



விட்டால் என்னை நிராகரித்தது மாதிரி. அவர் வந்தவுடன் அவரை உன்னிடம் ஒப்பித்துவிட்டு நான் என் தகப்பனார் வீட்டுக்குப் போகப் போகிறேன்' என்று கூறினாள் ஜம்னாபாய்.

* * *

இராஜசேகரன் இறந்த பதினைந்தாம் நாள் சீனிவாஸன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டான். தான் பிழைத்தது ஜம்னாபாயின் முயற்சிகளாலே என்பதை அறிந்ததும் அவளைத் தெய்வமாகக் கருதி முன்னைவிட அவளிடம் அன்பு பாராட்ட ஆரம்பித்தான். ஜம்னாபாயின் விருப்பத்தின்படியே வனஜாவை ஏற்றுக் கொண்டான்.

வனஜா, தன் தகப்பனாருக்கு ஒரே பெண்ணானதலால் அவளுக்கே தன் தந்தையின் சொத்து பூராவும் கிடைத்து விட்டது. ரிடையர்ட் சப்ஜட்ஜ் பட்டாபிராம முதலியாரும் சென்றதைப்பற்றிச் சிந்திக்காமல் தம் மகளுக்குச் சென்னையில் ஒரு பங்களா வாங்கிக் கொடுத்தது மன்னியில் ரொக்கமாக சீனிவாஸனுக்கு ஐம்பதினாயிரம் ரூபாயும் கொடுத்தார்.

பத்தாவது மாதத்திலே ஜம்னாபாய்க்குத் தங்க விக்ரஹம் போன்ற ஓர் ஆண் குழந்தை பிறந்தது. 'புருஷோத்தமன்' என்ற பெயரையே வைத்தாள் ஜம்னாபாய். குழந்தைக்குத் தன் தாயைக் காட்டிலும் வனஜாவினிடத்திலேதான் அன்பு அதிகமாயிருந்தது.

அந்தமான் தீவிலே பொன்னுச்சாமி என்கிற சண்முக சுந்தரம் கடவுளைக் குறித்து கண்ணீர்விட்டுக் கொண்டும், விதியை நினைத்து அவதிப் பட்டுக்கொண்டும் இருந்தான். அவன் மரணபரியந்தம் அங்கேயே இருக்க வேண்டியதுதான்.

முற்றிற்று.


## விளம்பர விகிதம்

| | |
|---|---|
| தடவை 1-க்கு ஒரு பக்கத்திற்கு | ரூ. 20. |
| ,, ,, ½ பக்கத்திற்கு | ரூ. 12. |

நீண்டகால விளம்பரங்களுக்கும், அட்டை விளம்பரத்திற்கும் மானேஜருக்கு எழுதவும். விளம்பரத் தொகையை முன் பணமாகவே அனுப்ப வேண்டும்.

மானேஜர்,

'தமிழரசு'

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# என் ஆம்படையாள் வியாபாரம்

[ குமாரன் ]

('ஏண்டாப்பா! ஒன் ஆம்படையாளைப்பத்தி எழுதறத்துக்கு நோக்கு வெக்கமா யில்லியோடா!........'என்றாள் பாட்டி. 'இந்தக் காலத்திலேகூட அப்படி வெக்கப்பட்டுண்டு பிராணனை விடறவா ஆராவதுண்டோ?' என்றேன் நான். 'என்ன காலம்டா அப்பா இது! கலி முத்தரான்னது நன்னாத்தான் தெரிகிறது' என்றாள் பாட்டி.)

கோடை காலத்திலே ஒரு தினம். ஸ்நான மெல்லாம் காலையிலேயே ஆகிவிட்டது. ஸ்நானத்திற்கு அடுத்த பானம் (காப்பி) சரியாய் 10-10-க்குத்தான் கிடைத்தது. என்ன செய்வது ஆரம்பத்திலே நான் செய்துகொண் டிருந்த அதிகார மெல்லாம் இப்போ எங்கே முடிகிறது? நான் அவளைச் சண்டை போட்டதுபோக இப்போ அவள்தான் என்னைச் சதா பிடுங்கித் தின்றுகொண் டிருக்கிறாள். இதற்கெல்லாம் காரணம் அவள் ஒரு கால் டெஜனுக்குத் தாயாய் விட்டாளாம்!........அப்போ நான் தகப்பனாக வில்லையா?—ஆகி என்ன செய்யட்டும்! இப்போது அவள்தான் சர்வாதிகாரி—முஸோலினி மாதிரி! ஒரு வேளை அந்தப் புண்ணியவான் பிறந்த லக்னத்திலேயே இவளும் ஜனித்து விட்டாளோ என்னவோ!

மணி 11-55. இன்னும் 12 கூட ஆகவில்லை. உள்ளிருந்து 'இலை போட்டாச்சு, சாப்பிட வரலாம்' என்று மிருதுபாஷினியின் கூப்பாடு வந்தது. எனக்குண்டான வியப்புக் களவில்லை. இன்று இவ்வளவு சீக்கிரத்தில் அழைப்பு வந்ததே என்பதற்காக மட்டும் நான் ஆச்சர்யப்படவில்லை. இன்னொரு விசேஷமும் உண்டு.

என்னைச் சாப்பிட அழைக்கும் போதெல்லாம் என் மனைவி என்ன செய்வது வழக்கமென்றால் 'இந்தாருங்கள்! ஒங்களைத் தானே! எழுந்து வாருங்கள். சாப்பிட்டுவிட்டு வந்து பேசுங்கள்' என்று தெருக் கதவைப் பிடித்துக்கொண்டு சொல்லுவாள். அதற்கு நான் 'இலை போடு. இதோ வந்துட்டேன்' என்பேன்.

உடனே அவள் 'நீங்கள் வந்தப்பரந்தான் இலை போடுவேன்' என்பாள். 'நீ போட்ட பிறகுதான் நான் வருவேன்' என்பேன். இப்படியே எங்கள் வாக்குவாதம் வெகு நேரம் வரை நீடித்திருக்கும். இதனால் ஒவ்வொரு தினங்களில் நான் சாப்பிடுவதற்குள் 3 மணிகூட ஆகிவிடும்.

இந்த வாதமே இல்லாமல் இப்படிச் சுருக்க 12 மணிகூட அடிப்பதற்கு முன்பு அவள் 'இலை போட்டாச்சு. சாப்பிட வாருங்கள்' என்று அழைத்தால், நான் ஆச்சர்யப்படா திருக்க முடியுமா?



உள்ளே போய் இலையிலுட்கார்ந்தேன். 'சுருக்கச் சாப்பிடுங்கோன்னாகூட ஒங்களுக்குக் கஷ்டமாத்தான் இருக்கு!' என்றாள் சகதர்மிணி.

'அப்படி யொன்றும் கஷ்டமில்லை. ஆனால்.......' என்று அவளைப் பார்த்தேன்.

'ஒன்றும் இல்லை. இத்தனை சுருக்க இன்னிக்குச் சாப்பிடக் கூப்பிட்டதைப் பார்த்தா, ஏதானும் விசேஷம் இருக்கணு மென்னு தோண்றது'

'ஒங்களுக்குத் தோன்றத்துக்கென்ன? ஒரு அலுவல், உத்தியோகம் இருந்தாத்தானே! எப்ப பார்த்தாலும் படிச்சிண்டு, திண்ணையை அரைச்சு ஊதிண்டிருந்தால் ஏதானும் தோணிண்டுதானே யிருக்கும்!'

நான் பதில் கூறவில்லை. கட்டுரை எழுதி யெழுதிக் காலத்தைப் போக்கிக்கொண்டு தம்படி வரும்படிக்கும் வழியில்லாமே உட்கார்ந்து கொண் டிருக்கிறபோது.......நான் ஏதாவது பேசலாமா? நீங்கள் தான் சொல்லுங்கள்.

ஆனாலும் எனக்கு மட்டுந் தெரியும் ஏதோ விசேஷ மிருக்கிறதுன்னு. 'மலிந்தால் கடைக்கு வருகிறது' என்று எண்ணிக்கொண்டு புசிப்பதில் கவனத்தைச் செலுத்தினேன்.

'இந்தாருங்கள்.......' என்று திடீரென்று ஆரம்பித்தாள். உடனே அவளை நிமிர்ந்து நோக்கினேன்.

'என்னவோ நீங்க பாக்கிரச்சையே எனக்குப் பயமாயிருக்கே! ........நான் சொல்றேன். அப்புறம் கோவிச்சக்கப்படாது.'

'என்ன பிரமாதமான பீடிகை? சங்கதியைச் சொல்லேன்'

'ஒண்ணுமில்லே! அந்த நாயிடு நாறு ரூபாய் ஒங்களுக்குக் கொடுக்கணுமாமே.'

'ஆமாம்.......'

'அவர் இன்னிக்காலமே கொண்டுவந்து கொடுத்துட்டார்.

'..........'

'அவர் கொடுத்துப் போன கொஞ்ச நேரத்திற் கெல்லாம் வாசல்லே பழைய நகை விக்கறவன் போனான்.......'

'என்ன? நகை வியாபாரியா? அப்படீன்னா நகை வாங்கிவிட்டாயா அந்தப் பணத்துக்கு?'

'எப்பவுந்தான் உங்களுக்கு ஏதானும் செலவு வந்திண்டிருக்கு. நம்ப மீனாட்சிக்கு உருப்படியா ஒரு நகை யுண்டா? அதற்காகத் தான் ஒரு சங்கிலி வாங்கினேன்.'

'சங்கிலியா எங்கே? ஜவுளிக்கடைக்காரனும், மளிகைக்கடைக் காரனும் பிடுங்கித் தின்கிறான். இந்தச் சமயம் பார்த்துத்தானா சங்கிலி வாங்கணும்?........'

'ஆறு பவுனுக்கு 10 குண்டுமணி குறைச்சல். ரூ. 90 சொல்லி ரூ. 85-க்குக் குறையமாட்டேனென்றான். நான் ரூ. 75-க்கு மேல் வேண்டியதில்லையென்று ஒரேயடியாய் அடித்தேன். அதற்கு மேல் அவன் ரூ. 80க்கு குறைந்து முடியாது என்று சொல்ல நான் ரூ. 78-க்குத் தீர்த்து வாங்கினேன்.' என்று சொல்லியவாறே வீட்டு எஜமானி அதை எடுத்துவரப் போனாள். அதற்குள்ளாக நானும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு எழுந்தேன். சங்கிலி என் கைக்கு வந்து சேர்ந்தது. திருப்பித் திருப்பிப் பார்த்தேன். திடுக்கிட்டேன். 'ஐயையோ!' என்றலறினேன். நான் உண்ட உணவெல்லாம் எங்கோ போய்விட்டது.

'ஏன் இப்படி அலறுகிறீர்கள்?' என்றாள் அவள் விஷயமறியாது.

'அட பாவமே! என் பணம் இப்படியா போக வேண்டும்?' என்று தலையிலடித்துக் கொண்டேன்.

என் மனைவி பிரமித்துப்போய் நின்றாள். 'பித்தளைச்சங்கிலி! நம்மூர் கில்ட் நகை வியாபாரியிடத்தில் ரூ1-8-0க்கு வாங்கலாம்........' என்றேன்.

'பித்தளைச் சங்கிலியா? நன்னா பாருங்கள். பின்னே அந்தப் பயல் ரொம்ப யோக்கியனாட்டமாப் பேசினானே!'

'பார்க்கிறதென்ன? பித்தளை சங்கிலின்னு கண் தெரியாத குருடன் கூடன்னா சொல்வானேன்! நான் ஸ்நானம் பண்ணிட்டுத் திரும்பரத்துக்குள்ள இந்த வியாபாரம் பண்ணிட்டியே!'

'ஓங்க கையிலே பணம் வந்தால்தான் உருப்படியா சேர்ரதில்லியே! நானுந்தான் இந்த ரண்டு வருஷகாலமா மீனாட்சிக்கு ஏதானும் ஒண்ணு பண்ணிப் போடுங்கோன்னு முட்டிண்டு வந்தேனே! நீங்கள் செஞ்சியளோ?'

'இல்லை. அதற்காக ரூ. 1—8—0 சங்கிலியை ரூ. 78க்கு வாங்கியிருக்கே!'

'அதற்கு நானென்ன பண்ணுவேன். நம்ப மீனாட்சி துக்கிரி முண்டை! இருந்திருந்து ஒரு சங்கிலி வாங்கப் போனதற்கு இப்படி அவலமா வந்து முடிஞ்சுதே!—இதோ பாருங்கள் ஓங்களுக்குக் கொஞ்சம் புண்ணியமுண்டு. சைக்கிளை எடுத்துண்டுபோய் அந்தப் பயல் எங்கானும் நிற்கிறானா; பார்த்து வாருங்கள். எழுந்திருங்கள்.



'இது சீக்கிரச் சாப்பாட்டின் பலன் போலும்' என்று எண்ணிக் கொண்டு சைக்கில் ஏறி ஊர் முழுதும் அந்தக் கடும் வெயிலில் சுற்றியலைந்தேன். அவன் அகப்பட்டால்தானே! உண்ட களைப்பும், ஊர் சுற்றிவந்த களைப்பும் மேலிடவே 'அப்பாடா!' என்று வீட்டில் வந்து விழுந்தேன்.

'என்ன? போன காரியம் காயா, பழமா?' என்றாள் எஜமானி.

'அலைந்ததுதான் மிச்சம்' என்றேன்.

'அந்தப்பயல் எப்படியும் நாளைக்கு வருவான். அவனை அப்போ யார் விட்டா?' என்று ஜம்பமாகச் சொல்லிக்கொண்டாள். இன்னுங்கூட அப்படித்தான் அவள் சொல்லிக்கொண்டு வருகிறாள். ஆனால், அவன் வருவான், வரமாட்டான் என்று உங்களுக்கும், எனக்குந் தெரியாதா என்ன!

---


## இணையற்ற எண்ணெய்

மேக வாய்வு, கை கால் பிடிப்பு,
உடம்பு வலி, இவைகளுக்குச் சிறந்த
ஔடதம். வயிற்றில் தங்கிய வாயுவை
வெளிப்படுத்துவதில் வல்லது. பெண்களுக்
குண்டாகும் சூதகவாய்வு, சூதகவலி, பித்த குன்மம்,
வெள்ளைவியாதி, மூலம் பவுத்திரம், குஷ்டம் இவைகளுக்கு
நிகரற்ற வைரி. வயிற்றிலுள்ள இரணங்களை இலகுவில் ஆற்றும்.
பாரிச வாயுவைப் பறக்கடிக்கும். வாத சரீரத்தை இளைக்க
வைக்கும். ஒரே வேளையில் குணம் தரும். நூற்றுக்
கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. உபயோ
கிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

### இந்த இணையற்ற

# சகல மேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூ. 5.

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.


---

# ஏமாந்த நரிகள்

['நந்தகோபன்' மணல்மேடு]

இரண்டு நரிகள் சேர்ந்து ஒரு ஆட்டுப் பட்டியிலிருந்து ஒரு ஆட்டுக்குட்டியைத் திருடிக்கொண்டு வந்தன. அவைகளுக்குள் சண்டை உண்டாகிவிட்டது. ஒன்று, 'நான்தான் முதலில் பட்டியினுள் புகுந்தேன்; ஆகையால் ஆட்டுக்குட்டி என்னுடையதுதான்' என்றது. மற்றொன்று, 'நான்தான் ஆட்டுக்குட்டியை உள்ளேயிருந்து கொண்டு வந்தேன். ஆகையால் என்னுடையதுதான்' என்றது. இவ்வாறு வாய்ச் சண்டை முற்றவே, கடைசியில் மூன்றாவது பேர்வழி யாரிடமாவது சென்று தங்களது வழக்கைத் தெரிவித்து நியாயம் வழங்கச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தன. உடனே ஆட்டுக்குட்டியுடன் மூன்றாவது பேர்வழியைத் தேடிக் கொண்டு ஓர் குளத்தங்கரையை அடைந்தன.

அப்பொழுது அந்த ஆட்டுக்குட்டியின் தாய் தன் குட்டியைத் தேடிக்கொண்டு அங்கே வந்துகொண்டிருந்தது. தன் குட்டியுடன் நரிகள் நிற்பதைக் கண்டதும் அதற்கு ஆத்திரம் வந்துவிட்டது. நரிகளைக் கொன்று தன் குட்டியை அழைத்துச் செல்ல வேண்டுமென்று எண்ணிற்று. உடனே அது தன் கொம்புகளைச் சாய்த்துக்கொண்டு அவைகளைக் கொல்ல வந்தது. ஆட்டைக் கண்ட நரிகள் தங்களது வழக்கை அதனிடம் சொல்லி நியாயம் தீர்க்கும்படி கேட்டன.

இதைக் கேட்ட தாய் ஆடு அபாயமின்றி ஒரு தந்திரம் செய்து தன் குட்டியைக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணிற்று. அது உடனே நரிகளைப் பார்த்து, 'சரி, நீங்கள் இவ்வாறு சண்டை போட வேண்டாம். நீங்கள் இருவரும் இந்தக் குளத்திலிறங்கி நீந்த வேண்டும். உங்களில் யார் ஒருவர் அதிக நேரம் நடு குளத்தில் நீந்துகின்றீர்களோ, அவர்களே இந்த ஆட்டுக்குட்டியை எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று நியாயம் தீர்த்தது.

உடனே இரண்டு நரிகளும் ஆட்டுக்குட்டியைக் கரையில் விட்டுவிட்டு ஜலத்தில் குதித்து, நடுக் குளத்தை அடைந்து நீந்த ஆரம்பித்தன. ஆட்டுக்குட்டி 'அம்மே' என்று கத்திக் கொண்டு தாயினிடம் ஓடிற்று. உடனே, ஆடு, குட்டியை அழைத்துக்கொண்டு 'தப்பினோம் பிழைத்தோம்' என்று 'திடுதிடு'வென்று ஓடி கொஞ்ச தூரத்திலிருந்த ஆட்டுப்பட்டியினுள் புகுந்து கொண்டது. நரிகள் அன்று முழுவதும் நீந்தின. இன்னும் குளத்தில் நீந்திக்கொண்டுதானிருக்கின்றன.

# காதலும் கட்டுப்பாடும்

[ஆர். இ. முத்து]

**குத்துக்கல்வலசையில்** பகவதியா பிள்ளை பெரிய லக்ஷாதிபதி. லக்ஷாதிபதியென்றால் புதுப் பணக்காரரா? இல்லை. அவர் தகப்பனார், பாட்டனார், முப்பாட்டனார் எல்லாருமே லக்ஷாதிபதிதான். ஆனால், பகவதியா பிள்ளை மாத்திரம், தகப்பனார் வைத்துப்போன சொத்தைச் சரீர பிரயாசைப்படாமல் குத்துக் கல்வலசையிலுள்ள ஜனங்களுக்கு, தர்ம வட்டிக்கு—ரூபாய் நூறுக்கு—மாசம் ஒன்றுக்கு—வட்டி ரூபாய் ஒன்றரை வீதம் கடன் கொடுத்து இரு மடங் காக்கினார்.

பகவதியா பிள்ளை அவ்வூரிலுள்ள ஜனங்களை வாக்குச் சாதுர்யத்தாலும், நயவஞ்சகத்தாலும் ஏமாற்றித் தட்டிப் பறித்து வந்தார். இது அந்த ஜனங்களுக்குத் தெரியாமல் அவரையே பெரிதாக வெண்ணி அவர் சொற்படி நடந்து வந்தார்கள். ஆனால், இனிமேல்—கடன் நிவாரண மசோதா வந்த பிறகு—அவருடைய 'பூச்சி' எப்படிப் பலிக்கும்.

இது மாத்திர மல்ல; அவர் அந்த ஊர் வியாபாரியிடங்கூட இவ்வளவுதூரம் அவர் கஷ்டப்பட்டு (பெரிய கஷ்டம்) சம்பாதித்த சொத்திற்கெல்லாம் அவருக்கு ஒரே ஒரு மகன்தான். அவன் பெயர் சுந்தரம்.

சுந்தரமும் நாமும் முதல் வகுப்பிலிருந்தே படித்து வந்தோம். நானோ படிப்பில் சுத்த அசடு. ஆனால் சுந்தரமோ எல்லா வகுப்பிலும் முதலில் தேறி வந்தான். நானும் தப்பித் தவறி வாத்தியார்களின் உதவியாலும், சிபார்சினாலும் வருஷா வருஷம் தேறி விடுவேன்.

'ஸ்கூல் பைனல்' வகுப்பிற்கு அவனும் வந்தான் நானும் போய் விழுந்தேன். நான் எப்படியாவது இவ்வருஷம் தேறிவிட வேணுமென்று தலைகீழாக நின்றேன். ஆனால், சுந்தரமோ புஸ்தகங்களை மேலோடு புரட்டிக்கொண்டே செல்வான்.

பரீக்ஷையும் வந்தது. இரண்டு பேரும் எழுதினோம். அதிர்ஷ்டவசமாக நான் தேறிவிட்டேன். சுந்தரம் தேறவில்லை. மார்க்கைப் பார்க்கும்போது நான் எல்லாவற்றிலும் 'தொட்டுக்கோ தொடச்சுக்கோ' வென்று எடுத்திருந்தேன். சுந்தரமோ எல்லாவற்றிலும் 80, 90 எடுத்திருந்தான். ஆனால்—தமிழில் மாத்திரம் 30 'மார்க்கு' இருந்தது. என்ன இருந்து என்ன செய்ய. சுந்தரம் தோற்றுவிட்டான். இதோடு இனி படிப்பது உசிதமில்லையென்று நினைத்து சுந்தரம் படிப்பை நிறுத்திவிட்டு வீட்டில் உட்கார்ந்து விட்டான்.

பகவதியா பிள்ளையும் தமக்கு வயதாகி விட்டபடியால் தம் வியாபாரத்தை மகன் பேருக்கு எழுதிவைத்து விட்டார். இதற்குள் சுந்தரத்துக்குப் பற்பலவிடங்களி லிருந்தும் ஏராளமான சீருடன் 'பெண் நான் தாரேன், நீ தாரேன்' என்று அடிபிடி போட்டுக் கொண்டு மாமனார்கள் வந்தார்கள். ஏன் அப்படி? பெரிய வீட்டுப் பிள்ளை, அதோடு பெரிய வியாபாரியுங்கூட.

*　　　*　　　*

பகவதியா பிள்ளையின் வீட்டிற்கு இரண்டு தள்ளி நரசிம்மையர் வீடு. அங்கே நரசிம்மையரும், அவர் மனைவியும், 13, 14 வயது வந்த ஓர் இளம் பெண்ணும் வசித்து வந்தார்கள். நரசிம்மையரும் அவர் மனைவியும் மிகவும் வயதானவர்கள். நரசிம்மையர் தம் பூஜை அநுஷ்டான முதலியவைகளை ஒழுங்காக நடத்தி வந்தார். அவரும் அவர் மனைவியும், அந்த இளம் பெண் சுந்தரியின் தாத்தாவும் பாட்டியும் தான்.

சுந்தரி பிறந்த ஒரு வருஷத்திற்குள் அவளுடைய தாயுந் தந்தையும் பாழான 'காலரா' என்னும் கொடிய நோயால் இறந்து விட்டார்கள். இறந்ததும் அம்முதியவர்கள் இரண்டு பேரும் தம் மகனுக்குப் பிறந்த அந்த ஒரே குழந்தை—அருமைக் குழந்தை—சுந்தரியை மிகச் செல்வமாக ஏழு வயது வரையிலும் வளர்த்து அந்தணர்களுக்குரிய முறைப்படி ஓர் யுவனுக்கு விவாகம் செய்து வைத்தார்கள்.

விவாகம் நடந்து மூன்று மாதத்திற்குள் சுந்தரியின் கணவன் 'நிமோனி'யாவினால் இறந்து விட்டான். சுந்தரியின் தாத்தாவும், பாட்டியும் மிகவும் துயர மடைந்தனர். பின் அங்குள்ள அநேக வைதீக குடுக்கைகள் சுந்தரியின்—பசுங்கிளியின், பஞ்சவர்ணக் கிளியின்—உலகம் என்ன வென்றறியாத அருமந்தக் குழந்தையின் தலையை அவர்கள் முறைப்படி மொட்டை யடிக்க வேண்டு மென்று கூறினார்கள்.

என்ன வழக்கமோ? பாழாப்போன வழக்கம். வழக்கம், வழக்க மென்று நம் தாய் நாட்டையே கெடுத்த சீர்கேடான முறையை இன்னும் இந்த வைதீகக் குடுக்கைகள் கையாண்டு வருகிறார்கள்.

ஆனால், சுந்தரியின் தாத்தாவும், பாட்டியும் தங்கள் குழந்தை, அக் கிளியின் அழகை இன்னும் கொஞ்ச நாள்வரைப் பார்த்துவிட்டு அப்புறம் மொட்டை யடித்து விடுகிறோம் என்று கூறிவிட்டு சுந்தரியைத் தம் வீட்டிற்கு அழைத்துவந்து விட்டார்கள்.



சுந்தரி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறாள். உலகம் என்ன வென்றறியாத அவள் தன்னை மிக அலங்கரித்துக்கொண்டு தன் அழகிலே மூழ்கி யிருக்கிறாள்.

இச் சமயம் அவளை வளர்க்கும் தாத்தாவும், பாட்டியும் மிகச் சந்தோஷப் படுவர். ஆனால், அச் சந்தோஷம் சட்டென்று மாறி மிகவும் துக்கத்தில் மூழ்கிவிடுவர். ஏன்? இன்னும் சில நாளில் அவள் தலையை மொட்டை யடிக்கப் போகிறோமே என்ற வருத்தத்தினால் தான்.

*　　　*　　　*

சுந்தரம் அடிக்கடி, சுந்தரி பள்ளிக்கூடத்துக்குப் போகும் பொழுதும் வரும்பொழுதும் அவளுடைய பேரெழிலைக் கண்டு பெரு மூச் செறிந்து அவள் மேல் காதல் கொண்டான்.

பின் சில நாளில் இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்து இரண்டு பேருக்கும் கடிதப் போக்கு வரவு நடந்தது.

இத் தருணத்தில் சுந்தரிக்கு வயது 14, 15 ஆனபடியால் அவளுடைய தாத்தாவும் பாட்டியும் அவள் தலையை மொட்டை யடித்துவிட வேணு மென்று தீர்மானித்து, அதற்கு வேண்டி ஒரு நல்ல நாளும் பார்த்து இன்னும் இரண்டு தினத்தில் மொட்டை யடித்துவிட வேண்டு மென்று உறுதிகொண்டார்கள்.

இதைக் காதாரக் கேட்ட அப் பசுங்கிளியின்—அழகு மிகுந்த அவ்வன்னத்தின் முகம் இருண்டது. அவளை அறியாமலே கண்களி லிருந்து ஜலம் தாரை தாரையாய் வழிந்தோடியது. என்ன செய் வாள். பாவம்! தான் இனி மூலையில் கிடக்க வேண்டியதை நினைத்து வருந்தினாள். 'ஹே ஈஸ்வரி இந்தப் பாவியை ஏன் படைத்தாய்' என்று கதறினாள். என்ன கதறி என்ன பயன்? எப்படியும் அவள் தன் தாத்தாவுக்கும் பாட்டிக்கும் கட்டுப்பட்டுத்தானே நடக்க வேண்டி யிருக்கிறது.

அன்று மாலை சுமார் ஐந்து மணிக்குச் சுந்தரி வாய்க்காலுக்குத் தண்ணீர் எடுக்கப் போகும்போது சுந்தரம் அவளைச் சந்தித்தான். அப்பொழுது சுந்தரி துக்கத்தினால் தேம்பித் தேம்பி அழுதாள். ஒன்று மறியாத சுந்தரத்தின் மனம் கலவர மடைந்தது. சுந்தரி தன்னைக் காதலிப்பதால் யாரேனும் அவளை ஏசினார்களோ வென்று எண்ணி 'சுந்தரி! என்ன காரணம்? ஏன் அழுகிறாய்' என்று மிக வருத்தத்துடன் கேட்டான்.

சுந்தரி:—'ஐயோ! என்னை இன்னும் இரண்டு நாளில் மொட்டை யடித்து மூலையில் போடப் போகிறார்களாமே, என்ன செய்வேன்'

சுந்தரம்:—'அப்படியா? ஐயோ! உன்னையா? ஒன்று மறியாத உன்னையா மொட்டையடிக்கப் போகிறார்கள்?'

சிறிது நேரம்வரை இரண்டு பேரும் மௌனமா யிருந்தனர். மறுபடியும் சுந்தரம் ஏதோ நினைத்தவன்போல் 'சுந்தரி நான் உன்னை ஒன்று கேட்பேன். அதற்கு நீ உடன்படுவாயா ?'

சுந்தரி:—'இன்னும் என்மேல் சந்தேகமா?'

சுந்தரம்:—'அப்படியானால் நாளை இரவு 8 மணிக்கு நீ என்னுடன் வரணும்'

சுந்தரி:—எங்கே?'

சுந்தரம்:—'எங்கேயானால் என்ன'

சுந்தரி தயங்கி இருமனதுடன் 'சரி' என்றாள். உடனே சுந்தரம் என்ன நீ இவ்வளவு கவலைப்படுகிறாய். இதோ பார். கடவுள் மேல் ஆணையாக நான் உன்னை ஒருபோதும் கைவிடமாட்டேன்' என்று கூறினான்.

அதற்கு 'சுந்தரி 'ஐயோ வேண்டாம். என்மேல் உங்களுக்கு இவ்வளவு சந்தேகமா? நீங்க என்னைக் கைவிட்டிடுவேன்னு நான் கொஞ்சங்கூட எண்ணலையே' என்றாள்.

சுந்தரம்:—'சரி நாளைக்கு ராத்திரி நம்ம வீட்டுக்கு மேக்கிட்டுருக்கும் மண்டபத்திற்கு வந்திரு'

பின் இருவரும் பிரிந்தனர். மறு நாள் இரவு மணி ஏழரையானதும் ஒரு 'டாக்ஸி'யுடன் மண்டபத்திற்கு வந்து தன் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண் டிருந்த சுந்தரியை அழைத்துக்கொண்டு குற்றாலத்தை நோக்கிச் சென்றான்.

தென்காசி வந்ததும் அங்குத் தனக்கும் சுந்தரிக்கும் ஆடைகளும், இரண்டு மாலையும் வாங்கிக்கொண்டு குற்றாலத்திற்குச் சென்றான்.

மறுநாள் காலை தன் காதலி, அன்பே உருவெடுத்து வந்த சுந்தரியை அழைத்துக்கொண்டு 'அருவிக்கரைக்கு'ச்சென்று நீராடிவிட்டுப் புது ஆடைகளைக் கட்டிக்கொண்டு தரும சொரூபியா யிருக்கும் திருக்குற்றால நாதரின் திவ்விய க்ஷேத்திரத்திற்குள் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு, அங்கு இருவரும் குற்றாலநாதரை, கருணாநிதியை சாக்ஷியாக வைத்துக்கொண்டு மாலை மாற்றிக் கொண்டனர்.

பின் சுந்தரியை அழைத்துக்கொண்டு அங்குள்ள பல வளப்பங்களையும் அவளுக்குக் காட்டினான்.



சுந்தரம் ஊரைவிட்டுப் புறப்பட்ட மறுநாள் காலையிலேயே அவனுடைய பெற்றோர்கள் அவனை எங்கும் தேட ஆரம்பித்துவிட்டார்கள்.

இதே சந்தர்ப்பத்தில் சுந்தரியின் தாத்தாவும், பாட்டியும் 'ஐயோ என் குழந்தையைக் கண்டீர்களா? கண்டீர்களா?' என்று கேட்டுக்கொண்டே எங்கும் தேடலானார்கள்.

இறுதியில் சுந்தரத்தின் தகப்பனார் அவன் ஏறிச்சென்ற கார் டிரைவரைப் பயமுறுத்தி அவனிடமிருந்து சுந்தரம் குற்றாலத்திலிருப்பதாகத் தெரிந்துகொண்டு ஒரே யடியாகக் குற்றாலத்தில் தன் புத்திரனிருக்கும் இடத்திற்குவந்து சேர்ந்தார். அவனைக் கண்டதும் ஒரு பக்கம் புத்திரவாஞ்சையாலும், மற்றொரு பக்கம் அவன் மேலிருக்கும் கோபத்தினாலும் ஒன்றும் பேச நா எழாமலிருந்தார். பின் அவனைப் பார்த்து 'அப்பா என்னடா காரியஞ் செய்தாய். நம்ம நிலைமைக்கு இது அழகாடா' என்றார்.

சுந்தரம்:—'அதெல்லாம் ஒன்னும் பேச வேண்டாம். நான் ஒண்ணும் அவ்வளவு தப்பிதமாய்ச் செய்துவிடவில்லை'

நாடி மூத்துப் பிள்ளை:—'அடே இது பாவம்'

சுந்தரம்:—'அதெல்லாம் இனி ஒண்ணும் நடக்காது. நாங்க இரண்டுபேரும் கல்யாணம் செய்து கொண்டோம்'

பின் சுந்தரத்தின் தகப்பனார் அங்கு அவனோடு பேசுவது அவ்வளவு உசித மில்லை யென்று நினைத்து 'சரி உன்னிஷ்டம் போல செய்துக்கோ, வா ஊருக்குப் போவோம்' என்று சொல்லித் தந்திரமாய் அவனையும், சுந்தரியையும் தன் ஊருக்கு அழைத்து வந்தார்.

ஊருக்கு வந்ததும் தன்னாலியன்றமட்டும் சாம, தான, பேதம் என்ற மூன்றையும் உபயோகித்து அவன் மனதைத் திருப்பிவிட வேண்டு மென்று பிரயாசைப் பட்டார். ஆனால், அது ஒன்றும் அவனிடம் பலிக்கவில்லை. பிறகு, தனக்கு வேண்டிய பெரிய மனுஷாளைக்கொண்டு சொல்லிப் பார்த்தார். அதிலும் ஒன்றும் நடக்கவில்லை. கடைசியாக அவர் நான்காவது உபாயமாகிய 'தண்டத்தை' உபயோகித்து அவனைத் தன் வீட்டில் இருக்கக் கூடாதென்று சொல்லிவிட்டார்.

இதற்கும் சம்மதித்துச் சுந்தரம் தன் அன்புக்குரிய காதலி சுந்தரியுடன் வேறொரு வீடு வாடகைக் கமர்த்திக்கொண்டு, தன் வியாபாரத்தைச் சரியாகப் பார்த்துக்கொண்டு இல்லற வாழ்க்கையையும் தன் அன்புக்குரிய மனைவியோடு நடத்தி வருகிறார்.

இதற் கிடையில் பகவதியா பிள்ளை 'சாம, தான, பேத, தண்டம்' என்ற நான்கிலும் தன் முயற்சி பிரயோஜன மில்லாமல் போகவே கடைசியாக மந்திரத்தினாலாவது அவன் மனதைத் திருப்பிவிட வேண்டு மென்று அதற்கு வேண்டிய முயற்சி செய்தார்.

இச் சமயத்தில் சுந்தரி, தன் கணவன் வெளியில் சென்று வீடு வரும் வரையும், சூரியனது கிரணங்களை, எதிர் பார்த்துக்கொண் டிருக்கும் தாமரைபோல், மழையை எதிர்நோக்கி யிருக்கும் பயிர் போல் அடிக்கடி அடுக்களையி லிருந்து வாசற் பக்கம்வந்து சுந்தரம் வருகிறானா என்று பார்ப்பதும், அவன் வராவிட்டால் ஒருவித மனக் கலக்கத்துடன் வீட்டிற்குள் திரும்பிச் செல்வதும், மறுபடியும் திரும்பிவந்து வாசற் பக்கமுள்ள தூணைப் பிடித்துக்கொண்டு 'இப்பொழுது வந்துவிடுவார், இப்பொழுது வந்துவிடுவார்' என்ற ஒரே எண்ணத்துடன் நின்றாள். ஏன் அப்படி? தன் கணவனுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடக் கூடாதே யென்றுதான்.


வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது ! !

ஏது ? ஏது ?

## பாரதிதாஸன் கவிதைகள்

**200** பக்கங்கள் ! மிக அழகான பதிப்பு !

**விலை அணா எட்டு.**

**10** அணா மணியார்டர் அனுப்பினால்
ஒரு புத்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

ரூ. **5—0—0** மணியார்டர் அனுப்பினால் தபால் செலவின்றி
**10** புத்தகங்கள் அனுப்பப்படும். வி. பி. கிடையாது.

வெளிநாட்டு அன்பர்கள் புத்தக விலையுடன் தபால் செலவும்
சேர்த்து மணியார்டர் அனுப்ப வேண்டும்.

கிடைக்குமிடம் :

**'தமிழரசு' புத்தகாலயம்,**
**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**


# பரமானந்தர் அல்லது குளவிக் கூட்டம்

[R. A. இராமன் B. A., R. A., இரங்கூன்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

**சி**ல நிமிஷ நேரம் எங்கும் நிசப்தம். வெங்கோபர் ஒளிந்த படியே நோக்கினார். அதே சமயம் விசித்திர வேலைப்பா டமைந்த ஒரு அங்கியை அணிந்த ஒரு மனிதன் ஹாலின் எதிர்புறக் கதவுகளைத் திறந்துகொண்டு நிற்பதைக் கண்டார். குளவிச்சங்கத் தார் குகையுள்தான் சிக்கிக்கொண் டிருப்பதை அதே தருணம் உணர்ந்து கொண்டார். அங்கு நிற்கும் மனிதன் டாக்டர் ஸின்டன்பா. சில வினாடிகள் ஹாலை கவனித்த பின்பு, நேராக நடந்து சென்று மாடிப் படிகளின் வழியே மாடியை அடைந்தான் டாக்டர். டாக்டர் ஹாலுக்கு வரும் முன்பாகத் தங்கி யிருந்த அறையைத் திறந்திருந்த கதவு வழியாகக் கவனித்தார் வெங்கோபர். தன் மறைவிடத்தி லிருந்தே காலையில் மாதவன் தனக்கு மனக்கண் முன் சித்திரித்து காட்டிய அந்த எழும்பூர் டாக்டர் மதுரானாத் வீட்டு அறைகள் போலவே இது இருப்பதையும் கண்டார். மனதைத் திடப்படுத்திக்கொண்டு மெதுவாக அந்த அறையை அடைந்து அதனுள் நுழைந்தார். வெகு நீளமாக இருந்தது அந்த அறை. அது மற்ற ஓர் அறையி லிருந்து ஒரு பெரிய மரத்தால் செய்யப்பட்ட மறைப்பால் தடுக்கப்பட் டிருந்தது. அடுத்த அறைக்குச் செல்வதற்கு இரண்டு பக்கங்களின் ஓரங்களிலும் மறைப்பு சீலை இடப்பட்டு இரண்டு வழிகள் இருந்தன. மற்றொரு மூலையில் பலவித நூதன அங்கிகள் தொங்கவிடப்பட் டிருந்தன. அறையினடுவே ஒரு சிறு விளக்கு மங்கலாக எரிந்துகொண் டிருந்தது. வெங்கோபர் தொங்கிக் கொண் டிருந்த அங்கிகளி னிடையே மறைந்து கொண்டார். அதே சமயம் ஒருவன் அவ்வறையுள் நுழைந்தான். எவன் டாக்டரே. கையில் ஒரு கிண்ணத்தில் ஜலமோ அல்லது நிற மற்ற தண்ணீர் போன்ற ஒரு திராவகமோ வைத்துக்கொண் டிருந்தான். மற்றொரு கையில் ஒரு கண்ணாடி குப்பி. டாக்டர் தான் நிறைவேற்ற வேண்டிய காரியத்திலேயே கருத்துடனிருந்தவனாகத் திரைச் சீலையைத் தாண்டி அடுத்த அறையை அடைந்தான். டாக்டர் பின்னே, வெங்கோபர் மெதுவாகத் திரைச்சீலையினருகே வந்துநின்று அடுத்த அறையில் நடப்பதைக் கவனிக்கலானார். அங்குள்ளவர்கள் பேசிக் கொள்வது இவருக்குப் புரியவில்லை. ஆனால், அங்குள்ள ஒவ்வொரு பொருளும், டாக்டர் மதுரானாத் வீட்டிலுள்ளவைபோல் புலப் பட்டன. அறையின் நடுவே ஓர் பெரிய சதுரமேஜையின் ஓர் புறத்தில், பார்வைக்கு நியாயாதிபதிகளைப் போன்ற மிக கௌரவத்

துடன் அமர்ந்திருந்தனர் மூவர். டாக்டர் தான் கொண்டு வந்திருந்த கிண்ணத்தையும் குப்பியையும் மேஜைமீது வைத்தான். மேஜையின் மற்றொரு புறமாக ஒரு நாற்காலியில் மற்றொருவன் உட்கார்ந்திருந்தான். அவன் இரு கைகளும் நாற்காலியுடன் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருந்தன. அவன் சமீபத்தில் வேறொருவன் நின்றுகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் வெங்கோபர் திகைத்து விட்டார். நாற்காலியில் அமர்ந்து பிணைக்கப்பட்டிருப்பவன் முகுந்தராவ் என்று விசதமாயிற்று. ஆனால், மூன்றாமவனும் தன்னைப் போலவே தலையைக் கத்தரித்துக்கொண்டு உடை அணிந்துகொண்டிருந்தான். அதே சமயம் ஒருவன் பேசும் சப்தம் கேட்டது. ஆச்சரியமும் திகிலும் ஓர் புறம், பரபரப்பும், ஆத்திரமும் ஓர் புறமாக வெங்கோபர் பேசுபவனைக் கவனித்தார். தலைமையாக மேஜையினருகே அமர்ந்திருந்த ஒருவன் பேசலுற்றான்.

'இதுவே கடைசி முறையாகக் கூறுகிறோம்! வெங்கோபரே! உங்கள் பேரில் எங்களுக்கு ஆத்திரமில்லை. ஆனாலும், அக்கரைச் சீமையிலுள்ள எங்கள் தலைவர் எங்களுடைய காரியத்தில் தலையிடாதிருக்க உங்களையும் அடக்கும்படி கட்டளை இட்டிருக்கிறார். ஆகவே, நாங்கள் சொல்வதுபோல் நீங்கள் நடக்க வேண்டும்.'

'அப்படியா! துப்பறியும் இலாகாவிலுள்ள ஒவ்வொருவரையும் இதேபோல் நடத்தும்படி உங்கள் தலைவர் கட்டளையிட்டிருப்பார் என்றே நினைக்கிறேன். அது நிரம்ப நியாய மல்லவா' என்று சாவதானமாக மொழிந்தான் வெங்கோபர் வேடம் தரித்த முகுந்தன்.

முகுந்தனுடைய புனைவேடத்தை குளவிச் சங்கத்தார் எப்படி அறிய முடியும்? மீண்டும் பேச ஆரம்பித்தான் சங்கத் தலைவன்.

'நண்பரே! துப்பறி இலாகாவைபற்றி நாங்கள் சற்றும் லக்ஷியம் செய்யவில்லை. நீங்கள் ஒருவர்தான் பரமானந்தரை அறிந்திருக்கிறீர். நீங்கள் அவரைக் காண வேண்டுமென்ற ஆவலால் தூண்டப்பட்டு எங்கள் இனிப்பு மொழிகளில் நம்பி ஆர்வத்துடன் எங்களிடம் சிக்கியாகிவிட்டீர்கள். நீங்கள் இருப்பது எவ்வளவு தொந்திரவு எங்களுக்கு, பாருங்கள். நீங்கள் பரமானந்தரைக் கண்டுபிடித்து எங்களிடம் ஒப்படைத்து விடவேண்டும். அதுவரை நீங்களும் எங்களுடைய கைதியா யிருக்க வேண்டும். உங்களுடைய யோசனையின்படி உங்கள் காரியஸ்தன் மாதவன் பரமானந்தரைத் தேட முயற்சிக்கட்டும். இதற்கு நீங்கள் சம்மதம்தானா! என்ன சொல்கிறீர்கள்?'

முகுந்தன் கொஞ்சம் யோசித்தவண்ணம் பதில் கூறினான்.

'நண்பரே! இதுவரை நான் இவை போன்றவைக்குப் பிரமாணம் செய்ததில்லை. இப்பொழுது பிரமாணம் செய்ய இஷ்டமுமில்லை.'



'அப்படியாகில் நடப்பது நடந்தே தீரும். இதோ பாரும், உங்கள் பக்கத்தில் நிற்பவரை. நாளை இரண்டு தினங்களுள் சென்னையிலுள்ளோர் எல்லாம் வெங்கோபராவ் சென்னையைவிட்டு வெளியே சென்றுவிட்டார் என்றே அபிப்ராயப்படுவர். வெங்கோபர் தென்னிந்திய முக்கிய பட்டணங்களை எல்லாம் பார்த்துவிட்டு கொழும்புக்குபோய், பின்பு பர்மாவுக்குச் சென்றுவிடுவார். அதற்குப் பின் வெங்கோபர் இருந்த இடமே மறைந்துவிடும். அனேக மர்மங்களை வெளியாக்கிய வெங்கோபரைப்பற்றிய மர்மமே பெரியதோர் மர்மமாகிவிடும்'.

இப்பொழுதுதான் உண்மை வெங்கோபருக்குப் புலப்பட்டது. அச்சதிகாரர்களின் கைதியாயிருக்குங் காலத்தும் அவர்களுக்குப் பரமானந்தரைக் கண்டுபிடிக்க உதவ வேண்டும். இல்லாவிடில் புனைவேடம் பூண்ட அச்சதிகாரர்களில் ஒருவன் மறுநாளே தான்தான் வெங்கோபர் என்று பறையடித்துக்கொண்டு, சுற்றுப் பிரயாணத்துக்குக் கிளம்பி, பின்பு இந்தியாவை விட்டே மாயமாய் மறைந்திடுவன். பின்பு தன் சுயரூபத்துடன் அக்கூட்டில் மீண்டும் வந்து கலந்து கொள்வன். இவர்களுடைய யுக்தியே யுக்தி. பரமானந்தரைப்போல உடை தரித்துக்கொண்டு பரமானந்தரெனக் கொலையுண்டானன்றோ முன்பொரு நாள். ஆக, முகுந்தன் வெங்கோபராக மாறுவதும், சதிகாரக் கூட்டத்தின் ஒருவன் முகுந்தனை வெங்கோபரென எண்ணி அவனைப் போன்று மாறுவதும் வியப்பல்ல.

வெங்கோபர் மேஜையைக் கவனித்தார். முகுந்தனின் தோள்புறத்தில் ஏதோ ஒரு ஆயுதத்தால் அவன் சட்டையை நீக்கிக்கொண்டிருக்கின்றனர். டாக்டர் முகுந்தனின் இடது புறத்தில் வந்து நின்றான். அவன் கையில் இஞ்செக்ஷன் செய்யும் கருவி ஒன்றிருந்தது. கிண்ணத்திலிருந்த மருந்து அக் குழாயில் ஏற்றப்பட்டிருந்தது. வெங்கோபர் இனி நடக்கப் போவதைப்பற்றித் திகிலடைந்தார். ஸின்டன்பா முகுந்தனுக்கு 'ஹைபோடெர்மிக்' இன்ஜெக்ஷன் செய்யப் போகிறான். வெங்கோபர் மெதுவாக எழுந்து திரைச்சீலையைச் சற்று விலக்கினார். அங்கே யுள்ளவர்களெல்லாம் அங்கே நடக்க விருக்கும் சிகிச்சையில் கருத்துள்ளவர்களாய் மேஜையின் பக்கம் திரும்பி யிருந்தனர். வெங்கோபர் தம் கையில் ரிவால்வருடன் நின்றுகொண்டிருந்தார். முகுந்தனும் தன்னாலானமட்டும் விடுவித்துக்கொள்ள முயன்றான். ஆக, வெகு பலத்துடன் தன்னாலானமட்டும் நாற்காலியுடன் அசைய ஆரம்பித்தான். டாக்டர் அவன் ஆடாதபடி மற்றவர்களைக் கொண்டு பிடித்துக் கொள்ளச் செய்தான். அதே சமயம் வெங்கோபர் அந்த அறையின் நடுவே வந்து நின்றார். சதிகாரர்களில் ஒருவன் வெங்கோபரைக் கண்டு

விட்டான். அவன் நாற்காலியை விட்டு எழுந்தான். ஸின்டன்பாவும் அப்போதுதான் வெறிக்க நோக்கினான் துப்பறிபவரை.

இரண்டு முறை டாக்டரின் கையைக் குறி பார்த்து சுட்டார் வெங்கோபர். கையில் இருந்த குழாய்க் கீழே விழுந்தது. கையை உதறிக்கொண்டவண்ணம் வெங்கோபரை மற்றவருக்குச் சுட்டிக் காட்டினான் டாக்டர்.

அங்குள்ளவர் யாவரும் திகிலடைந்தனர் என்பது அவர்கள் முகத்திலிருந்தே விசதமாயிற்று. யாவற்றையும் கண்ட முகுந்தன் முன்னினும் பதின்மடங்கு பலத்துடன் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றான்.

அடே! தூர்த்தர்களே! நகர்ந்தால் சுட்டுத் தள்ளுவேன். அசையாதீர்கள்' என்று தைரியத்துடன் மொழிந்தார் வெங்கோபர். ஆயினும், அங்குள்ளவர்கள் இதைப் பொருட்படுத்தாது பரபரப்புடன் அவரவர்களின் ஆயுதங்களை எடுத்து வருவதன் பொருட்டு ஓட ஆரம்பித்தனர். மறுமுறை வெங்கோபர் சுடவும், சின்டன்பாவின் அருகிலிருந்த ஒருவன் சுருண்டு விழுந்தான்.

## பரமானந்தரும் தீனதாரிணியும்

சிறிது நேரத்துக்கெல்லாம் அங்கு இருந்த ஒவ்வொருவரிடமும் ஒரு துப்பாக்கி யிருந்தது. நல்ல காலமாக ஒருவரும் சுட முன் வரவில்லை. குளவிச்சங்கத்து மெம்பர் ஒவ்வொருவனும் உண்மை வெம்கோபரைக் கண்டு பிரமித்தே நின்றான்.

சின்டன்பா பரபரப்புடன் நகருவதைக் கண்ட வெங்கோபர் 'டாக்டர்! நின்றவிடத்திலேயே நில், நகர்ந்தால் தொலைத்துவிடுவேன்' எனக் கர்ஜித்தார். சின்டன்பா இதற்குப் பயந்தவனா! வெங்கோபரை நோக்கிச் சுட்டான் அவன். வெங்கோபரும் டாக்டரை நோக்கிச் சுட்டார். இந்தச் சமயம் குறி தவறாமல் டாக்டரின் கையில் தாக்கியது குண்டு. இம்மாதிரி எத்தனை நாழிகை போராடுவது. அடுத்த நிமிடம் திடீரென யோசித்தவராய் அறையில் பிரகாசித்துக்கொண்டிருந்த சாவிளக்கை நோக்கி இரு முறை சுட்டார். முதல் குண்டிலேயே சரவிளக்கு உடைந்து கீழே விழுந்தது. அறை இருளடைந்தது. ஹாலின் மத்தியில்தான் விளக்கு எறிகிறது. அங்குள்ளவர்களெல்லாம் பழக்கத்தின்மேல் அவ்வறையை விட்டுத் துரிதமாக வெளியேறினர். வெங்கோயர் கையிலிருந்த கைக்கத்தியால் முகுந்தனைக் கட்டினின்று விடுவித்தார். இருவரும் சதிகாரர் பதின்மரை எதிர்க்கத் தயாரா யிருந்தனர்.

பத்து நிமிட நேரம் சென்றிருக்கும். மற்ற அறையில் சிலர் நடமாடும் சப்தம் கேட்டது. மறு நிமிடம் ஹாலைத்தாண்டி, வெளி



வாயிலை நாடி பலர் ஓடுவதாக அறிந்தார். வெளிவாயில் கதவும் படேரென்று மூடப்பட்டது. இவர்கள் இப்படி ஓடி விடுவார்கள் என்று வெங்கோபர் எதிர்பார்க்கவில்லை. அப்போதுதான் தானும் முகுந்தனும் தனித்து அந்த இருண்ட அறையில் இருப்பதை உணர்ந்தார். முகுந்தனிடம் ஒரு ரிவால்வரை அளித்து 'முகுந்தா! பார்த்தாயா எதிர்பாராத இச்சம்பவத்தை' என வினவவே, முகுந்தனும் 'ஆம் இவர்கள் நடத்தையே விநோதம் சார்! இவர்கள் சில நாழிகைக்கு முன் நமது விட்டுக்கு வந்து பரமானந்தர் இங்கே இருப்பதாகவும்'

'எனக்கு எல்லாம் தெரியும் முகுந்தா! உன்னுடன் கூடவே தான் நானும் காரில் வந்தேன். என் காரியஸ்தன் கண்டால்கூட உன்னை வெங்கோபர் என்றே எண்ணுவான்.'

'அப்படியாகில் உங்களுக்கு நடந்ததெல்லாம் தெரிந்திருக்குமே.'

'காரை விட்டு இறங்கியதும் பின்னை நீ நாற்காலியில் கட்டுண்டு கிடக்கும்வரை நடந்தது எனக்குத் தெரியாது. நடந்தது கிடக்கட்டும். இப்பொழுது நடக்க வேண்டியதை நாம் யோசிக்க வேண்டும்'

சற்று நேரம் அந்த இருட்டில் சுற்றுமுற்றும் நோக்கிய வெங்கோபர் நேராகத் திரைச்சீலை விட்டு மறைக்கப்பட்டிருந்த ஜன்னலருகே சென்று நோக்கினார். இருட்டில் ஒன்றும் புரியவில்லையானாலும் ஜன்னல் வழி வெளியே சற்று வெளிச்சமா யிருந்தது. ஜன்னலின் பக்கம் தலையை உயர்த்தியதும் ஒரு துப்பாக்கி வெடி சப்தம் கேட்கவும், ஜன்னலின் கண்ணாடி உடைந்து விழுந்தது. அதே தருணம் முகுந்தன் ஓடி வந்து வெங்கோபரை விளித்து 'ஏதாவது காயம் பட்டதா சார்!' எனப் பயத்துடன் வினவினான்.

'காயமொன்று மில்லை. இருந்தாலும், என் முட்டாள்தனம் தான் அது. அதோ அந்த வெளிப்புறத் தாழ்வாரம் போன்ற இடத்தில் இரு மருங்கினும் பலர் இருக்கின்றனர்போ லிருக்கிறது' எனக் கூறினார் வெங்கோபர்.

இவர்கள் வெளியே போகக்கூடிய வழியெல்லாம் காக்கப்படுகின்றன. கட்டிடத்தை விட்டு வெளியே வர ஜன்னல் ஒன்றுதான் இருக்கிறது. வெங்கோபர் சிறிது ஆலோசித்து ஏதோ சில இரகசியமாக முகுந்தனிடம் கூறினார். இருவரும் சப்தமிடாமல் முழங்கால் படியிட்டுத் திரைச்சீலையை மெதுவாக உயர்த்தி, ஜன்னல் அடிப்புற உயரத்துக்குத் தலையை உயர்த்திக்கொண்டு வெளியே நடப்பதைக் கவனிக்கலாயினர். ஆக, ஜன்னலைவிட உயரமான இடத்தில் ஒருவன் இருந்தால்தான் இவர்களைச் சுடமுடியும். கையில் கைக்குட்டையைக் கட்டிக்கொண்டு உடைந்து போன அக் கதவுகளின் தாளை நீக்க கையை உயர்த்தினார் வெங்கோபர். அதே நிமிடம் 'அதோ பாருங்கள் சார்! அதோ என்ன அது!' எனத் திகைப்புடன் கூறிக்

கொண்டே ஜன்னலின் வழி வெளியே உயரத் தெரியும் ஏதோ ஒன்றைச் சுட்டிக் காட்டினான் முகுந்தன்.

வெங்கோபரும் அதையே கவனித்தார். அவர்கள் நின்ற அச் சுவர் பக்கம் உயரத்தில் மேல் மாடியில் வெளியே சற்று நீண்டு இருக்கும் ஒரு கட்டையிலிருந்து கட்டப்பட்டு ஒரு கயிறு தொங்க விடப்பட்டிருந்தது. அக் கயிற்றின் வழியாக ஒரு உருவம் கீழே இறங்கிக்கொண்டிருந்தது. இறங்கிவரும் அவ்வுருவம் வேறொரு உருவத்தைத் தாங்கி வரக் கண்டனர். இருவரும் அப்படி தூக்கி வரப் பட்ட உருவம் ஸ்மரணை இல்லாதிருக்க வேண்டுமென ஊகித்தனர் இருவரும். அம்மனிதர் ரொம்பவும் ஜாக்கிரதையாக இறங்கிக்கொண்டிருந்தார்.

அதே சமயம் வெளிப்புறத்தில் சதிகாரர்கள் இருவர் கயிற்றின் மற்றொரு நுனியைக் கவனித்தவண்ணம் கீழே நின்றுகொண்டிருப்பதைக் கண்டார் துப்பறிபவர். இருவருள் ஒருவன் உள்ளே இருக்கும் மற்றவர்களைக் கூட்டிவர ஓடினான் போலும். கையில் தயாராகச் சுடவிருக்கும் விதத்தில் பிடித்த கையுடன், வெங்கோபர் முகுந்தனிடம் 'எதற்கும் என்னுடன் கூட வெளியே குதிக்கத் தயாராயிரு' என எச்சரித்தார்.

இருவருள் ஒருவன் உள்ளே ஓடிய அதே தருணம் வெங் கோபர் ஜன்னலைத் திறந்துகொண்டு வெளியே குதித்துவிட்டார். அங்குக் காவலிருக்கும் கள்ளனருகே செல்லவும் அவனும் திரும்பினான். தன் நிலையை உணர்ந்தவனாய் வெங்கோபரை நோக்கிச் சுட்டான். இதனை முன்பே எதிர்பார்த்த வெங்கோபர் சுடப்பட்ட சமயம் சட்டென ஒருபுறம் ஒதுங்கிச் சரேலென அவன்மீது பாய்ந்து ஓர் அறையில் அவனைக் கீழே வீழ்த்தினார்.

மறுவினாடி கீழே இறங்கும் மனிதரை நோக்கி 'சீக்கிரம்! பரமானந்தர்! சீக்கிரம்! சிரமத்தைப் பாராது குதித்து விடுங்கள். பயப்பட வேண்டாம்! முகுந்தன் பார்த்துக் கொள்வான்!' என்று துரிதப்படுத்தினார் வெங்கோபர். முகுந்தனும் அதற்குத் தயாராயிருந்தான். கீழே இறங்கும் பரமானந்தருக்குப் பயம் நீங்கியது என்றே சொல்லவேண்டும். அடுத்த வினாடி தடாலெனக் கீழே குதித்தார் அவர். முகுந்தன் அவரைப் பிடித்துக்கொண்டான்.

'நண்பரே! நான் வெங்கோபன். பயப்படாதீர்கள். அப் பெண்ணை என்னிடம் கொடுங்கள். பயப்பட வேண்டாம்' என உறுதி கூறவே பரமானந்தரும் இசைய, அடுத்த வினாடி பெண்ணை ஒரு கையில் தூக்கிக்கொண்டு ஒரு கையில் ரிவால்வரைப் பிடித்துக் கொண்டு ஓடினார். ஓடும் சமயம் கட்டிடத்துள் ஆள் நடமாடும் சப்தமும், ஏதோ சிலர் கூவும் சப்தமும் காதில் விழுந்தது. முகுந்த



னும் பரமானந்தரும் பின்பற்றிவர வெங்கோபர் தீனதாரிணியைத் தூக்கிக்கொண்டு காரேஜை நோக்கி ஓடினார் அவ்விருட்டில்.

அப்பொழுதும் அவர் தீர்க்கமாய் யோசித்தார். இச்சமயம் மோட்டாரில் ஓடினாலும் சென்னைக்குப் போகும் தனி வழியில் சங்கடம்தான். இச்சதிகாரர்கள் கொலைக்கு மஞ்சாத பாவிகள். காரேஜை அணுகியதும் முகுந்தன் காரேஜைத் திறக்கத் துரிதமாக காரேஜினுள் நுழைந்து, கதவைத் தாளிட்டுக்கொண்டனர் நால்வரும். வெங்கோபரும் நேராக காரை கவனித்தவண்ணம் தான் முதல் முறை அவ்விடம் ஏறி வந்த மோட்டாரைக் கவனித்துக் கதவைத் திறந்து தீனதாரிணியைச் சீட்டில் படுக்க வைத்தார். வெங்கோப ரோடு கூடவந்த பரமானந்தரும் காரில் ஏறினார். வெளியே பலர் ஓடுவதும் கூச்சலிடுவதுமாக இருந்தது. (தொடரும்)


## தைலாமிர்தம்

5 பலம் கொண்ட டின்
1-க்கு ரூபா 1.

இத் தைலம் பல வித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும், பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி, மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தி தீட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்புவலி, மண்டைக் குத்தல் இவை போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

விலாசம்:

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# தொழிலாளர் துயரம்

[காரமடை S. குழந்தைசாமி]

**உலகில்** அப்போதைக் கப்போது பல வகைப்பட்ட கக்ஷிகள் தோன்றி, அவை ஒன்றோடொன்று எதிர்த்து வென்றும் தோற்றும், மறைந்தும் வந்திருக்கின்றன. ஆனால் உலகம் தோன்றிய நாள் முதல் இதுவரை ஏழை பணக்காரன் என்ற இரு பெரும் கட்சிகள் இருந்து வருவது மன்றி, பணக்காரன் கட்சி ஏழைக் கட்சியை அடிமையாக்கி முதன்மை ஸ்தானம் வகித்தே வந்திருக்கிறது. தேச சரித்திரத்தில் அப்போதைக் கப்போது வறுமையால் துன்புற்ற ஏழையின் கட்சி, பணக்காரக் கட்சியைத் தோல்வியுறச்செய்து தான் தலை தூக்கியதுபோல் தோன்றினாலும், அது வெறும் வெளித் தோற்றமாகவே காணப்பட்டு, சொற்ப நாழிகைக்குள் ஏழையின் வெற்றி அடியோடு மறைந்து, செல்வவான்களது ஜெயக்கொடியே பறக்கலாயிற்று என்று காண்கிறோம். பணக்காரக்கட்சியை அடக்கி, நிரந்தரமான வெற்றிகொண்டு இன்புற்று வாழ்ந்த 'வறுமையாளர்கள்' எத்தேசத்திலும் இருந்ததாகத் தேச சரித்திரத்தில் குறிப்பிட வில்லை.

நிற்க, தற்காலத்தில் ஏற்பட் டிருக்கும் பொருளாதார நெருக்கடியினாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும் மிகுந்த துன்பத்திற் குள்ளாகிப் பரதவிக்கும் மக்கள் ஏழை மக்களே யாகும். அதிலும் தொழிலாளர் படும் துயரத்தைச் சொல்லத் தரமன்று. ஒவ்வொரு யந்திரசாலையிலும், தொழிற்சாலையிலும், பண்ணையிலும் வேலை ஆட்களைக் குறைத்துக்கொண்டே வருவதன் மூலம் ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான மக்கள் வேலையின்றி வெளியேறுகின்றனர். நமது நாட்டில் தொழிலாளர்கள் எல்லோரும் அனேகமாக அவர்கள் வாங்கும் 'கூலி'யைக் கொண்டு ஜீவிப்பவர்களே தவிர, அவர்களுக்கு வேறு பூஸ்திதியோ, ரொக்கப் பணமோ கிடையாது. அனேகர் குடி யிருக்கவும்கூடக் குடிசையின்றிக் குடிக்கூலிக்கு வாழ்ந்து வருபவர்கள். இத்தகைய நிலையில் அவர்களுக்கு வேலையுமில்லையென்று வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டால் அவர்களுடைய நிலைமை என்னாவது? எங்கும் பணப்பஞ்சம் வாட்டும் இக்காலத்தில் அவர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றுவதெப்படி? 'முதலாளிகள்' எனப்படுவோர் வேலை செய்து அன்றாடம் கூலி பெற்று ஜீவிக்கும் ஜனங்களைப் போல் நாளை சாப்பாட்டிற்கு என்ன செய்வது, வீட்டு வாடகைக்கு என்ன செய்வது, துணிக்கு என்ன செய்வது, குழந்தை பிறந்துவிட்டதே அதற்கு வகை என்ன? அதற்குப் பாலுக்கு எங்கே போவது? படிப்புக்குப் பணம் எங்கே? வியாதி வந்துவிட்டதே! வைத்தியனுக்குப் பணம்



எங்கே? என்பது போன்ற கவலைகளை அவர்கள் உணர்ந்திருப்பார்களேயானால் இவ்விதம் ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான மக்கள் வேலையின்றித் திரும்பும் நிலைமை ஏற்படுமா என்று யோசித்துப் பாருங்கள்.

நாள் முழுவதும் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த தசைநார்கள் நூற்பிரிகள்போல் வெளியில் தெரிய பாடுபட்டு உழுகின்றவர்கள், கொத்துகின்றவர்கள், விதைப்பவர், நடுபவர், உரிய காலத்துத் தண்ணீர் பாய்ச்சி வடிப்பவர், அறுப்பவர், பிரிப்பவர், தானியத்தைக் குவிப்பவர், கட்டிடங் கட்டி ஆலைகள் பொருத்தித் தங்கள் உயிரையும் கொடுத்து உழைத்துக் கோடிக்கணக்கான மதிப்புள்ள சரக்குகளை உற்பத்தியாக்கி லக்ஷக்கணக்கில் லாபம் சம்பாதித்துக் கொடுப்பவர், ரயில் வண்டிகள் என்ஜின்கள் முதலியன செய்து பாதைகள் செப்பனிட்டு வண்டித் தொடர்களைச் செலுத்தி ஜனங்களையும் (Passengers) சாமான்களையும் (Goods) ஆங்காங்கு கொண்டு போய்ச் சேர்த்து அளவற்ற திரவியத்தை ஈட்டித் தருபவர் ஆகிய இன்னோரன்ன பணிகளைப் பழுதிலாது செய்து முடிப்பவர் ஏழைத் தொழிலாளர்களே யாவர்.

அப்படி யிருந்தும், யாதொரு வேலையும் செய்தறியாமல் அறுசுவை அன்னத்தைப் பசியின்றிப் புசித்துக்கொண்டும், மாடியில் 'விர்' என்று வீசும் மின்சார விசிறிக்கடியில் 'ஸ்பிரிங்' கௌச்சில் உட்கார்ந்து திண்டில் சாய்ந்துகொண்டு தூங்கி விழுபவர்களும், ஏழைத் தொழிலாளர்கள் இரத்தத்தைப் பிழிந்தெடுத்த ரூபாயைக்கொண்டு வாங்கப்பட்ட ரோல்ஸ்ராய்ஸ் காரில் மனைவியுடன் உட்கார்ந்துகொண்டு பீச்சுக்குச் சென்று காற்று வாங்குபவர்களுமான பணக்காரர், முதலாளி, நிலச்சுவான்தார் என்று தங்களைத் தாங்களே சொல்லிக் கொள்ளும் ஒரு சிறு கூட்டத்தார், ஏழைத் தொழிலாளர்களது கூலியைக் குறைப்பதும், ஆட்களை வேலையைவிட்டு விரட்டி அடிப்பதும்தான் தங்கள் நோக்கமாகக் கொண்டிருக்கிறார்களே தவிர, மற்றபடி அவர்கள்பால் இரக்கம்கொண்டு அவர்களுக்கு இம்மியளவு நன்மையாவது உண்டாக்க முன் வருவதாகக் காணோம். இன்று பணக்காரர்களாகவோ, நிலச்சுவான்தாரர்களாகவோ, முதலாளிகளாகவோ இருந்துகொண்டு 'சுகம்' அனுபவிப்பதற்குக் காரணம் ஏழைத் தொழிலாளர்கள்தான் என்பதையும், நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், வியாபார விருத்திக்கும் காரணமா யிருப்பவர்கள் தொழிலாளர்கள்தான் என்பதையும் அவர்கள் உணர்வதில்லை.

ஏதோ சிலர் தொழிலாளர் சங்கம் என்றும், பொதுஜன சேவா சங்கம் என்றும் ஏற்படுத்திக்கொண்டு தொழிலாளர்களிடத்தில்

அனுதாபம் காட்டுவதாகப் பாசாங்கு செய்கிறார்களே தவிர, மற்றபடி அவர்களால் தொழிலாளர்களுக்கு எத்தகைய நன்மையும் உண்டாவதாகக் காணோம். மழையால் உப்பு மூட்டைக்காரன் அழும்போது தேங்காய் மூட்டைக்காரனும் சேர்ந்து அழுதானாம் என்ற கதையைப்போல் ஏழைகள் கண்ணீர் வடிக்கும்போது சில பணக்காரர்களும் துக்கம் கொண்டாட ஆரம்பிக்கிறார்கள். அவ்வளவுதான். பிதிர் ராஜ்ஜியமான ஆயிரக்கணக்கான வேலி நிலங்களைத் தமது ஒருவருக்கே, பட்டா செய்துகொண்டு, டஜன் கணக்கில் தண்டவாளப் பெட்டிகளில் தங்கக்கட்டிகளை நிரப்பி அழகு பார்த்து, உத்தியோக விஷயத்தில் படிப்படியாய் உயர்ந்து, சமஸ்தான திவான் வேலையிலிருக்கும் பிரபு 'இன்னும் நாம் மகாராஜா ஆகவில்லையே' என்று துக்கப்படும் மேற்படி திவானுடைய விசனமும், வயிறு சோறு கண்டு மூன்று தினங்களாயின, கல்லையும் மண்ணையும் தின்று ஜீவிக்கும்படி நமது வயிறு அமையப் பெறவில்லையே!' என்று கையால் அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு சுருண்டு படுத்திருக்கும் ஏழையின் வறுமைக் கொடுமையும் ஒரே சமமான துக்கம் என்று கூறிவிட முடியுமா!

காலை முதல் மாலை வரை பாடு படுபவர் ஏழைகள். எத்தொழிலும் செய்யாது தானியத்தை மூட்டை கட்டிக்கொண்டு போகின்றவன் முதலாளி. தொழிற்சாலையில் பாடுபடுபவன் ஏழை. லாபம் அடைபவன் முதலாளி. வீடு கட்டுபவன் ஏழை. அதில் போய் குடியேறுபவன் சும்மா யிருந்த முதலாளி. நெய்பவன் தொழிலாளி. பலன் பெறுவது—சுகம் அடைவது முதலாளி. பாடுபடுவது பங்கமடைவது தொழிலாளி—என்னே கொடுமை !

இவ்வாறாக ஒவ்வொரு நாட்டிலும் முதலாளி தத்துவம் தாண்டவமாடுவதற்கு அரசாங்கமும் அனுசரணையாகவே இருந்து வருகிறது என்று சொல்லலாம். முதலாளிகள் இஷ்டம்போல் ஆடும் ஒரு பதுமை போலவே அரசரும் இருந்து வருகிறார்கள். தொழிலாளர்கள் கூடித் தங்கள் கஷ்டத்தைக் குறைத்துக் கொள்வதற்கும் தங்கள் வேலைக்குத் தக்க கூலி பெறுவதற்கும் முயற்சி செய்தால் உடனே அரசாங்கம் குறுக்கிட்டு 'சட்ட விரோதமான காரியம் செய்ததாகக் குற்றம் சாட்டுகிறது. தொழிலாளிகளை மோசம்செய்து அவர்களை வாட்டி ஹிம்சித்து வேலை வாங்கி வயிறாறக் கஞ்சிக்கும், இடுப்பாறத் துணிக்கும், வெயில் மழை மேல்படாமல் குடியிருக்க வீடுக்கும் வகையில்லாமல் கொடுமைப் படுத்தும் முதலாளித் தத்துவத்தை அரசாங்கம் ஆதரிக்கிறது. அரசாங்கம் தொழிலாளர்களுடையதாகுமானால் தொழிற் சாலைகளில் கிடைக்கும் லாபம் எல்லாம் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும். வேலை நேரத்தைக்



குறைத்து, ஆட்களை அதிகப்படுத்தி ஜீவனத்திற்கு வேண்டியதைச் செய்ய முடியும். தொழிலாளர் ஆட்சிசெய்யும் அரசாங்கம் நடக்கும் ரஷ்யா போன்ற நாடுகள் அதற்கு அத்தாட்சியாகும். அங்கு ஒருவர்கூட வேலையில்லாமலில்லை. ஒருவருக்காவது நாளைக்கென்ன செய்வது என்ற கவலை கிடையாது.

ஆதலால் தொழிலாளர்களுடைய நிலைமை சீர்படவேண்டுமானால், தற்போதுள்ள வேலை நேரத்தைக் குறைத்து, விடுமுறை நாட்களை அதிகப்படுத்தி, அதிக ஆட்களைத் தொழிற்சாலைகளில் சேர்க்கும்படி போராட வேண்டும். அவ்விதம் சட்டம் இயற்றப்பட வேண்டும். அதற்காகச் சட்டசபைகளில் தொழிலாளர்களுக்காகப் பாடுபடும் உண்மைப் பிரதி நிதிகள் இருக்க வேண்டும். தற்போதைய சட்டசபைகளில் 100க்கு 90 பேர் முதலாளிகளினத்தைச் சேர்ந்தவர்களாகவே—அவர்களை ஆதரிப்பவர்களாகவே இருக்கிறார்கள். தொழிலாளர் குறைகளைக் கவனிக்கக் கூடியவர் ஒருவர்கூட இல்லையென்றே சொல்லலாம். ஏதோ சிலர் தொழிலாளர்கள் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் அங்குச் சென்றவுடன் முதலாளிகளுடைய வலையில் சிக்குண்டு, அவர்களுடைய யோசனைக்குக் கட்டுப்படுவதுடன் அவர்களும் முதலாளிகளாகப் பார்க்கிறார்கள். அனேகர் முதலாளிகளாகவே ஆகிவிடுகின்றனர். சிலர் முதலாளிகளுக்கு உளவாளிகளாக இருந்து தொழிலாளிகள் நலத்தை விற்றுத் தொழிலாளிகளைக் காட்டிக் கொடுத்துவிடுகிறார்கள்.

ஆதலால் தொழிலாளர்கள் நலம் பெற வேண்டுமானால் அவர்கள் நித்திய தூக்கத்திலிருந்து விழித்தெழ வேண்டும். ஆங்காங்கு சங்கங்கள் நிறுவ வேண்டும். அவற்றை முதலாளிவர்க்கம் நிர்வகிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வித சங்கத்தின்மூலம் சட்டசபைகளுக்குப் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும். அப்பிரதிநிதிகள் சரீரத்தால் பாடுபடும் தொழிலாளியாகவே இருக்க வேண்டும்.

சட்டசபைத் தேர்தலுக்கு நிற்பவர்கள் எக்கட்சியைச் சேர்ந்தவர்களா யிருந்தபோதிலும் (காங்கிரஸ்காரரா யிருந்தாலும் சரி, ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர்களா யிருந்தபோதிலும்) தங்களுடைய நிலையை அனுதாபத்துடன் கவனிக்கக் கூடியவர்கள் யார் என்பதை நன்கு உணர்ந்து அன்றைக்கே தங்கள் வாக்குரிமையைக் கொடுக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு தொழிலாளியும் மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

20664
N3194

# துக்க ஜீவியத்தின் பேரொலி

[M. L. S. மணி]

காலை ஏழு மணி. கதிரவன் தன் பொற் கிரணங்களை மரம் செடி, கொடி இவைகளின் இலைகளின் ஊடே செலுத்தும் இயற்கை காட்சியில், கிணற்றினருகில் நின்று பல் தேய்க்கும், ஓர் மாநிறமுடைய வாலிபனின் மனம் என்றுமிலா குதூகலத்தால் கட்டுண்டு விட்டது. ஏன்? அவன் இதுவரை, இப்பேர்ப்பட்ட இயற்கையின் ரம்மியமான தோற்றத்தை, அநுபவிக்க முடியாத காலங்களில் படுக்கையினின்றும் அப்பால் படுவதால் தான். அவனுடைய கட்டுமஸ்தான தேகம் அவனை எந்த நிமிஷமும் கர்வித்துக்கொண்டே இருக்கும். அதையே இப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருக்கையில், சாளரத்தின் கோடியிலிருந்து 'டே, ராமு! உன் தகப்பனாரைப் பார்க்க என்னமோ ஒரு மாதிரியாயிருக்கு, நீ! வந்து அதைக் கவனி' என்ற தொனி ஆகாயத்தில் மோதியது.

ராமுவின் கைகள் மிகுந்த பரபரப்புடன் வாயைச் சுத்தம் செய்தன. பிறகு உள்ளே சென்று கவனிக்கையில், 'உன்னை பத்து வகுப்புவரை படிக்க வைத்ததும், இவ்வளவு நாட்கள் செலவு செய்ததும், இந்தச் சிறிய வீடுந்தான் எனது ஆஸ்தி. ஆனால், கடனீ எதுவும் உன்னை மொய்க்காது. இலவசமாக எதையும், எவரிடமும் வாங்காதே. எக்காலமும் உண்மை பேசு' என்ற மங்கிய தொனி, ஓர் மூலையில் கிடத்தியிருக்கும், உருவத்தின் வெற்றிலை மெல்லும் கருவியின் வழியாகக் கக்கப்பட்டது. ஒரு நிமிஷம் இவர்களுக்கிடையில் நிசப்தம். பெரியவரின் கலங்கிய கண்கள், இவனை நோக்கியவாறே, இமைகளின் உட்புறத்தில் மறைந்தன.

பிறகு, தாயும், மகனும், ஏழ்மையும், துக்கமும் கலந்த கதம்பக் கவலையுடன் பெரியவரின் உடம்பைத் தகனம் செய்தார்கள்.

அக் கிராமத்தில், தண்ணீர் கஷ்டம், பிணி, வறுமை, திருட்டு, முதலியவைகளின் எண்ணிக்கைகள் உயரவே, இரவு 12 மணி அளவிற்குத் தாய்க்குத் தெரியாமல், வீட்டின் ஓர் மூலையிலிருந்து, துவங்கும் வழியாக தன் நீண்ட கால்களை, மாறி மாறி நிலத்தில் பாவி, மற்றோர் இடத்திற்குச் சென்றுகொண்டிருந்தான். இதுதான் அவனுடைய கால்கள் செய்யும் அப்போதைய வேலை. அதிக நாட்களுக்கு முன் சந்தித்த உருவத்தை நினைப்பதும், கிட்டாததின் விவரிக்க முடியாத துக்கமும், இவை போன்ற அவனது கழிந்த செய்கைகள், சங்கிலித் தொடர்போன்று குறுக்கிடவே, அவனது இளமனம், நிமிஷத்திற்கு நிமிஷம் குலைவதும், பழைய நிலைக்கு வருவதுமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கையில், அவனை அறியாது, சாலையின்



ஓரமாகக் கிடந்த முள் ஒன்று வலது காலில் தைத்தது. ஏற்கனவே, இடிந்த மனம், முள்ளின் அவஸ்தை, இரவில் சப்திக்கும் பல பிராணிகளின் பயங்கர கோஷம், களைப்பு இவைகளால் கட்டுண்ட நமது வாலிபனின் உடம்பு தரையில் சோம்பிக் கிடந்தது.

கிழக்கே வெளுத்தது. இயற்கை நம் நாட்டிற்கேற்ப, அதனை தன்னிடத்தில் புகுந்து ஆட்சி புரியலாயிற்று. சாலையின் ஓர் மூலையில், வண்டியின் தோற்றம் நெருங்க நெருங்க, மாடுகளின் மணி ஓசை, நம் வாலிபனின் காதைத் துளைத்தது. கொஞ்சம் ஓர் பக்கம் திரும்பி கண்களைத் திறக்க முயன்றும், அவைகள் சூரியனின் கிரணங்களால் வெட்கமடைந்து இமைகளால் இறுக்கப்பட்டன. தேகமனைத்தும் புழுதி படிந்திருந்ததால், குயவன் செய்த உருவமோ, என மதிக்க நேரிட்டது. வண்டி அவனருகில் வந்ததும் சக்கரங்கள் அசைவின்றி நின்றன. மாடுகள், தங்கள்மேல் உட்கார்ந்து அடிக்கடி தொந்தரவு செய்யும் ஈக்களுக்கு, வாலினால் தகுந்த பாடங்களைக் கற்பித்தன. வண்டி ஓட்டி புழுதியடைந்த மேனியிடம் வந்து, 'அப்பா! ஏன் இவ்விதம்? ஊர், பெயர் என்ன?' என்று கேட்டான். செம்மேனி, காலின் ஓர் பகுதியைக் காட்டிற்று. அதில் பதிந்திருந்த முள், வலிமை பொருந்திய கரத்தால் அகற்றப்பட்டது. எதுவும் பதில் இல்லை. புழுதி உடம்பு வண்டியில் புகுத்தப்பட்டது. வண்டி சாலையின் நெடுக ஓட்டப்பட்டது.

பிறிதோர் சிறு கிராமம் அச் சாலையிலிருந்து ஆரம்பமாயிற்று. வண்டியோட்டியின் இரு கால்களும் காளைகளின் வயிற்றில் உதைந்தவாறே இருந்தன. வண்டி விரைவாக சப்தத்துடனும், தூசியுடனும் செல்லுகையில், உள்ளே பரப்பப்பட்டிருந்த வைக்கோலின் நுனி, ராமுவின் கண்களில் குத்தவே, சப்தம் செய்யாது, வேஷ்டியின் உதவியால் கண்ணைத் துடைத்தவாறே விதியை நினைந்து துக்கித்தான். வண்டியும் நான்கு வீடுகளுக்குப் பின்னர் நின்றது. அவ்விடத்தில், ஓர் ஓடு தாங்கிய வீடு—இரண்டு வேப்ப மரங்களின் அசைகின்ற நிலைமை—கோழிகளின் நடனங்கள், நாய்கள் காலையில் ஓர் வஸ்துவை வெகு பிரியத்துடன் தேடும் நிலை. இவைகளனைத்தும் அவ்வீட்டோரத்தில் நடந்தன.

வண்டி நின்றதும், வீட்டினின்று ஓர் இளம் பெண் வெளியில் வந்து, வண்டியின் உட்புறத்தை நோக்கவே, அவளையறியாமல் கண்கள் நீரைக் கக்கின. இதைக் கண்டயுவன் கண்களை பன்முறை தேய்த்தான். இக் காட்சி எஜமானனுக்கு வண்டிக்காரனால் அறிவிக்கப் படுகிறது. உடனே இருவரும் உடையார் முன் நிறுத்தப் பட்டார்கள்.

உடையார்:—உன் பெயர் என்ன?

'ராமு' என்ற தொனி கேட்டது.

உடை:—எந்த ஊர், ஏன் இவ்வித நிலையி லிருக்கிறாய்?

என்னுடைய ஊர் இங்கிருந்து 15 மைல்களுக்கு அப்பால் உள்ளது. என் நிலைமை மிகவும் துக்க கரமானது. அதை இப்பொழுது வெளியிட மனமில்லை. பின் ஒருகால் தெரிவிக்கிறேன். பசி வயிற்றைக் கிண்டுகிறது' என்று கூறியவாறே, கண்கள் தாணல்டை நோக்கின.

இப்பொழுது புழுதி உடம்பு, உள்கட்டிற்குச், சுமந்து செல்லப் பட்டது. அவளும் பின் தொடர்ந்தாள். அவளுடைய கண்கள் இரத்தம் தோய்ந்த பாகத்தைக் கண்டு திருதிருத்தன. தேகமனைத்தும் தண்ணீரால் சுத்தம் செய்யப்பட்டு, ஆகாரம் வயிற்றை நிரப்பிற்று. புவனம் என்ற சத்தம் கேட்டது.

இரண்டு உருவங்களில் ஒன்று குறைந்தது. ஓரிடத்தில் கூடியது.

உடையார் மீசை துடிக்க, அவனை நீ காதலிப்பது போலல்லவா தோன்றுகிறது. அவனை எனக்குத் தெரியாதது போலல்லவா அவனுடைய விருத்தாந்தங்களைக் கேட்டேன். என்னுடைய அனுமதியின்றி எதையும் செய்ய நினைத்தால், என்னை நீ காண்பதரிது என்று முழக்கினர். பிறகு சோபாவில் உடையார் தூங்குவதுபோல் தோற்றவே, புவனம் மெதுவாக நழுவினாள் நமது வாலிபனண்டை. இருவருடைய கண்களும் அன்றலர்ந்த மலர்போல் பிரகாசித்தன. அவளது கைகள் அவனது மூக்கால் நுகரப் பட்டது. அவர்களின் கரங்கள் ஒன்றோடொன்று தோழமை கொண்டன. ஏதோ இது பரியந்தம் அனுபவியாத ஒன்றை இன்று அனுபவிக்கக்கூடிய அறிகுறிகள் இருவர் மனத்திலும் புகுந்து உற்சாகத்தை மூட்டி ஆனந்தத்தை வழிந்தோடும்படி செய்தது. அவனுடைய முகம், அவளது துடையின்மேல் கிடத்தப்பட்டு, ஒவ்வொருவர் கண்களும் காதலுடன் பிரகாசித்தன. அதுசமயம் குழலி லிருந்து ஓர் ரவை, பயங்கர சப்தத்துடன் இவர்கள் உயிரை கவர்ந்து சென்றது. அந்தோ! இளம் கன்றுகள் பல இவ்விதமே உலகத்தில் பற்பல இன்னல்களுக்கு ஆளாகி உயிர் துறக்கின்றன. கதிரவன், இச் செயலைக் கண்டு துடிப்பதுபோல் தன்னுடைய பொறிகளுக்கு அதிக உஷ்ணத்தை ஏற்றி முறுக்கி, புற்பூண்டுகள், தாவர வர்க்கங்கள், உடையாரது கொடியில் காயும் வேஷ்டிகள், இவைகளையெல்லாம் பஷ்பமாக்கிக் கொண்டே சஞ்சரித்தான்.

# விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்

## ஷரத்துக்களின் விவரம்

சென்னை சட்ட சபைகள் நிறைவேற்றி வைத்த விவசாயிகள் கடன் நிவாரண மசோதா ராஜப்பிரதிநிதியின் அங்கீகாரம் பெற்று அமுலுக்கு வந்துவிட்டது. அதன் விவரங்களை எல்லோரும் தெரிந்து கொள்ளுவதற்காக முழு விவரத்தையும் கீழே பிரசுரஞ் செய்கிறோம்.

சென்னை மாகாணத்தில் கடன்பட் டிருக்கும் விவசாயிகளுக்குப் பரிகாரம் அளிப்பதற்காக நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமா யிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுவது என்னவென்றால்:—

### 1-ம் அத்தியாயம்—பீடிகை

சுருக்கமான பெயர்

1. இந்த ஆக்டை, விவசாயிகளுக்குப் பரிகாரம் அளிப்பதைக் குறித்த 1938-ம் வருஷத்திய சென்னைப்பட்டணத்து ஆக்ட் என்று சொல்லலாம்.

வியாபகம்

2. இது சென்னை மாகாணம் முழுவதும் வியாபிக்கும்.

அர்த்தம்

3. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்.

(i) 'நபர்' என்பது யாதொரு தனி நபர் என்று அர்த்தமாவது மல்லாமல், யாதொரு அவிபக்தஹிந்து குடும்பம் என்பதும் யாதொரு மருமக்கத்தாயம் அல்லது அலியசந்தான தரவாடு அல்லது தாவழி என்பதும் அதில் அடங்கும்; ஆனால், சட்டப்படிச் சேர்ந்த ஒரு சபை என்பதாவது தரும சம்பந்தமான அல்லது மத சம்பந்தமான ஒரு ஸ்தாபனம் என்பதாவது சட்டப்படிச் சேர்ந்திராத ஒரு கம்பெனி அல்லது சங்கம் என்பதாவது அதில் அடங்காது;

(ii) விவசாயி என்பது—

(a) சென்னை மாகாணத்திலே யாதொரு மியுனிஸிபாலிடி கண்டோன்மென்டுக்குள் இருக்கும் நிலமா யிராமல்,

மாகாணகவர்மென்டாரால் நிலவரி விதிக்கப்பெற்றிருக்கும் அல்லது கவர்ன்மென்டாரால் கொடுக்கப்பட்ட அல்லது ஊர்ஜிதம் செய்யப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட யாதொரு க்ரான்டின்படி வரியில்லாமல் கைப்பற்றில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் யாதொரு விவசாய நிலத்தில் அல்லது தோட்டக்கால் நிலத்தில் விற்பனை செய்யத்தக்க பாத்தியதையுள்ள யாதொரு நபர் என்று அர்த்தமாகும்; (மேற்படி நிலவரியில் பேஷ்கஷ் என்பதும் க்விட்ரென்ட் என்பதும் அடங்குவதாகக் கருதப்படும்;) அல்லது,

(b) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டின்படி யாதொரு நிலத்துக்குடையவரின் கீழ் பாயக்காரியாகவோ ரயத்தாகவோ கீழ்க்குத்தகைதாரராகவோ மேற்படி நிலத்தில் பாத்தியதையுடைய யாதொரு நபரென்று அர்த்தமாகும்; அல்லது,

(c) மேற்படி நிலத்திலே, மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பாத்தியதையுள்ள யாதொரு நபரென்று அர்த்தமாகும் அல்லது,

(d) (a) (b) அல்லது (c) உட்பகுதியில் குறிப்பிட்டுள்ள எந்த நபரிடமிருந்தாகிலும் மேற்படி நிலத்தின் குத்தகைபெற்றிருக்கும் அல்லது மேற்படி நிலத்தின் கீழ்க்குத்தகைதாரரா யிருக்கும் யாதொரு நபரென்று அர்த்தமாகும்;

ஆனால் யாதொரு நபர்—

(A) 1938-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந் தேதியோடு முடிவாகும் இரண்டு அரசிறை வருஷங்களில் ஏதாவது ஒன்றில் 1922-ம் வருஷத்திய இந்துதேசத்து வருமானவரி ஆக்டின்படியாகிலும் யாதொரு இந்திய சமஸ்தானத்தின் அல்லது அன்னிய கவர்ன்மெண்டின் வருமானவரிச் சட்டங்களின் படியாகிலும் வருமானவரி விதிக்கப்பெற்றிருந்தாலும்,

(B) 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந்தேதிக்கு அடுத்து முந்தியுள்ள இரண்டு வருஷங்களுக்குள், 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடிகள் ஆக்டின்படியாவது 1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப் பட்டணத்து முனிசிபல் ஆக்டின்படியாவது 1924-ம் வருஷத்திய கன்டோன்மென்டுகள் ஆக்டின்படியாவது ப்ரிட்டிஷ் இந்தியாவிலுள்ள வேறெந்த மாகாணத்திலும் யாதொரு இந்திய சமஸ்தானத்திலாகிலும் இந்தியாவிலுள்ள யாதொரு அன்னிய சமஸ்தானத்திலாகிலும் முனிசிபல் அல்லது பிரதேச அதிகார சபைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்தும் யாதொரு சட்டத்தின்படியாவது 1930-ம்



வருஷம் ஆகஸ்டு மாதம் 26-ம் தேதிக்கு முன் யூனியனாயிருந்த ஒரு பஞ்சாயத்தில் 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகள் ஆக்டின்படியாவது விவசாய மல்லாத வேறே யாதொரு தொழிலிலிருந்து கிடைத்த முந்நூறு ரூபாய்க்கு மேற்பட்ட அரை வருஷ வருமானத்தின் மேல் தொழில் வரி விதிக்கப் பெற்றிருந்தாலும்,

(C) 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்கு அடுத்து முந்தியுள்ள இரண்டு வருஷங்களுக்குள், 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிசிபாலிடிகள், ஆக்டின்படியாவது 1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப் பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டின்படியாவது 1924-வருஷத்திய கன்டோன்மெண்டுகள் ஆக்டின்படியாவது ப்ரிட்டிஷ் இந்தியாவிலுள்ள வேறே எந்த மாகாணத்திலாகிலும் யாதொரு இந்திய சமஸ்தானத்திலாகிலும் மியுனிசிபல் அல்லது பிரதேச அதிகார சபைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்தும் யாதொரு சட்டத்தின்படியாவது 1930-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 26-ந் தேதிக்குமுன் யூனியனாயிருந்த ஒரு பஞ்சாயத்தில் 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகள் ஆக்டின்படியாவது கட்டிடங்கள் விஷயமாய் அல்லது விவசாய நிலங்களல்லாத வேறே நிலங்கள் விஷயமாய் சொத்து அல்லது வீட்டுவரி விதிக்கப் பெற்றிருந்தாலும்,

(D) பூஸ்திகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டின்படி ஒரு பூஸ்திதியின் அல்லது அதன் யாதொரு பங்கு அல்லது பாகத்தின் நிலத்துக்குடையவராயிருந்து, அதன் பூஸ்திதி பங்கு அல்லது பாகம் விஷயமாய் 500 ரூபாய்க்கு மேற்பட்ட ஒரு தொகை பேஷ்கஷாகச் செலுத்தப்பட்டாலும். 100 ரூபாய்க்கு மேற்பட்ட ஒரு தொகை கவிட்ரென்டாகவோ ஜோடியாகவோ கட்டுப்படியாகவோ பொறுப்பு முதலியதாகவோ செலுத்தப்பட்டாலும், மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டின்படி ஒரு ஜன்மியாயிருந்து, 500 ரூபாய்க்கு மேற்பட்ட யாதொரு தொகையை நிலவரியாக மாகாண கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தினாலும்,

அந்த நபர் 'விவசாயி' என்று கருதப்பட மாட்டார்; ஆனால் மேலே (C) பகுதியில் குறிப்பிட்டிருக்கும் கட்டிடங்களும் நிலங்களும் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலுஞ் சரி, சொந்தக்காரரின் அனுபோகத்திலிருந்தாலுஞ் சரி, அவைகளின் வருஷாந்த மொத்த வாடகை மதிப்பு அல்லது குத்தகை மதிப்பு 600 ரூபாய்க்குக் குறைவா யிருக்கக் கூடாது.

விவரணம்:—(சி) விலக்கு நிபந்தனையின் காரியங்களுக்காக, யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் வருஷாந்த வாடகை மதிப்பு அல்லது குத்தகை மதிப்பானது—

(1) வருஷாந்த வாடகை மதிப்பை அல்லது குத்தகை மதிப்பை ஆதாரமாகக்கொண்டு வரிவிதிக்கப்படுகிற பட்சத்திலே, அந்த மதிப்பென்று கருதப்படும்.

(2) மூலதன மதிப்பை ஆதாரமாகக் கொண்டு வரி விதிக்கப்படுகிற பட்சத்திலே, மூலதன மதிப்பில் ஐந்து சதவீதமென்று கருதப்படும்;

(3) வேறே எந்த விஷயத்திலாகிலும், நிர்ணயிக்கப்பட்ட விதமாய் நிச்சயித்தறியப்பட்ட மதிப்பென்று கருதப்படும் ;

**(iii)** 'கடன்' என்பது யாதொரு விவசாயினிடமிருந்து ரொக்கமாகவோ வஸ்து ரூபமாகவோ சேரவேண்டியதாயிருக்கும் யாதொரு பொறுப்பு ஈடுகாட்டப்பட்டதா யிருந்தாலுஞ் சரி, ஈடு காட்டப்படாததா யிருந்தாலுஞ் சரி, யாதொரு ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டாரின் டிக்ரி அல்லது உத்தரவின்படிச் செலுத்தப்படத் தக்கதா யிருந்தாலுஞ் சரி, மற்றப்படிச் செலுத்தப்படத் தக்கதாயிருந்தாலுஞ் சரி, அப்படிப்பட்ட பொறுப்பு என்று அர்த்தமாகும்; ஆனால் அதிலே **(iv)** பகுதியில் அர்த்தம் சொல்லப்பட்டபடியுள்ள குத்தகைத் தொகை என்பதாவது மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்ட் 3 (1) (1) பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்ட படியுள்ள 'காரணார்த்தம்' என்பதாவது அடங்காது;

**(iv)** 'குத்தகைத் தொகை' என்பது பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்ட படியுள்ள குத்தகைத் தொகை, அல்லது மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்ட படியுள்ள குத்தகைத் தொகை மிச்சவாரம் அல்லது பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்ட படியுள்ள யாதொரு பூஸ்திதியின் நிலத்துக் குடையவருக்குச் செலுத்தப்படத் தக்க க்விட்ரென்ட், ஜோடி, கட்டுபடி அல்லது பொறுப்பு முதலியவைகளுக்காக யாதொரு ஸிவில் அல்லது ரெவின்யூ கோர்ட்டாரின் டிக்ரி அல்லது உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட் டிருந்தாலுஞ் சரி, இல்லாவிட்டாலுஞ் சரி, அந்தக் குத்தகைத் தொகை என்றாகிலும் மிச்சவாரம் என்றாகிலும் க்விட்ரென்ட் முதலியவை என்றாகிலும் அர்த்தமாகும்; மேலும், அதற்காகச் செலுத்தப்படத் தக்க வட்டி என்பதும் அதில் அடங்கும்;



ஆனால், யாதொரு ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட் மூலமாய் அதை வசூலிப்பது விஷயமாகப் பிடிக்கும் செலவுகள் என்பதாவது 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகள் ஆக்ட் 88-வது பிரிவின்படி நிலத்துக்குடையவரால் வசூலிக்கப்படத் தக்க லாண்ட் ஸெஸ் என்னும் நிலவரியின் பாகம் என்பதாவது அதில் அடங்காது; மேலும்,

**(v)** 'கடன்காரர்' (கடன் கொடுத்தவர்) என்பதில், அவருடைய வாரிசுகள் என்பதும், சட்ட சம்மதமான பிரதிநிதிகள் என்பதும், அவரிடமிருந்து ஒப்படை பெற்றவர்கள் என்பதும் அடங்கும்,

சில கடன்களும் பொறுப்புகளும் பாதிக்கப்பட மாட்டாவென்பது,

4. யாதொரு விவசாயிக்கு ஏற்பட்டிருப்பவைகளாய், அடியிற் கண்ட தலைப்புகளின் கீழ் வரும் கடன்களும் பொறுப்புகளும் இந்த ஆக்டில் கண்டதெதனாலும் பாதிக்க மாட்டா:—

(a) மாகாண கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தப்படத் தக்க யாதொரு தீர்வை, வரி அல்லது ஸெஸ், அல்லது கடனாகவோ மற்றப்படியோ அவர்களுக்குச் சேரவேண்டிய வேறே யாதொரு தொகை;

(b) மத்திய கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தப்படத் தக்க யாதொரு தீர்வை, வரி அல்லது ஸெஸ், அல்லது கடனாகவோ மற்றப்படியோ அவர்களுக்குச் சேர வேண்டிய வேறே யாதொரு தொகை;

(c) யாதொரு பிரதேச அதிகார சபையாருக்குச் செலுத்தப்படத் தக்க யாதொரு வரி அல்லது ஸெஸ் அல்லது கடனாகவோ மற்றப்படியோ அவர்களுக்குச் சேர வேண்டிய வேறே யாதொரு தொகை;

(d) யாதொரு மியுனிஸிபாலிடியிலாவது யாதொரு கன்டோன்மென்டிலாவது 1930-வருஷம் ஆகஸ்ட் மாதம் 26-ந் தேதிக்கு முன் யூனியனா யிருந்த யாதொரு பஞ்சாயத்திலாவது உள்ள வீட்டுச் சொத்தின் ஈட்டின் பேரில் மாத்திரமே வாங்கப்பட்ட யாதொரு கடன்;

(e) யாதொரு நில அடமான பாங்கி உட்பட, கோவாபரேடிவ் ஸொஸைடீஸ் என்னும் கூட்டுறவு சங்கங்களைக் குறித்த 1932-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் அல்லது ரெஜிஸ்டர் செய்யப் பட்டதாகக் கருதப்படும் யாதொரு கூட்டுறவு சங்கத்துக்குச் சேரவேண்டிய எந்தத் தொகை விஷயமாகிலும் ஏற்பட்டுள்ள யாதொரு பொறுப்பு

அல்லது பார்லிமென்ட் சபையாரால் ஏற்படுத்தப்பட்ட யாதொரு ஆக்டையாவது யாதொரு விசேஷ இந்து தேசத்துச் சட்டத்தையாவது ராயல் சார்ட்டர் என்னும் ராஜ சாஸனத்தையாவது லெட்டர்ஸ் பேடென்ட் என்னும் அதிகாரப் பத்திரத்தையாவது அனுசரித்து ஏற்படுத்தப்பட்ட எந்த கார்ப்பொரேஷனுக்காயினும் சேர வேண்டிய யாதொரு கடன்,

(f) நம்பிக்கைத் துரோகத்தினால் ஏற்படும் யாதொரு பொறுப்பு,

(g) கோர்ட்டாரின் டிக்ரியின் படியோ மற்றப்படியோ ஜீவனாம்சம் விஷயமாய் ஏற்படும் யாதொரு பொறுப்பு;

(h) 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதி யன்று வரை யாதொரு சொத்தையும் உடையவரா யிராத ஒரு ஸ்திரீக்கு அந்தத் தேதியன்று சேரவேண்டியதா யிருந்த யாதொரு கடன் அல்லது கடன்கள். ஆனால் அந்தக் கடன்களின் அல்லது கடனின் அசலானது மூவாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டிருக்கக் கூடாது.

விவரணம்:—இந்தப் பகுதியின் காரியத்துக்காக, கடன்கார ஸ்திரீ வசித்துக்கொண்டிருந்த வீடாவது அதிலிருந்த எவையேனும் மேஜை, நாற்காலி முதலிய சாமான்களாவது, அவருடைய தட்டு முட்டுச் சாமான்களாவது உடைகளாவது நகைகளாவது அவைகளைப் போன்ற சொந்த உபயோகத்துக்குரிய உடைமைகளாவது சொத்தென்று கருதப்பட மாட்டா.

(i) யாதொரு விவசாயத் தொழிலாளிக்காவது கிராமத் தொழிலாளிக்காவது சேர வேண்டிய எவையேனும் கூலித் தொகைகள்.

ஆனால், (e) பகுதியில் குறிப்பிட்டிருக்கும் பொறுப்புகள் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒப்படை செய்வது காரணமாக ஏற்படுகிற பட்சத்திலே 1937-ம் ௵ அக்டோபர் ௴ 1௳க்கு முன் மேலே கண்டபடி ஒப்படை செய்யப்பட்டிருக்க வேண்டும். அல்லது அந்த ஒப்படையானது யாதொரு கூட்டுறவு சங்கத்தால் கொடுக்கப்பட்ட கடனை ஷை சங்கத்துக்கு ஒப்படை செய்ததால் ஏற்பட்டதா யிருக்க வேண்டும்.

அவிபக்த ஹிந்து குடும்பங்கள் முதலியவைகளுக்காக விசேஷ நிபந்தனை.

(5) யாதொரு மருமக்கத்தாயம் அல்லது அலியசந்தானத் தரவாடு அல்லது தாவழி யல்லாத வேறே யாதொரு அவிபக்த ஹிந்து குடும்பமானது 3 (ii) பிரிவுடன் சேர்த்துள்ள (A), (B) (C) விலக்கு நிபந்தனைகளில் குறிப்பிட்டிருக்கும் வரிகள் விதிக்கப் பெற்றாலும், அதே பிரிவுடன் சேர்த்துள்ள (D) விலக்கு நிபந்தனையில்



குறிப்பிட்டிருக்கும் நபர்களின் வகையில் அடங்கினாலும், 1937-ம் ௵ அக்டோபர் ௴ 1௳ யன்று ஷை குடும்பத்தைச் சேர்ந்தவரா யிருந்த எந்த நபரும் 13-வது பிரிவு தவிர இந்த ஆக்டின் இதர பிரிவுகளின் காரியங்களுக்காக விவசாயியாகக் கருதப்பட மாட்டார்.

ஹிந்து குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் விவசாயிகளா யிராதவர்களுடைய குமாரர்களும் சந்ததியார்களும் விவசாயிகளாகாரென்பது.

(6) யாதொரு மருமக்கத்தாயம் அல்லது அலியசந்தானத் தரவாடு அல்லது தாவழியா யிராமல்.

3 (i) பிரிவின் தாத்பரியப்படி 'விவசாயி' யாயிருக்கும் வேறே யாதொரு அவிபக்த ஹிந்து குடும்பத்திலே, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த எவராகிலும் விவசாயியா யிராவிட்டால் அப்போது, 3 (ii) பிரிவில் என்ன சொல்லி யிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஆண் வழியில் வரும் அவருடைய குமாரர்கள், சந்ததியார்கள் ஆகிய இவர்களில் எவரும் இந்த ஆக்டின் 7 முதல் 12 வரையிலுள்ள பிரிவுகளின் காரியங்களுக்காகவும் 19 முதல் 27 வரையிலுள்ள பிரிவுகளின் காரியங்களுக்காகவும் விவசாயியாகக் கருதப்பட மாட்டார்.

## II-ம் அத்தியாயம்

### கடன்களைக் குறைப்பதும் இனிமேல் வாங்கவேண்டிய வட்டி வீதமும்

விவசாயிகளால் செலுத்தப் படத்தக்க கடன்களைக் குறைக்க வேண்டுமென்பது:—

(7) இதற்கு விரோதமாய் யாதொரு சட்டமாவது வழக்கமாவது ஒப்பந்தமாவது கோர்ட்டிக்ரியாவது ஏற்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் யாதொரு விவசாயியால் செலுத்தப்படத் தக்க சகல கடன்களும் இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்துக் குறைக்கப்படும்.

அந்தப் பிரகாரம் குறைக்கப்பட்ட படியுள்ள தொகைக்கு மேற்பட்ட எந்தத் தொகையும் அவரிடமிருந்தாவது அவருக்குச் சொந்தமான யாதொரு நிலத்திலிருந்தாவது, நிலத்தில் அவருக்குள்ள பாத்தியதையிலிருந்தாவது வசூலிக்கப்படத் தக்கதாகாது; மேலும் அவருக்கு விரோதமாய்ப் பிறப்பிக்கப்பட்ட யாதொரு டிக்ரியானது இந்த அத்தியாயத்தின் பிரகாரம் குறைக்கப்பட்டபடியுள்ள தொகைக்கு மேற்பட்ட ஒரு தொகைக்குச் சம்பந்தப்படுகிற வரையில் அந்த டிக்ரியை நிறைவேற்றும் பொருட்டு

அவருடைய சொத்து ஜப்தி பண்ணி விற்பனை செய்யப் படுவதற்காவது உள்ளாக மாட்டாது.

1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்கு முன் ஏற்பட்ட கடன்களுக்காக நிபந்தனை:—

(8) 1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்கு முன் ஏற்பட்ட கடன்கள் இதன் கீழ்ச்சொல்லி யிருக்கும் விதமாகக் குறைக்கப்படும்; அதாவது:—

(1) யாதொரு விவசாயிக்குக் கடன் கொடுத்த எந்த நபருக்காகிலும் 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதி யன்று செலுத்தப்படாமல் பாக்கியா யிருக்கும் வட்டி சட்டத்தின்படியாவது வழக்கத்தின் படியாவது ஒப்பந்தத்தின் படியாவது செலுத்தப்படத் தக்கதாயிருந்தாலுஞ் சரி, கோர்ட்டாரின் யாதொரு டிக்ரியின்படிச் செலுத்தப்படத் தக்கதா யிருந்தாலுஞ் சரி, கடன் அல்லது இதர பொறுப்பு விஷயமாய் டிக்ரி பிறப்பிக்கப்பட் டிருந்தாலுஞ் சரி, இராவிட்டாலுஞ் சரி, அப்படிப்பட்ட சகல வட்டியும் கொடுத்துத் தீர்க்கப்பட் டிருப்பதாகக் கருதப்படும்; மேலும், அசல் தொகையாவது அதில் செலுத்தப்படாமல் பாக்கி யிருக்கக்கூடிய பாகமாவது மாத்திரமே மேற்படி தேதியன்று அந்த விவசாயியால் திருப்பிச் செலுத்தப்படத் தக்க தொகையாகக் கருதப்படும்.

(2) யாதொரு விவசாயி அசலைப்போல் இரண்டு மடங்குள்ள தொகையை அசலாகவோ வட்டியாகவோ இவ்விரண்டுமாகவோ எந்தக் கடன்காரருக்காகிலும் செலுத்தி யிருந்தால் அசல் உட்பட அந்தக் கடன் முற்றிலும் கொடுத்துத் தீர்க்கப்பட் டிருப்பதாகக் கருதப்படும்.

(3) அசலாகவோ வட்டியாகவோ இவ்விரண்டுமாகவோ திருப்பிச் செலுத்தப்பட்ட தொகைகள் அசலைப்போல் இரண்டு மடங்குள்ள தொகைக்குக் குறைவா யிருந்தால், இந்தக் குறைவைப் பூர்த்தி செய்யும் தொகை மாத்திரம் அல்லது அசல் தொகை அல்லது அசல் தொகையில் செலுத்தப்படாமல் பாக்கியா யிருக்கும் பாகம் ஆகிய இவைகளில் எது குறைவா யிருக்கிறதோ, அது திருப்பிச் செலுத்தப்படத் தக்கதாகும்.

(4) 22 முதல் 25 வரையிலுள்ள பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு (1), (2), (3) உட்பிரிவுகளில் கண்டதெதனுலும், கடன்காரருக்குச் செலுத்தப்பட்டிருக்கும் யாதொரு தொகையை அவர் திருப்பிக் கொடுத்துவிட வேண்டி யிருப்பதாக, அல்லது இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட் டிராவிட்டால், யாதொரு கடனளியால் செலுத்தப்படத் தக்கதா யிருந்திருக்கும் தொகைக்கு மேற்



பட்டுள்ள ஒரு தொகையைச் செலுத்த அவருக்குள்ள பொறுப்பு அதிகப்படுத்தப் படுவதாகக் கருதப்பட மாட்டாது.

விவரணம்:—யாதொரு கடனனது அதைக் கொடுத்த கடன்காரருக்குச் சாதகமாகவே புதுப்பிக்கப்பட் டிருந்தாலும் ஒரு புதிய தஸ்தவேஜில் சேர்க்கப்பட் டிருந்தாலும், அந்தக் கடன்காரர் பிரதமத்தில் கொடுத்த அசல் தொகையும் பிற்பட்டு அசலாகக் கொடுக்கப்பட்டிருக்கும் தொகைகள் எவையேனும் இருந்தால் அந்தத் தொகைகளும் மாத்திரமே விவசாயி இந்தப் பிரிவின்படி திருப்பிச் செலுத்தத் தக்க அசல் தொகையாகக் கருதப்படும்.

1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதி யன்றுவது அதற்குப் பிறகாவது ஏற்பட்ட கடன்களுக்காக நிபந்தனை:—

9. 1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதி யன்றுவது அதற்குப் பிறகாவது ஏற்பட்ட கடன்கள் இதன் கீழ்ச்சொல்லி யிருக்கும் விதமாகக் குறைக்கப்படும்; அதாவது:—

(1) மேற்படி கடன் எந்தச் சட்டம், வழக்கம், ஒப்பந்தம் அல்லது கோர்ட் டிக்ரியின்படி ஏற்படுகிறதோ அதன் பிரகாரம் அந்தக் கடனுக்குப் பிரயோகப்படத் தக்க வீதம் அல்லது வருஷமொன்றுக்குச் சாதாரண வட்டி ஐந்து சதவீதம் ஆகிய இவைகளில் எது குறைவா யிருக்கிறதோ அந்த விகிதப்படி இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதி வரையில் வட்டி கணக்கிடப்படும்; மேலும், வட்டிக்காக செலுத்தப்பட்ட சகல தொகைகளும் செல்லு வைக்கப்படும்; இந்தப்படி கணக்கிடப்படும் வட்டிக்காகப் பாக்கியா யிருப்பதாகக் காணப்படும் தொகை ஏதேனு மிருந்தால் அந்தத் தொகை மாத்திரம் அசல் தொகையோடுகூட அல்லது அதில் எவ்வளவு பாகம் சேரவேண்டியதா யிருக்கிறதோ அதனோடுகூட செலுத்தப்படத் தக்கதாகக் கருதப்படும்.

ஆனல், மேற்படி கடனில் எந்தப் பாகமாவது முந்திய கடன் எதையாகிலும் புதுப்பித்ததனல் ஏற்பட்டதாகத் தெரியவந்தால் அந்தப் பாகமானது மேற்படி முந்திய கடன் ஏற்பட்ட தேதியன்று வாங்கப்பட்ட கடனுகக் கருதப்படும்; அந்தக் கடனனது 1932-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்கு முன் வாங்கப்பட் டிருந்தால் 8-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளின்படி அது விஷயமாய் நடவடிக்கை நடத்தப்படும்.

(2) 22 முதல் 25 வரையிலுள்ள பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இதில் கண்ட தெதனுலும் கடன்காரருக்குச் செலுத்தப் பட்டிருக்கும் யாதொரு தொகையை அவர் திருப்பிக் கொடுத்துவிடவேண்டி யிருப்பதாக, அல்லது இந்த ஆக்ட் ஜாரி

செய்யப்பட்டிராவிட்டால் கடனாளியால் செலுத்தப்படத்தக்கதாயிருந்திருக்கும் தொகைக்கு மேற்பட்டுள்ள ஒரு தொகையைச் செலுத்த அவருக்குள்ள பொறுப்பு அதிகப்படுத்தப் படுவதாகக் கருதப்பட மாட்டாது.

## விலக்குகள்

10 (1) யாதொரு நபர் 3 (ii) பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்ட படியுள்ள ஒரு விவசாயியாயிருந்தபோதிலும், அந்தப் பிரிவில் குறிப்பிட்டிருக்கிறபடி 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதி யன்று யாதொரு நிலத்தில் பாத்தியதை யில்லாதவராயிருந்தாலும், அந்த நிலத்தின் குத்தகையாவது கீழ்க் குத்தகையாவது பெற்றிராவிட்டாலும் அவருக்கு 8-வது 9-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகள் பிரயோகப்பட மாட்டா.

(2) 8-வது பிரிவுகளில் கண்ட தெதனுலும்:—

(i) எந்தக் கொதுவையின்படி கொதுவை வைக்கப்பட்ட சொத்தானது கொதுவை வைத்துக் கொண்டவரின் சுவாதீனத்திலிருந்து, கொதுவை வைத்துக் கொண்டவருக்குச் சேரவேண்டியதாக வட்டிவீதம் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லையோ அப்படிப்பட்ட யாதொரு கொதுவைக்காவது,

(ii) சொத்தை (பிறருக்கு) மாற்றுவதைக் குறித்த ஆக்ட் 55-வது பிரிவைச் சேர்ந்த 4-வது பகுதியில் கண்ட (டி) உட்பகுதியில் எந்த பொறுப்பு சம்பந்தமான உத்தரவாதத்துக்காக நிபந்தனை கண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு பொறுப்புக்காவது,

(iii) 1913-ம் வருஷத்திய இந்து தேசத்துக் கம்பெனிகளைக் குறித்த ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்ட படியுள்ள யாதொரு பொதுக் கம்பெனிக்காகிலும் 1934-ம் வருஷத்து இந்திய ரிஸர்வ் பாங்கி ஆக்ட் 2 (இ) பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்ட படியுள்ள யாதொரு ஷெட்யூல் பாங்கிக்காகிலும் சேரவேண்டிய எந்தத் தொகை சம்பந்தயாக வேணும் ஏற்பட்டுள்ள பொறுப்பின் விஷயத்தில் செலுத்தப்பட வேண்டிய வட்டியானது வருஷ மொன்றுக்கு ஒன்பது சத வீதத்துக்கு மேற்படாமலிருந்தால் அப்படிப்பட்ட யாதொரு பொறுப்புக்காவது பாதகமுண்டாக மாட்டாது.

ii யாதொரு விவசாயியால் செலுத்தப்படத்தக்க கடனில் யாதொரு கோர்ட்டாரால் செலவுத் தொகையாக டிக்ரி செய்யப்பட்ட யாதொரு தொகையாகிலும் கொதுவை வைக்கப்பட்ட சொத்தைக் காப்பாற்றும் பொருட்டு கொதுவை வைத்துக்கொண்டவராலாவது இதர நபராலாவது நியாயமாய்ச் செலவு செய்யப்பட்ட தொகைகளாகிலும் அடங்கியிருந்தால், மேற்படி தொகை அல்லது



தொகைகள் 8-வது 9-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளின்படி வசூலிக்கப் படத்தக்க தொகையுடன்கூட வசூலிக்கப் படத்தக்கவையாகும்.

12. இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படிக் குறைக்கப்பட்டிருக்கும் சகல கடன்களுக்கும், அவைகளின்படி எந்தத் தொகையாகிலும் செலுத்தப்படத் தக்கதாயிருக்கிற வரையில், மேற்படி கடன்கள் எந்தத் தேதிவரையில் குறைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தத் தேதியன்று சேரவேண்டிய அசல் தொகையின்மேல் சட்டத்தின்படியோ வழக்கத்தின்படியோ ஒப்பந்தத்தின்படியோ மற்றப்படியோ ஏற்கெனவே பிரயோகப்படத் தக்கதாயிருந்த வீதப்படி மேலே கண்ட தேதியிலிருந்து வட்டி வாங்க வேண்டும்.

ஆனால் அது எந்த விஷயத்திலும் வருஷ மொன்றுக்கு $6\frac{1}{4}$ சத வீதப்படியுள்ள சாதாரண வட்டிக்கு அதாவது மாத மொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு தம்பிடி வீதப்படியுள்ள சாதாரண வட்டிக்கு அல்லது வருஷ மொன்றுக்கு ரூபாய்க்கு 1 அணா வீதப்படியுள்ள சாதாரண வட்டிக்கு மேற்படக் கூடாது.

13. யாதொரு கடனை வசூலிப்பதற்கான எந்த நடவடிக்கையிலாகிலும், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கியபிறகு யாதொரு விவசாயிக்கு ஏற்பட்ட எந்தக் கடனுக்காவது சேரவேண்டிய சகல வட்டியையும் சாதாரண வட்டி வருஷமொன்றுக்கு $6\frac{1}{4}$ சதவீதம் அதாவது, சாதாரண வட்டி மாதமொன்றுக்கு ஒரு ரூபாயிக்கு ஒரு தம்பிடி வீதம் அல்லது சாதாரண வட்டி வருஷமொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கணக்கிடப்பட்ட ஒரு தொகைக்கு மேற்படாதபடிக் கோர்ட்டார் குறைக்க வேண்டும்.

ஆனால், மாகாண கவர்ன்மெண்டார் ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய் அப்போதைக்கப்போது இதை மாற்றி வேறே எந்த வட்டி வீதத்தையாகிலும் நிஷ்கரிஷை செய்யலாம்.

விவரணம்—இந்தப் பிரிவின் காரியங்களுக்காக 3 (ii) பிரிவில் 'விவசாயி' என்பதற்குச் சொல்லியிருக்கும் அர்த்தத்தை வாசிக்கையில்—(i) அந்தப் பிரிவுடன் சேர்த்துள்ள (A) விலக்கு நிபந்தனையில் '1938-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந்தேதியோடு முடிவாகும் இரண்டு அரசிறை வருஷங்களில்' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, 'எந்தத் தேதியில் கடன் ஏற்படுகிறதோ அதற்கு அடுத்து முந்தியுள்ள மார்ச் மாதம் 31-ந் தேதியோடு முடிவாகும் இரண்டு அரசிறை வருஷங்களில்' என்னும் சொற்றொடரை அமைத்துக் கொண்டது போலவும்.

(ii) அந்தப் பிரிவுடன் சேர்த்துள்ள (B) (C) விலக்கு நிபந்தனைகளில் '1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்கு அடுத்து முந்தியுள்ள இரண்டு வருஷங்களுக்குள்' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக 'எந்தத் தேதியில் கடன் ஏற்படுகிறதோ அதற்கு அடுத்து முந்தியுள்ள மார்ச் மாதம் 31-ந்தேதி அல்லது ஸெப்டம்பர் மாதம் 30-ந் தேதி (ஆகிய இவைகளில் எது பிந்தியதோ அந்தத் தேதியோடு முடிவாகும் இரண்டு வருஷங்களுக்குள்' என்னும் சொற்றொடரை அமைத்துக் கொண்டது போலவும், வாசிக்க வேண்டும்.

14. 3 (ii) பிரிவில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலும், 5-வது 6-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், விபக்தமாகவோ அவிபக்தமாகவோவுள்ள யாதொரு ஹிந்து குடும்பத்திலே ஒரு குடும்பக் கடன் விஷயமாய்ப் பொறுப்புள்ளவர்களில் சிலர் விவசாயிகளல்லாதவர்களாகவும் மற்றவர்கள் விவசாயிகளாகவும் இருக்கிற பட்சத்திலேயே கடன்காரர் இதற்கு விரோதமாக எந்தச் சட்டமாவது ஏற்பட்டிருந்த போதிலும் பாதகமில்லாமலே,—

(a) விவசாயியல்லாதவர் அல்லது அல்லாதவர்கள் மேலும் குடும்பச் சொத்தில் அவர் அல்லது அவர்களுக்குள்ள பாகத்தின் மேலும், மேற்படி கடனில் வீதாசாரப்படி அவர் அல்லது அவர்களுக்குள்ள பாகம் சம்பந்தமாய் மாத்திரம் நடவடிக்கை நடத்த பாத்தியதை யுள்ளவ ராவார்; மேலும்,

(b) விவசாயியா யிருப்பவர் அல்லது இருப்பவர்கள் மேலும் குடும்பச் சொத்தில் அவர் அல்லது அவர்களுக்குள்ள பாகத்தின் மேலும், மேற்படி கடனில் வீதாசாரப்படி அவர் அல்லது அவர்களுக்குள்ள பாகம் சம்பந்தமாய் மாத்திரம் நடவடிக்கை நடத்த பாத்தியதை யுள்ளவராவார்; அந்த பாகமானது இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் குறைக்கப்பட வேண்டும்.

## III-ம் அத்தியாயம்

### குத்தகை தொகை பாக்கிகள்

15. (1) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டின்படி யாதொரு நிலத்துக்குடையவர் அல்லது கீழ்க்குத்தகைத்தாரருக்காவது மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டின்படி யாதொரு ஜன்மி அல்லது இடையிலுள்ளவர்களுக்காவது ஒரு விவசாயியால் செலுத்தப்படத்தக்கதா யிருப்பதும், 1345-ம் பசலி



வருஷத்துக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் சேர்ந்து வந்திருப்பதும், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியன்று செலுத்தப்படாமல் பாக்கியா யிருப்பதுமான குத்தகைத் தொகையானது குத்தகைத் தொகையாகவே சேரவேண்டியதா யிருந்தாலுஞ் சரி அதற்காக டிக்ரி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலுஞ் சரி, அப்படிப்பட்ட சகல குத்தகைத் தொகையும் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

ஆனால் குத்தகைத் தொகை செலுத்துவதற்குள்ளான (இந்தப் பிரிவில் பின்னால் 'பாயக்காரி' என்று குறிப்பிடப்படும்.) நபர் யாதொரு கைப்பற்று நிலம் சம்பந்தமாக 1346-வது 1347-வது பசலிகளுக்குச் சேர்ந்து வந்திருக்கும் சகல குத்தகைத் தொகை பாக்கிகளையும் 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ந் தேதி யன்றைக்காவது அதற்கு முன்பாவது செலுத்தாவிட்டால், 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் சம்பந்தப்பட்டவைகளாய், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியன்று அதே கைப்பற்று நிலம் விஷயமாகச் செலுத்தப்படாமலிருக்கும் குத்தகைத் தொகை பாக்கிகள் 1346-வது 1347-வது பசலிகளுக்குச் சேரவேண்டிய குத்தகைத் தொகையில் ரயத்தினாலாகிலும் பாயக்காரியினாலாகிலும் செலுத்தப்படும் பாகமானது அந்த இரண்டு பசலிகளுக்குச் சேரவேண்டிய குத்தகைத் தொகையில் என்ன சங்கியாபரிமாணமுள்ளதா யிருக்கிறதோ அதே சங்கியாபரிமாணப் படித்தான் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

மேலும், யாதொரு பாயக்காரி மேற்படி கைப்பற்று நிலம் சம்பந்தமாய் 1347-ம் பசலிக்காகச் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையை 1938-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ந் தேதி யன்றாவது அதற்கு முன்பாவது செலுத்தி யிருந்தாலன்றி மற்றப்படி, அவர் இந்தப் பிரிவின்படிக்கான நன்மையை அடைய பாத்தியதை யுள்ளவராக மாட்டார்.

விவரணம்:—மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டின்படி ஒழுங்கேற்படுத்தப்படும் விஷயங்களில், இந்த அத்தியாயத்தில் எந்தப்பசலி வருஷத்துக்காகிலும் சம்பந்தப்பட்ட யாதொரு உதகரிப்பானது, மலையாளத்துப் பாயக்காரி பாத்யதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டில் அர்த்தம் சொல்லப்பட்டதாய், அந்தப் பசலி வருஷத்தின் பெரும் பாகம் அடங்கியுள்ள விவசாய வருஷத்துக்குச் சம்பந்தப்பட்ட உதகரிப்பாகக் கருதப்படும்.

உதாரணங்கள்:—(a) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் ஒருரயத்தாவது பாயக்காரியாவது குறித்த யாதொரு

கைப்பற்று நிலத்துக்காக 1345-ம் பசலிக்கும் அதற்குமுந்திய பசலிகளுக்கும் உரிய குத்தகைத் தொகை விஷயமாய் 500 ரூபாயும் அந்தத் தேதியன்று அதே கைப்பற்று நிலத்துக்காக பசலி ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் 1346-வது 1347-வது பசலிகளுக்குரிய குத்தகைத் தொகையும் பாக்கியாக இருக்கிறார். 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் 1347-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையை அவர் செலுத்துகிறார்; 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் 1346-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையை அவர் செலுத்துகிறார். இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் செலுத்தப்படாமலிருந்த 500 ரூபாயுள்ள குத்தகைத் தொகை பாக்கி கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(b) குறித்த யாதொரு கைப்பற்று நிலத்தின் விஷயமாய் 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் உரிய குத்தகைத் தொகை பாக்கிகளைக் குறிக்கும் 500 ரூபாயுள்ள தொகையும், அந்தக் கைப்பற்று நிலத்துக்காக 1346-வது, 1347-வது பசலிகளுக்குரிய குத்தகைத் தொகைகளும் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் செலுத்தப்படாமல் பாக்கியா யிருக்கின்றன; ஒவ்வொரு பசலிக்கும் உரிய குத்தகைத் தொகை 100 ரூபாய் ரயத்து அல்லது பாயக்காரி 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் 1347-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையை நிலத்துக் குடையவருக்குச் செலுத்துகிறார்; ஆனால் 1346-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையில் எந்தப் பாகத்தையாகிலும் 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் செலுத்தத் தவறுகிறார். 250 ரூபாய் மாத்திரமே அதாவது, 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்குமுரிய குத்தகைத் தொகையில் அரைப்பாகம் மாத்திரமே கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(c) அதே விஷயத்தில், ரயத்து அல்லது பாயக்காரி 1347-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகை முழுவதையும் 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30ந் தேதிக்குள் நிலத்துக்குடையவருக்குச் செலுத்தவில்லை. 1345-பசலிக்கும் அதற்கு முந்தியபசலிகளுக்குமுரிய பாக்கிகளில் எந்தப் பாகமும் கொடுத்துத் தீர்க்கப்பட்டதாகாது; இந்தப் பிரிவினாலுண்டாகும் அநுகூலங்களை ரயத்து இழந்துவிடுகிறார்.

(d) அதே விஷயத்தில், ரயத்து அல்லது பாயக்காரி 1347-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகையை 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதல் 30-ந்தேதிக்குள் நிலத்துக்குடையவருக்குச் செலுத்துகிறார்; ஆனால், 1346-வது பசலிக்குரிய குத்தகைத் தொகையில் பாதியாகிய 50 ரூபாய் மாத்திரமே 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம்



30-ந் தேதிக்குள் செலுத்துகிறார். 1346, 1347 ஆகிய இவ்விரண்டு பசலிகளுக்குரிய குத்தகைத் தொகையாகிய 200 ரூபாயில் 150 ரூபாயை இந்தப்படி 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் அவர் செலுத்தி யிருக்கிறார். 375 ரூபாய், அதாவது 1345-ம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கு முரிய குத்தகைத் தொகையில் முக்கால் பாகம் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(2) 1945-ம் பசலிக்காகச் சேரவேண்டிய குத்தகைத் தொகை பாக்கிகளை வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் சட்டசபையாரின் யாதொரு ஆக்டினாலாவது யாதொரு கோர்ட்டாரின் உத்தரவினாலாவது நிறுத்தி வைக்கப்பட் டிருந்தாலும் அல்லது அப்படிப்பட்ட நடவடிக்கைகள் தொடரப்பட்டிருந்தால் அந்தப்படி நிறுத்தி வைக்கப்படக் கூடியவையாயிருந்தாலும், (1) உட்பிரிவில் கண்ட தெதனாலும் மேற்படி குத்தகைத் தொகை பாக்கிகள் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பதாய்ச் செய்யப்படுவதாகக் கருதப்படமாட்டாது. ஆனால், 1345-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகை பாக்கிகள் 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ந் தேதி வரையிலாவது அந்தத் தேதிக்கு முன் 1347-ம் பசலிக்குரிய குத்தகைத் தொகை செலுத்தப்படும்பட்சத்தில் 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ந் தேதி வரையிலாவது வசூலிக்கப்படத் தக்கதாகமாட்டா.

(3) எந்த ஒப்பந்தத்திலாவது பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப் பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்ட் 64-வது பிரிவிலாவது இதற்கு விரோதமாய் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே இந்த ஆக்ட் வழங்க தொடங்கிய பிறகு யாதொரு பாயக்காரியால் குத்தகைக்காகச் செலுத்தப்படும் எந்தத் தொகையாகிலும் முதலில் 1347-ம் பசலிக்காக அவர் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகைக்காகவும், அடுத்தபடியாக 1346-ம் பசலிக்காக அவர் செலுத்தவேண்டிய குத்தகைத் தொகைக்காகவும் செல்லுவைக்கப்பட வேண்டுமேயொழிய முந்திய பசலி எதற்காகவாவது செலுத்தவேண்டிய குத்தகைத் தொகைக்காகச் செல்லு வைக்கப்படக் கூடாது.

4. ஒவ்வொரு பாயக்காரியும் 1347-ம் பசலிக்காவது 1346-ம் பசலிக்காவது இவ்விரண்டு பசலிகளுக்குமாவது தாம் செலுத்த வேண்டிய அல்லது செலுத்த வேண்டியதாக பாத்தியதை கொண்டாடப்படும் குத்தகைத் தொகைக்காக எந்தத் தொகையாகிலும் கோர்ட்டில் செலுத்தலாம்; அதன்மேல் கோர்ட்டார் சந்தர்ப்பத்துக் கேற்றபடி நிலத்துக் குடையவர், கீழ்க்குத்தகைக்காரர், ஜன்மி அல்லது இடையிலுள்ளவருக்கு நோட்டீஸ் கொடுத்து, இந்த

ஆக்டில் கண்ட நிபந்தனைகளைப் பிரயோகித்து அந்தப் பாயக்காரியானவர் மேற்சொன்ன பசலிகளுக்குரிய குத்தகைத் தொகை முழுவதையும் செலுத்தி யிருக்கிறரா அல்லது அதில் ஒரு பாகத்தை மாத்திரம் செலுத்தி யிருக்கிறரா வென்பதையும், இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி குத்தகைத் தொகை சம்பந்தமாய் அந்தப் பாயக்காரிக்குப் பொறுப்பு ஏதேனும் மிகுதி யிருந்தால் அதன் அளவு இவ்வள வென்பதையுங்கூட நிச்சயிக்க வேண்டும்.

விவரணம்:—இந்த உட்பிரிவின் காரியங்களுக்காகக் 'கோர்ட்டார்' என்பது சந்தர்ப்பத்துக்கேற்றபடி பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்ட் 209 (1) பிரிவில் சொல்லி யிருக்கும் கலெக்டர் என்ருவது மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்ட் 3 (b) பிரிவில் சொல்லி யிருக்கும் கோர்ட்டார் என்ருவது அர்த்தமாகும்.

16 இந்த அத்தியாயத்தில் என்ன சொல்லி யிருந்த போதிலும் பாதக மில்லாமலே பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டின்படியுள்ள யாதொரு நிலத்துக்குடையவர் அல்லது கீழ்க்குத்தகைதாரராவது மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டின் படியுள்ள யாதொரு ஜனமி அல்லது இடையிலுள்ளவராவது 15-வது பிரிவின்படி தாம் வசூலிக்கத் தக்க ஏதேனும் தொகையுடன் கூட:—

(a) 1920-ம் வருஷத்திய சென்னைப்பட்டணத்து லோகல் போர்டுகள் ஆக்ட் 88-வது பிரிவின்படி வசூலிக்கப்படத்தக்க லாண்ட்ஸெஸ் என்னும் வரி ஏதாவது தாம் செலுத்தி யிருந்தால் அதையும்,

(b) பிரஸ்தாப குத்தகை சம்பந்தமாய்ப் பிரயோகப்படக் கூடிய யாதொரு சட்டத்தின்படியாகிலும் வழக்கத்தின்படியாகிலும் ஒப்பந்தத்தின்படியாகிலும் கோர்ட் டிக்கிரியின்படியாகிலும் பாயக்காரி செலுத்தக் கடமைப்பட்டுள்ள நிலவரி, தண்ணீர் வரி எவையேனும் தாம் மாகாண கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தி யிருந்தால் அவைகளையும்,

(c) குத்தகைத் தொகைக்காகத் தாம் பெற்றிருக்கும் எந்த டிக்ரியிலாவது தமக்குக் கொடுக்கும்படி தீர்ப்பளிக்கப்பட் டிருக்கும் செலவுத் தொகைகளையும் வசூலிக்க பாத்தியதை யுடையவராவார்.

17 பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டிலாவது மலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம் வருஷத்திய ஆக்டிலாவது காலவரையறையைக் குறித்தாகிலும் நடவடிக்கை முறையைக் குறித்தாகிலும் அந்தந்தக் காலத்தில் செலாவணியாய்க்கொண் டிருக்கும் எந்தச் சட்டத்திலாவது என்ன சொல்லி யிருந்த போதிலும் பாதகமில்லாமலே 1345-வது பசலி அல்லது அதற்கு முந்தி யாதொரு பசலிக்குரியதாய்ச் சேர்ந்து வந்திருக்கும் குத்தகைத் தொகைபாக்கிகள் சம்பந்தமான எந்த வியாஜ்யத்துக்கு அல்லது (டிக்ரியை) நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு இப்போதிருக்கும் சட்டப்படி 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதியி லிருந்து 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் தடை ஏற்படுமோ அப்படிப்பட்ட வியாஜ்யம் அல்லது நடவடிக்கைகள் எதற்கும் அந்தப்படி தடை ஏற்படாது மேலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி நிலத்துக்குடையவர், கீழ்க்குத்தகைதாரர் ஜனமி அல்லது இடையிலுள்ளவர் அவைகளை வசூலிப்பதற்காக 1938-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதியன்ருகிலும் அதற்கு முந்தியாகிலும் வியாஜ்ஜியம் தொடரவோ (டிக்ரியை) நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் நடத்தவோ பாத்தியதை யுடையவராவார்; அன்றியும் 1347-வது பசலிக்காகச் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையானது 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்கு முன் செலுத்தப்பட் டிருக்கும் விஷயங்களில் எவையேனும் குத்தகைத் தொகை பாக்கிகளை வசூலிப்பதற்கான எந்த வியாஜ்ஜியம் அல்லது (டிக்ரியை) நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு இப்போதிருக்கும் சட்டப்படி 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதியி லிருந்து 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ந்தேதிக்குள் தடை ஏற்படுமோ அந்த வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கைகளுக்குரிய காலவரையறையானது 1938-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந்தேதி வரையில் நீடித் திருக்கும்.



ஆனல், சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1938-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 31-ந் தேதியன்ருகிலும் 1939-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 31-ந்தேதியன்ருகிலும் 15-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்படிக்கான யாதொரு விண்ணப்பம் எந்தக் கோர்ட்டிலாயினும் பைசலாகாமலிருந்தால் இந்தப் பிரிவின்படி நிர்ணயிக்கப்படும் காலவரையறையானது அப்படிப்பட்ட விண்ணப்பத்தின் மேல் பிறப்பிக்கப்படும் உத்தரவின் தேதியி லிருந்து இரண்டு மாதகால அளவு கழிந்து போகிறவரையில் நீடித்திருக்கும்.

## IV-ம் அத்தியாயம்

### நடவடிக்கை முறையும் பலவகைப்பட்ட விஷயங்களும்

18 (1) 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந்தேதி யன்ருவது அதற்குப் பிறகாவது தாக்கல் செய்யப்பட்ட ஒரு வியாஜ்ஜி

யத்தில் யாதொரு விவசாயிக்கு விரோதமாய் ஒரு டிக்ரி பிறப்பிக்கப்பட்டால் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை யனுசரித்துக் குறைக்கப்பட்ட கடன் தொகைக்காக மேற்படி வியாஜ்ஜியம் தொடரப்பட்டிருந்தால் எவ்வளவு செலவுகள் அனுமதிக்கப்படத் தக்கவையாயிருந்திருக்குமோ அவ்வளவு செலவுகளை மாத்திரமே கோர்ட்டார் அனுமதிக்க வேண்டும். மேலும் அப்படிப்பட்ட யாதொரு விஷயத்தில் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன் டிக்ரி பிறப்பிக்கப்பட்டிருந்தால் மேற்படி விவசாயி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் கோர்ட்டார் அந்த டிக்ரியை அப்பிரகாரமே திருத்த **வேண்டும்.**

(2) 1938-ம் வருஷம் எப்ரல் மாதம் 1-ந்தேதிக்கு முன் காலவரையறையினால் தடுக்கப்படும் யாதொரு தாவா விஷயமாய், 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந்தேதி யன்றாவது அந்தத் தேதிக்குப் பிறகும் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன்புமாவது தொடரப்படும் யாதொரு வியாஜ்ஜியத்துக்கு (1) உட்பிரிவில் கண்டதெதுவும் பிரயோகப்பட மாட்டாது.

19 யாதொரு கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குமுன் யாதொரு கோர்ட்டார் ஒரு டிக்ரியைப் பிறப்பித்திருந்தால், அவர்கள் விவசாயியாயிருக்கும் யாதொரு தீர்ப்பான கடனாளி விண்ணப்பம் செய்துகொள்வதன் மேலாவது யாதொரு ஹிந்து அவிபக்த குடும்பக் கடன் விஷயத்தில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த யாதொரு நபர் தீர்ப்பான கடனாளியாயிருந்தாலுஞ் சரி இராவிட்டாலும் சரி அந்த நபர் விண்ணப்பம் செய்துகொள்வதன் மேலாவது டிக்ரி பெற்றிருப்பவர் விண்ணப்பம் செய்துகொள்வதன் மேலாவது இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை மேற்படி டிக்ரிக்குப் பிரயோகப்படுத்த வேண்டியது மல்லாமல், 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தில் என்ன சொல்லி யிருந்த போதிலும் பாதகமில்லாமலே சந்தர்ப்பத்துக்கேற்றபடி மேற்படி டிக்ரியை அப்பிரகாரமே திருத்தவும் வேண்டும் அல்லது அது நிறைவேற்றப்பட்டதாக எழுதவும் வேண்டும்.

ஆனால் அப்படிப்பட்ட யாதொரு டிக்ரி விஷயமாய், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன்பாகிலுஞ் சரி, அதற்குப் பிறகாகிலுஞ் சரி, செலுத்தப்பட்ட சகல தொகைகளையும் அல்லது வசூலிக்கப்பட்ட சகல தொகைகளையும், கடன்காரருக்குக் கொடுக்க வேண்டுமென்று பிரதமத்தில் டிக்ரி செய்யப்பட்ட சகல செலவுகளையும் செலுத்துவதற்காக முதலிலேயே உபயோகிக்க வேண்டும்.

20. இந்த ஆக்டினாலேற்படும் அனுகூலங்களை அடையப் பாத்தியதை யுள்ளவரா யிருக்கும் யாதொரு நபருக்கு விரோத



மாகப் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியை நிறைவேற்றும் ஒவ்வொரு கோர்ட்டாரும் விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன்மேல் மேற்படி டிக்ரியைப் பிறப்பித்த கோர்ட்டார் 19-வது பிரிவின்படிச் செய்து கொள்ளப்பட்ட அல்லது செய்து கொள்ளப்படப் போகும் யாதொரு விண்ணப்பத்தின்மேல் உத்தரவு பிறப்பிக்கிற வரையில் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டும்.

ஆனால், (நடவடிக்கைகளை) நிறுத்திவைக்கும்படிச் செய்து கொண்ட விண்ணப்பத்தில் கோரியபடி உத்தரவான பிறகு 60 தினத்துக்குள், தீர்ப்பான கடனாளி மேற்படி டிக்ரி பிறப்பித்த கோர்ட்டாருக்கு 19-வது பிரிவின் பிரகாரம் பரிகாரம் அளிக்கும்படி விண்ணப்பம் செய்துகொள்ளா விட்டாலும் மேலே கண்டபடி விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டு அது தள்ளிவிடப்பட்டிருந்தாலும் இந்த ஆக்டில் இதற்கு விரோதமாய் என்ன சொல்லி யிருந்த போதிலும் பாதகமில்லாமலே அந்த டிக்ரியை அது இருக்கிறபடியே நிறைவேற்ற வேண்டும்.

விவரணம்:—'டிகிரி பிறப்பித்த கோர்ட்டார்' என்னும் சொற்றொடர் 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவ்கார விசாரணைச் சட்டத்தில் என்ன அர்த்தம் உள்ளதாயிருக்கிறதோ அதே அர்த்தம் உள்ளதாகும்.

21. கடனிறுக்கச் சக்தி யற்றவரென்று யாதொரு நபர் தீர்மானிக்கப்பட்டிருந்து அவருடைய ஆஸ்தியிலிருந்து கொடுக்கப்படத் தக்க ஈவுத்தொகை இந்த ஆக்ட் அமுலுக்கு வரத் தொடங்குவதற்குமுன் பிரசித்தம் செய்யப்பட்டிருந்தால் அவரால் செலுத்தப்படத்தக்க கடன்களுக்கு இந்த ஆக்டில் கண்டதெதுவும் பிரயோகப்படமாட்டாது. அந்தப்படி யாதொரு ஈவுத்தொகை பிரசித்தம் செய்யப்பட்டிராத பட்சத்திலே, அப்படிப்பட்ட நபர் கடனிறுக்கச் சக்தி யற்றவரென்று தீர்மானிக்கப்பட்டிராவிட்டால், இந்த ஆக்டின் தாத்பரியப்படி அவர் ஒரு விவசாயியாக இருந்திருப்பாரானால், அவர் செலுத்த வேண்டிய கடன்களுக்கு இந்த ஆக்ட் பிரயோகப்படும்.

22. எந்த டிக்ரியையாகிலும் நிறைவேற்றுகையில், யாதொரு விவசாயியின் அசையும் பொருள் எதுவாகிலும் 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதி யன்றாவது அதற்குப் பிறகாவது விற்பனை செய்யப்பட்டிருந்தால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி 8-வது அல்லது 9-வது பிரிவிலும் 11-வது 12-வது பிரிவுகளிலும் கண்ட நிபந்தனைகளை மேற்படி டிக்ரிக்குப் பிரயோகப்படுத்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கும்படித் தீர்ப்பான எந்தக் கடனாளியாகிலும் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; விண்ணப்பதாரர் மேற்படி பிரிவுகளினாலேற்படும் அனுகூலங்களை

அடையப் பாத்தியதையுள்ள விவசாயி யென்று கோர்ட்டார் திருப்திகரமாகத் தெரிந்துகொண்டால் அவர்கள் அவைகளைப் பிரயோகப்படுத்தி மேற்படி. சொத்து விற்பனை செய்யப்படா திருந்தால், டிக்ரி பெற்றவர் என்ன தொகை பெறுவதற்குப் பாத்தியதை யுள்ளவரா யிருந்திருப்பாரோ அந்தத் தொகைக்கு அதிகமாக 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதியன்றாவது அதற்குப் பிறகாவது அவர் பெற்றுக்கொண்ட யாதொரு தொகையைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி அவருக்கு உத்தரவு செய்ய வேண்டும்.

ஆனால், டிக்ரி பெற்றவருக்கு நோட்டீஸ் கொடுக்காமலும், இது விஷயத்தில் அவர் சொல்லிக் கொள்ள வேண்டியதைச் சொல்லிக் கொள்ள அவருக்கு அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்காமலும் அப்படிப்பட்ட எந்த உத்தரவையும் பிறப்பிக்கக்கூடாது.

23. யாதொரு டிக்ரியை நிறைவேற்றுகையில் யாதொரு விவசாயி பாத்தியதையுள்ளவரா யிருந்த எந்த அசையாப் பொருளாகிலும் 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந் தேதியன்றாவது அதற்குப் பிறகாவது விற்பனை செய்யப்பட்டிருந்தால் அல்லது அது சம்பந்தமான மீட்புப் பாத்தியதை யற்றுப்போகும்படி செய்யப்பட்டிருந்தால், அப்போது, 1908-ம் வருஷத்திய இந்துதேசத்துக் கால நிர்ணயச் சட்டத்திலாவது 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்திலாவது என்ன சொல்லி யிருந்த போதிலும் பாதகமில்லாமலும் மேற்படி விற்பனை ஊர்ஜிதம் செய்யப்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலும், தாம் இந்த ஆக்டினாலேற்படும் அனுகூலங்களை அடையப்பாத்தியதையுள்ள விவசாயியென்று சொல்லிக்கொள்ளும் தீர்ப்பான யாதொரு கடனாளி மேற்படி சொத்தின் விற்பனையை அல்லது அதுசம்பந்தமான மீட்புப் பாத்தியதை யற்றுப்போகும்படிச் செய்ததை ரத்து செய்யும்படி இந்த ஆக்டை வழங்கத் தொடங்கியதிலிருந்து 90 தினத்துக்குள் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்; விண்ணப்பதாரர் இந்த ஆக்டினாலேற்படும் அனுகூலங்களை அடைய பாத்தியதையுள்ள விவசாயியென்று கோர்ட்டார் திருப்திகரமாகத் தெரிந்துகொண்டால், அவர்கள் மேற்படி விற்பனையை அல்லது மீட்புப் பாத்தியதை யற்றுப்போகும்படிச் செய்ததை ரத்து செய்யும்படி உத்தரவு பண்ணவேண்டும்; அதன் மேல் அந்த விற்பனை நடந்திராதது போலவே கருதப்படும்.

ஆனால், டிக்ரி பெற்றவர், ஏலக்கிரயதாரர், மேற்படி விற்பனையில் அல்லது மீட்புப் பாத்தியதை யற்றுப்போகும்படிச் செய்ததில் அக்கறையுள்ள இதர நபர்கள் ஆகிய அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்காமலும் இது விஷயமாய் அவர்கள் சொல்லிக்கொள்ள வேண்டியதைச் சொல்லிக்கொள்ள அவர்களுக்கு அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்காமலும் அப்படிப்பட்ட எந்த உத்தரவையும் பிறப்பிக்கக் கூடாது.



24. முந்திய பிரிவின்படி யாதொரு விற்பனை ரத்துசெய்யப்பட்டால், யாதொரு கிரயதாரர்தாம் யாருக்கு எந்தக் கிரயத் தொகையாகிலும் கொடுத்திருக்கிறாரோ அந்த நபர் அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப் பெறுவதற்கு பாத்தியதை யுள்ளவராவார்.

ஆனால், அப்படிப்பட்ட யாதொரு விற்பனை விஷயமாகத் தாகு எதுவும் செலுத்தப்படத் தக்கதாக மாட்டாது; மேலும் தாகு வசூலிக்கப்பட்டிருந்தால் அதைத் திருப்பிக் கொடுத்துவிடும்படிக் கோர்ட்டார் கட்டளையிட வேண்டும்.

25. யாதொரு விவசாயிக் கடனாளி 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ந்தேதி யன்றாவது அதற்குப் பிறகாவது அசையாப் பொருளைப் பராதீனம் செய்த சகல விஷயங்களும் எந்தக் கடன்காரர் டிக்ரியை நிறைவேற்றுகையில் செய்த விற்பனையாகிலும் மீட்புப் பாத்தியதையற்றுப் போவதற்காகப் பெற்றுக் கொண்ட டிக்ரியாகிலும் 2 -வது பிரிவின்படி ரத்து செய்யப்பட்டிருக்கிறதோ, அல்லது மேற்படி விற்பனையி லிருந்து கிடைத்த தொகையை வீதாசாரப்படி பங்கீடு செய்யப் பெறுவதற்கு 1908-ம் வருஷத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 73-வது பிரிவின்படி எந்தக் கடன்காரர் பாத்தியதை யுள்ளவராய்விட்டாரோ அப்படிப்பட்ட ஒவ்வொரு கடன்காரர் விஷயத்திலும் செலாவணியாக மாட்டா.

26. எந்த ஜில்லாவில் தம்முடைய கடனாளி 3 (ii) பிரிவுடன் சேர்த்துள்ள (A) விலக்கு நிபந்தனையில் சொல்லி யிருக்கிறபடி வருமான வரியாவது, அந்தப் பிரிவுடன் சேர்த்துள்ள (B) (C) விலக்கு நிபந்தனைகளில் சொல்லி யிருக்கிறபடி 1924-ம் வருஷத்துக் கன்டோன்மெண்டுகள் ஆக்டின் பிரகாரம் தொழில் வரியாவது சொத்து வரியாவது வீட்டு வரியாவது விதிக்கப்பெற்றிருக்கிறாரென்றாகிலும் விதிக்கப் பெறுகிறாரென்றாகிலும் யாதொரு கடன்காரர் நம்புகிறாரோ அந்த ஜில்லாவின் கலெக்டருக்கு மேற்படி விஷயங்களைக் குறித்துச் சங்கதி தெரிவிக்கும்படி மேற்படி கடன்காரர் விண்ணப்பம் செய்துகொள்ளலாம். அதன்மேல் கலெக்டரானவர் அந்த சங்கதியைத் தெரிந்துகொண்டு மேற்படி கடனாளி மேலேகண்டபடி வருமான வரியாவது தொழில் வரி சொத்து வரி அல்லது வீட்டு வரியாவது விதிக்கப் பெற்றிருக்கிறாரென்று கண்டு நிர்ணயிக்கப்பட்ட நமூனாவின்படி ஒரு யாதாஸ்தை மேற்படி கடன்காரருக்குக் கொடுக்க வேண்டும். அந்த யாதாஸ்தை அதில்

கண்டிருக்கும் விஷயத்துடன் ருஜுகள் ஒவ்வொரு கோர்ட்டிலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

27. யாதொரு கடன்காரர் தம்முடைய கடனுளி 3 (ii) பிரிவுடன் சேர்த்துள்ள (B) (C) விலக்கு நிபந்தனைகளில் சொல்லி யிருக்கிறபடி தொழில் வரியாவது சொத்து வரியாவது வீட்டு வரி யாவது விதிக்கப் பெற்றாரா அல்லது விதிக்கப் பெறுகிறாராவென்று சங்கதி தெரிவிக்கும்படி யாதொரு மியுனிசிபாலிடியின் நிர்வாக அதிகாரிக்காகிலும் யாதொரு லோகல் போர்டின் பிரஸிடெண்டுக் காகிலும் சென்னை நகர் விசாரணைச் சங்கத்தின் ரெவினியூ ஆபீஸ ருக்காகிலும் விண்ணப்பம் செய்து கொள்ளலாம். அதன்மேல் மேற்படி நிர்வாக அதிகாரியாவது ப்ரெஸிடெண்டாவது ரெவினியூ ஆபீசராவது அந்த விண்ணப்பத்தில் பெயர் கண்டிருக்கும் கடனுளி மேலே கண்டபடி தொழில் வரியாகிலும் சொத்து வரியாகிலும் வீட்டு வரியாகிலும் விதிக்கப்பெற்றிருக்கிறாராவென்று கண்டு நிர்ண பிக்கப்பட்ட நமூனாவின்படி ஒரு ஸர்டிபிகேட்டை மேற்படி கடன் காரருக்குக் கொடுக்க வேண்டும். அந்த ஸெர்டிபிகேட்டை அதில் கண்டிருக்கும் விஷயங்களுக்கு ருஜுவாக ஒவ்வொரு கோர்ட்டிலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

28. (1) இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றும் பொருட்டு மாகாண கவர்ன்மெண்டார் விதிகள் செய்யலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்குப் பாதக மில்லாமலும் மாகாண கவர்ன்மெண்டார்:—

(a) நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று இந்த ஆக்டில் சொல்லி யிருக்கும் யாதொரு விஷயத்தைக் குறித்தும்,

(b) இந்த ஆக்டின்படிக்கான விண்ணப்பங்களின் நமூனாவை யும் அவைகள் விஷயமாய்ச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங் களையும் நிர்ணயித்தும்,

(c) இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டு வருவதில் ஏற்படக்கூடிய எந்தக் கஷ்டத்தையாவது நீங்குவதற்காகவும் விதிகள் செய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படிச் செய்யப்படும் சகல விதிகளும் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளுக்குப் பொருத்தமா யிருக்க வேண்டும்; அவைகளை ஸர்க்கார் கெஜட்டில் பிரசித்தம் செய்யப் படுவதன்மேல் அவை இந்த ஆக்டிலேயே சேர்க்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே செலாவணியாகும்.

## மோட்டார் முதலிய போக்கு வரவு சாதனங்களின் சீர்திருத்த மசோதா

சென்னை சர்க்கார் மோட்டார் சீர்திருத்த மசோதா ஒன்றைச் சென்னைச் சட்ட சபையின் மூலமாக நிறைவேற்றி யிருக்கிறார்கள். அந்த மசோதா மேன்மை தங்கிய வைசிராய் பிரபு வின் அங்கீகாரத்தையும் 28—3—1938-இல் பெற்றுவிட்டது. இச் சட்டத்தின்கீழ்ச் சென்னை முனிசிபல் ஆக்ட் (1919) லோகல் போர்ட் ஆக்ட் (1920) இந்திய மோட்டார் வண்டிகள் ஆக்ட் (சென்னை மாகாணம் பொருத்த வரையில்) 1914 முதலியவற்றை மாற்றி யமைக்கச் சென்னை சர்க்காருக்கு அதிகாரம் அளிக்கப்பட் டிருக்கிறது.

### இந்தச் சட்டத்தின் கீழ் மோட்டார் வரிகள் மாற்றப்பட் டிருக்கின்றன.

| வண்டிகளின் விவரம் | 3 மாத காலத்திய வரி: நியூமாடிக் (அல்லது) காற்றடைக்கப்பட்ட டையர் உள்ள வண்டிகள். | 3 மாத காலத்திய வரி: மற்ற வண்டிகள் |
|---|---|---|
| மோட்டார் லாரிகள் | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 1. சரக்குகளுடன் 1 டன்னுக்கு மேற்படாத லாரிகள் | 50—0—0 | 75—0—0 |
| 2. 1 டன்னுக்கு மேல் $1\frac{1}{2}$ டன் மேற்படாத | 100—0—0 | 150—0—0 |
| 3. $1\frac{1}{2}$ டன் மேல் $2\frac{1}{4}$ டன் | 120—0—0 | 180—0—0 |
| 4. $2\frac{1}{4}$ டன்னுக்கு மேல் 3 டன் மேற்படாத | 150—0—0 | 225—0—0 |
| 5. 3 டன் மேல் $4\frac{1}{4}$ டன்னுக்குள் | 180—0—0 | 270—0—0 |
| 6. $4\frac{1}{4}$ டன்னுக்கு மேல் $5\frac{1}{2}$ டன்னுக்குள் | 220—0—0 | 330—0—0 |
| 7. $5\frac{1}{2}$ டன்னுக்கு மேல் $7\frac{1}{2}$ டன்னுக்குள் | 270—0—0 | 405—0—0 |
| 8. $7\frac{1}{2}$ டன்னுக்கு மேல் 9 டன்னுக்குள் | 320—0—0 | 480—0—0 |
| 9. 9 டன்னுக்கு மேல் | 350—0—0 | 525—0—0 |

10. லாரியுடன் கூட்டுவண்டிச் சேர்த்தால் அதற்குக் கட்டவேண்டிய தீர்வை

| | | |
|---|---|---|
| 1. 1 டன் எடைக்கு | 20—0—0 | 30—0—0 |
| 2. 1 டன்னுக்கு மேல் 3 டன் வரை | 75—0—0 | 112—8—0 |
| 3. 3 டன்னுக்கு மேல் | 150—0—0 | 225—0—0 |
| 5 பேர் செல்லும் மோட்டார் | 80—0—0 | 120—0—0 |
| 5 பேருக்கு மேல் டிரைவர் கண்டக்டர் இடம்தவிர மற்ற நபர் ஒன்றுக்கு | 20—0—0 | 30—0—0 |

| வண்டிகளின் விவரம் | நியூமாடிக் அல்லது காற்றடைக்கப்பட்ட டையர் உள்ள வண்டி: ஏழு நாட்களுக்கு அதிகப்படாதிருந்தால் | நியூமாடிக் அல்லது காற்றடைக்கப்பட்ட டையர் உள்ள வண்டி: ஏழு நாட்களுக்கு மேல் 30 நாட்கள் வரை | இதர வண்டிகள்: ஏழு நாட்களுக்கு அதிகப்படாதிருந்தால் | இதர வண்டிகள்: ஏழு நாட்களுக்கு மேல் 30 நாட்கள் வரை |
|---|---|---|---|---|
| மோட்டார் லாரிகள் | ரூ.அ.ப | ரூ.அ.ப. | ரூ.அ.ப. | ரூ.அ.ப. |
| (a) லாரி, 1 டன்னுக்கு அதிகப்படாத சரக்குடன் | 8-8-0 | 25-0-0 | 12-8-0 | 37-8-0 |
| (b) 1 டன்னுக்கு மேல் $1\frac{1}{2}$ டன்னுக்குள் | 16-12-0 | 50-0-0 | 25-0-0 | 75-0-0 |
| (c) $1\frac{1}{2}$ டன் முதல் $2\frac{1}{4}$ டன் வரை | 20-0-0 | 60-0-0 | 30-0-0 | 90-0-0 |
| (d) $2\frac{1}{4}$ டன் முதல் 3 டன் வரை | 25-0-0 | 75-0-0 | 37-8-0 | 112-8-0 |
| (e) 3 டன்முதல் $4\frac{1}{4}$ வரை | 30-0-0 | 90-0-0 | 45-0-0 | 135-0-0 |
| (f) $4\frac{1}{4}$ ,, $5\frac{1}{2}$ ,, | 36-12-0 | 110-0-0 | 55-0-0 | 165-0-0 |
| (g) $5\frac{1}{2}$ ,, $7\frac{1}{2}$ ,, | 45-0-0 | 135-0-0 | 67-8-0 | 202-8-0 |
| (h) $7\frac{1}{2}$ ,, 9 ,, | 53-8-0 | 160-0-0 | 80-0-0 | 240-0-0 |
| (i) 9 டன்னுக்கு மேல் பட்டவை | 58-8-0 | 175-0-0 | 87-8-0 | 262-8-0 |
| லாரியுடன் தொடர் வண்டி சேர்த்தால், அதற்குள்ள வரி | | | | |
| 1. ஒவ்வொரு தொடருக்கும் சரக்குடன், 1 டன் வரை | 3-8-0 | 10-0-0 | 5-0-0 | 15-0-0 |
| 2. 1டன்முதல் 3டன் வரை | 12-8-0 | 37-8-0 | 18-12-0 | 56-4-0 |
| 3. 3 டன்னுக்கு மேல் பட்டவை | 25-0-0 | 75-0-0 | 37-8-0 | 112-8-0 |

இரண்டு அல்லது 2-க்கு மேல்பட்ட லாரிக்கு ஒரே தொடர் இருந்தால் அவைகளுக்கு இச்சட்டத்தின் கீழ் வரியில்லை.

# நட்பும் காதலும்.

[சி. யோ. சா]

பொன்னுள் என்பது என் காதலியின் பெயர். பொன்னுள் என்றால் பொன்னை ஆளுகிறவள் என்று போற்றப்பட பெரிய பணக்காரி அல்ல. தனது உத்தம எண்ணத்திலும், பேச்சினுலும், செய்கையினுலும் எல்லாருடைய மனதையும் பொன்போல கொள்ளை கொண்டவள். அவளுடைய தந்தை காளிமுத்து நீலகிரியிலுள்ள ஒரு தேயிலைத் தோட்டத்திலே கூலி வேலை செய்து வந்தார். அவருக்குப் பொன்னன், பொன்னுள் என்ற இரு குழந்தைகள். பொன்னன் பொன்னுளைவிட இரண்டு வயது மூத்தவன். பொன்னுள் கல்வி அதிகம் கற்கவில்லையேனும் கடவுளிடத்தில் மாருத பற்றுடையவள். அழகில் லக்ஷ்மியையும் கற்பில் அருந்ததியையும் ஒத்திருந்தாள்.

அத் தேயிலைத் தோட்டத்தை மேற்பார்க்கும் தலைமை கண்காணி முத்துவேலுக்குத் தங்கசாமி என்ற ஒரு மகன் இருந்தான். கண்காணி சிறிது பணமுடையவராகையால் தமது மகனை நீலகிரியிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் படிக்க வைத்தார். இயற்கையிலேயே அக் கண்காணியும் அவர் குடும்பத்தாரும் மிகவும் பக்தியுள்ளவர்கள். தங்கசாமியை இளமையிலிருந்தே தெய்வபக்தியில் வளர்த்தனர்.

மேற்குறித்த தங்கசாமியே நானென்பதை வாசகர் அறிய ஆவல்கொள்கிறேன். என் தந்தைக்கும், காளிமுத்து மகன் பொன்னனுக்கும் பற்று அதிகம். ஏனெனில், அவன் மிகவும் கீழ்ப்படிதலுள்ளவனுய் என் தந்தை இடும் வேலை எவ்வகைத்தாயினும் கிஞ்சித்தும் முணுமுணுப்பின்றிச் செய்து வந்தான். நான் சும்மா இருக்கும் நேரங்களில் அவனுக்கு உதவி செய்வேன். நாள் ஆகஆக அவனுக்கும் எனக்கும் நீங்காத நட்பு ஏற்பட்டுவிட்டது. என்ன ஆச்சரியம்! கல்வி முதிர்ந்த ஓர் உயர்தரப் பாடசாலையில் எனக்குக் கிடைக்காத நண்பன், ஒரு தேயிலைத் தோட்டக் கூலியாளாகக் கிடைத்துவிட்டான். தற்கால மேல்நாட்டு நாகரிகத்தின்படி எங்குக் கல்வி அதிகரித்து அறிவு மிகுகிறதோ, அங்கெல்லாம் துர்நடத்தைகளும், தெய்வபக்தி யின்மையும், கற்பைக் கெடுக்கும் காரியங்களும் அதிகரித்துக்கொண்டு வருவதை நாம் கண்கூடாகக்கண்டிருக்கிறோம். நாலைந்து வருடங்களுக்குள் நாங்களிருவரும் இணைபிரியா நண்பர்களாகி விட்டோம். அவன் ஒரு கடினமான வேலை செய்யும் போது என் மனம் பதைக்கும். அவனுக்கு வியாதி வந்தால் எனக்கு வந்ததாகப் பாவிப்பேன். சாப்பாட்டு நேரம் தவிர மற்ற ஓய்வு நேரங்களை என்னிடத்தில் கழிப்பான். இவை என் பெற்றோருக்குப்

பிடிக்கவில்லை. ஏன்? அவன் கூலிக்காரன் அல்லவா! பிரிய வாசகர்களே! உலகமே இப்படித்தான். ஒருவனுடைய அழகையும், படிப்பையும், செல்வத்தையும் நம்பி, அவனைச் சிநேகித்து அதன்பயனாக கஷ்டமடைகின்றனர். ஒத்த குணமுடையவரே உயர்ந்த நண்பராவர். சிற்சில சமயங்களில் அவனுடன் சிநேகம் வைக்கக்கூடாதென்று என் பெற்றோர் என்னைக் கண்டித்தனர். அதுமுதல் அவன் என்னை அடிக்கடி சந்திப்பதை விட்டுவிட்டான். என் மனதிலோ அமைதி இல்லை. அவன் இல்லாத ஒவ்வொரு நாழிகையும் ஒரு யுகமாகத் தோன்றும். என்னே! உண்மை நட்பின் மகிமை.

இவ்வாறு அவன் வருவது தடைபடவே, நான் அவன் வீடு செல்லத் துணிந்தேன். ஒவ்வொரு நாளும் அவனைப் பார்த்தால்தான் எனக்குச் சாந்தி நிலவும். இவ்வாறு நான் போய்ப் பார்த்து வரும் நாட்களில், அடிக்கடி அவன் தங்கை பொன்னாளைச் சந்திக்க நேரிட்டது. என்னைப் பார்க்கும்போது அவள் எனக்குக் கொடுக்கும் மரியாதையும், அவளுடைய கபடற்ற முகமும், மாசற்ற மொழிகளும் என்னை அவள் வசப்படுத்தின. நான் தோட்ட மேலதிகாரியின் மகனாகையால் அவள் என்னுடன் பேச சிறிது பயப்படுவாள். இருந்தாலும், சிற்சில சமயங்களில் என்னுடன் பேச வாயெடுத்தாலும், வெட்கம் அவள் வாயை அடைத்துவிடும். இவ்விதமாக நான் அவளைச் சந்திக்கச் சந்திக்க எங்களை யறியாமலே எங்களிருவர் உள்ளத்திலும் காதல் வளர்ந்து வந்தது. இவ்விதக் காதலுண்டாக்க காரணமா யிருந்தது எங்களிருவரது ஒத்த கற்பே தவிர, பணமாவது அழகாவது அல்ல என்பதை வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாங்கள் இருவரும் பேச சமயங்கிடைக்காவிடினும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து ஆனந்த மடைந்து வந்தோம். என்னே, காதலின் மேன்மை! வீட்டிலோ, பள்ளியிலோ, சிநேகரிடத்திலோ, எவ்விதமான கவலைக்கிடமான காரியங்கள் நிகழ்ந்த போதிலும் காதலியின் முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் சொல்லொணாத ஆனந்தம் உண்டாகின்றது. காதலுக்கு ஜாதி பேதம் உண்டா, மத வைராக்கிய முண்டா, உயர்வு தாழ்வு உண்டா? இல்லை.

சிறிது காலத்திற்குள் அவள் மங்கைப் பருவ மெய்தினள். அதன்பின் பலர் எங்கள்மீது வீண் சந்தேகங்கொள்ள ஆரம்பித்தனர். எங்கள் காதல் வளர்ச்சிக்கு உடந்தையா யிருந்தது பொன்னாளின் அண்ணனிடம் நான் கொண்டுள்ள நட்பே என்று சிலர் பேசிக்கொண்டனர். இவை யாவும் என் தந்தைக்குத் தெரியாது. இருந்தாலும், பெண்பிள்ளையுள்ள வீட்டிற்கு நான் அடிக்கடி போவதைக் குறித்து என்னைத் தடுக்க ஆரம்பித்தார். என் தந்தையோ மிகவும் நல்லவர். காதல் மணங்களை ஆதரிப்பவர். எத்தனையோ



காதல் மணங்களுக்கு அவர் மிக்க உதவி செய்துள்ளார். உண்மைக் காதலைப்பற்றிப் பல இடங்களில் உபந்யாசம் செய்துள்ளார். வெகு சந்தோஷந்தான். ஆனால், என்னைமட்டும் ஏன் அவர் அடிக்கடி பொன்னனின் வீடு போக வேண்டாமென்று சொல்லுகிறார்? ஒருவேளை எங்கள் காதலைப்பற்றி அவருக்கு யாராவது சொல்லி யிருப்பார்களோ? என்ற சந்தேகங்கள் நினைவுகள் என்னை வதைத்தன. அதோடு மாசற்ற, கீழ்ப்படிதலுள்ள, தெய்வ பக்தியுள்ள அவளுடைய அண்ணனின் சிநேகத்தை வேண்டாமென்றவர்கள் இவளுடன் நான் கொண்டுள்ள காதலை ஆதரிப்பார்களா? இல்லவே இல்லை. என்றாலும் தினந்தோறும் எப்படியாவது பொன்னாளையும் பொன்னனையும் பார்த்துவிட்டு வந்து விடுவேன்.

இப்படி யிருக்கையில் ஒரு ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் நான் பொன்னனைத் தேடிக்கொண்டு அவன் வீடு சென்றேன். ஆனால், அவனுக்குப் பதிலாக எனதருங் காதலி வீட்டிற்குள்ளிருந்தாள். வீட்டில் ஒருவரும் இல்லை. அவள் மட்டும் தனிமையா யிருந்தாள். என் மனம் துடிதுடித்தது. வாய்க் குழம்பிற்று. வெளியே கதவருகில் நின்றவண்ணமாக ‘பொன்னா!’ என்று கூப்பிட்டேன்.

‘அண்ணன் வீட்டிலில்லை. கடைக்குப் போய்விட்டான். சீக்கிரம் வந்துவிடுவான்’ என்று உள்ளே யிருந்தபடியே தரையைப் பார்த்தவண்ணமாக மொழிந்தாள்.

‘உன் அண்ணன் வருகிற வரையில் நான் வீட்டிற்குள் இருக்கலாமா?’ என்றேன்.

அவளும் உடனே இசைந்ததற் கறிகுறியாக வீட்டை ஒரு முறை சுத்தமாகப் பெருக்கிவிட்டு நடுவீட்டில் ஒரு பாயை விரித்தாள். அதன்மேல் அமர்ந்தேன். பின்பு ஒருவாறு துணிவு கொண்டு, அவளைப் பார்த்து, ‘பொன்னா வெகு நாட்களாக உன்னிடம் ஒரு சமாசாரம் கேட்கலாமென் றிருக்கிறேன். கேட்கட்டுமா?’ என்றேன்.

‘கேளுங்கள்’ என்றாள்.

‘நீ என்னை உண்மையாய்க் காதலிக்கிறாயா?’ என்றேன். அவளுடைய முகம் மாறுதலடைந்தது. கண்களில் நீர் பெருகிற்று.

‘ஆனால்.......’ என்று விம்மினாள்.

‘ஆனால் என்ன’ என்றேன்.

‘உங்கள்..!.....நிலைமைக்கும் என் நிலைமைக்கும் வெகு தூரமாயிற்றே’ என்றாள். இப்படிச் சொல்லும்போது அவள் கண்களி

னின்று நீர்த் துளிகள் பூமியில் விழுந்தன. என் மனம் சகிக்கவில்லை. எனக்கும் அழுகை வந்தது. என்றாலும், என் கண்களை அவள் அறியாவண்ணம் துடைத்துக்கொண்டு,

‘நிலைமையைப்பற்றிக் கவலைப்படாதே என்னை நேசிக்கிறாயா?’ என்று மறுமுறை கேட்டேன். அவள் பதில் கூறவில்லை. தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, என்னைப் பார்த்துப் புன்னகை பூத்துவிட்டு, நிலத்தை நோக்கிக்கொண்டு தன் கால் பெருவிரலால் பூமியில் கோலம் போட்டுக்கொண்டிருந்தாள். ‘பதில் என்ன?’ என்று கேட்க வாயெடுத்தேன். அதே சமயம் என்னைத் தேடி வந்த என் தாயாரைக் கண்டதும் நெஞ்சந் திடுக்கிட்டு நேரே என் தாயுடன் வீட்டிற்குப் போனேன். ‘அங்கே என்ன செய்துகொண்டிருந்தாய்’ என்று தாய் கேட்க, ‘பொன்னனைத் தேடிக்கொண்டு வந்திருந்தேன், அவனைக் காணோம். அவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தேன்’ என்றேன். இதிலிருந்து நான் வீட்டிலில்லாதபோது சிற்சில சமயங்களில் என் தாயும் தகப்பனும் என்னைப்பற்றிப் பேசிக்கொள்வதைக் கேட்டிருக்கிறேன். ஆனால், நான் வந்தவுடன் சம்பாஷணை நின்றுவிடும்.

காலச்சக்கரம் யாரை விடுகிறது. நான் கடவுளருளால் S. S. L. C. பரீக்ஷையில் முதன்மையாய்ப் பாஸ் பண்ணிவிட்டு ஆறு மாதமாக வெறுமனே காலத்தைக் கழித்து வந்தேன். எனது காதலைப்பற்றி எனது தந்தை அறிந்தவுடன் என்னை இரகசியமாய் வேற்றூருக்கு அனுப்பிவிட நினைத்தார். அப் பெண்ணுக்கு வேறெவ்விடமாவது கலியாணம் முடிந்த பின்பு என்னை அழைத்துக் கொள்ளலாமென்பது அவருடைய யோசனை. அதை ஓர் நாள் என் பெற்றோரின் சம்பாஷணையில் அறிந்துகொண்டேன். ஓர் இரவு அத்தோட்டத்தின மானேஜரிடம் போய் அங்கு காலியாயிருந்த குமாஸ்தா வேலையைக் கேட்டேன். அவரும் மாதம் 45 ரூபாய் சம்பளம் தருவதாக ஒப்புக்கொண்டார். அங்கிருந்து வீட்டிற்கு வந்தபோது தான் மேற்குறித்த சம்பாஷணை என் பெற்றோருக்கு நடந்துகொண்டிருந்தது. சம்பாஷணையும் முடிந்தது. நானும் உட்சென்றேன். என் தந்தை என்னை அமரச் சொல்லி, என்னை சென்னை இஞ்சினீயர் காலேஜுக்கு அனுப்பலாமென் றிருப்பதைத் தெரிவித்தார். நான் வேலை பார்த்து வந்ததைச் சொல்லியும் அவர் கேளாமல் எப்படியாவது போய்த் தீரவேண்டுமென்று பிடிவாதஞ் செய்தார். நானும் ஒருவாறு சம்மதித்தேன்.

இவ்விஷயத்தை என் காதலிக்குச் சொன்னால் வருந்துவாளென்று சொல்லவில்லையாயினும், அவள் எப்படியோ அறிந்துகொண்டாள். போக வேண்டிய நாள் நெருங்கிற்று. அதற்கு



முந்தின நாள் அவளிடமும், பொன்னனிடமும் விடைபெற்றுவர அவர்கள் வீடு சென்றேன். போய்வரச் சம்மதம் கேட்கும்போது அவள் நாக் குழற, அழுத கண்ணுடன், ‘காதலரே இரண்டு நாளைக்கு முன்னே எங்கள் மாமன் வீட்டிலிருந்து எங்கள் வீட்டிற்குப் பெண் கேட்க வந்தார்கள். அப்போது என் அண்ணன் வீட்டில், இல்லை. எங்கள் மாமன் மகன் சுந்தரத்திற்கு என்னைக் கலியாணம் செய்து கொடுப்பதாக என் பெற்றோர் ஒப்புக்கொண்டனர். கூடிய சீக்கிரம் கலியாணம் நடக்கும். இச்சமயம் நீங்கள் என்னைவிட்டுச் செல்லல் ஆகுமா? என்றாலும், நீங்கள் போக வேண்டியது அவசியமாகையால் என்னை எப்படியாகிலும் காப்பாற்றுவதாக வாக்குக் கொடுத்துவிட்டுப் போங்கள்’ என்றாள். அவ்வாறே நானும் வாக்குக் கொடுத்துவிட்டு, என்னுடைய புகைப்படம் ஒன்றை அவளிடம் கொடுத்துவிட்டு, அவள் அண்ணனிடம் அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருக்க வேண்டுமென்று எச்சரித்துவிட்டு மறுநாள் மெயில் ஏறிச் சென்னை யடைந்தேன்.

சென்னை காலேஜில் நானும், ராமநாதன் என்னும் ஒரு நாயுடுவும் ஒரே அறையில் வாசம் பண்ண நேர்ந்தது. அதன் பயனாக வெகு சீக்கிரத்தில், நாங்கள் நண்பராகி விட்டோம். அவருடன் பழகப் பழக அவருடைய அருங்குணம் தெள்ளென விளங்கிற்று. நாங்கள் எப்போதும் ஒன்றாய்க் கல்லூரிக்குப் போவதே வழக்கம். ஒரு மாதம் வரையில் என் தந்தையிடம் இருந்தும் பொன்னனிடமிருந்தும் கடிதங்கள் வந்துகொண்டிருந்தன. பொன்னன் கடிதம் எழுதி என் தந்தையின் கடிதத்திற்குள் வைத்து அனுப்புவது வழக்கம். அம் மாதக் கடைசியில் ஒரு நாள் ராமநாதன் வெளிச் சென்றிருந்த சமயம் பொன்னனிடமிருந்து தனிமையாய் ஒரு கடிதம் வந்தது. அது பின் வருமாறு;

கூடலூர், நீலகிரி.
6—1—37.

அன்பரே,

உங்களுடைய காதலைப்பற்றி பலர் பலவிதமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள். நீங்கள் கெட்டுப்போகக் காரணம் நான்தான் என்று பலர் அபிப்பிராயப் படுகிறார்கள். எவ்வளவு நல்லவனாயிருந்தும் இவ்வுலகில் நல்லவனென்று பேரெடுக்க முடியவில்லை. உங்கள் தந்தையின் குணம் முற்றும் மாறிவிட்டது. என்னைப் பார்த்தால் பேயைப்போல் சீறி விழுகிறார். யாது காரணமோ அறியேன். பொன்னாள் நீங்கள் போனதிலிருந்து உடம்புக்கு சௌக்கியம் இல்லாமல் இருந்து சென்ற ஒரு வாரமாக ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். இன்றே என்னையும் பொன்னாளையும் மறந்து விடுங்கள்.

இப்படிக்கு,
பொன்னன்.

கடிதத்தை வாசித்தேன். சூரியன் திசை மாறி உதித்தாலும் உதிக்கலாம். ஆனால், நண்பரை மறக்க முடியுமா? ஒன்றுந் தோன்றாமல் முன்னாலிருந்த மேஜையின்மீது சாய்ந்த வண்ணமாக யோசனையில் ஆழ்ந்தேன். இரவு எட்டு மணிவரை ஒன்றும் தோன்றாமல் கண் மூடிக் கனமாகச் சாய்ந்திருந்தேன். ராமநாதன் வந்து விளக்கேற்றிவிட்டுக் காரணம் யாதெனக் வினவ, எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னேன். அவருடைய முகம் சிறிது விகாரமடைந்தது. காரணம் தெரியவில்லை.

மறு வாரம் என்னை மறந்துவிடு என்று எழுதின பொன்னனிடமிருந்து இன்னொரு கடிதம் வந்தது. அதில், நண்ப,

என் தங்கை நாளுக்குநாள் கேவலமாகிக் கொண்டே வருகிறாள். என்ன மருந்தாலும் குணமடையாதது கண்ட வைத்தியர், இது மனோவியாதி என்று தீர்மானித்தார். என்னை ஓர் நாள் இம் மனோவியாதிக்குக் காரணம் யாதென வினவ, நானும் ஒருவாறு உங்கள் காதலைப்பற்றிச் சொன்னேன். அவர் தன்னை நாடிவந்த பெண்ணின் மனோவியாதியை எப்படியாவது தீர்ப்பதாகச் சொன்னார். அதைக் குறித்து உங்கள் தந்தையை இரண்டு மூன்று முறை சந்தித்தார். வைத்தியர் சொன்னதை என் தங்கையிடம் சொன்னதிலிருந்து சிறிது குணமடைந்து வருகிறாள். பொன்னன்' என்றிருந்தது. இதை வாசித்து சிறிது சந்தோஷப்பட்டாலும், என் தந்தையின் பிடிவாத குணத்தை நினைத்த மாத்திரத்தில், துக்கம் அச் சந்தோஷத்தையும் அடியோடு மூடிவிட்டது. ராமநாதன் வந்ததும் இக் கடிதத்தையும் அவருக்குக் காண்பித்தேன். அவர் கண்ணீர் விட்டுக்கொண்டு, 'உன் விதியும் இப்படியா ஆக வேண்டும்?' என்று சொல்லி தம் கதையைச் சொல்லலானார். அவர் தம்முடன் படித்த கமலம் என்ற ஓர் ஆதிதிராவிடப் பெண்ணைக் காதலித்ததாகவும், அவர் தந்தை அதற்கொப்புக் கொள்ளாமல் போகவே, கமலம் ஏரியில் விழுந்திறந்ததாகவும், அவர் இனிமேல் கலியாணம் செய்வதில்லை என்று நிச்சயித்து, தம் முற்பெயராகிய கிருஷ்ணசாமி என்பதை, ராமநாதன் என்று மாற்றிக்கொண்டு, ஒருவரும் அறியாவகை சென்னை யடைந்து, பெற்றோர் இல்லை யென்று சொல்லி, இவ்விடம் இலவசமாய்க் கல்வி கற்று வருவதாகச் சொன்னார். சொல்லிவிட்டுத் தம் பெற்றோரைப் பார்க்க மிகவும் ஆவலுள்ளவரா யிருப்பதாகவும், பார்த்துவிட்டுச் சீக்கிரம் வருவதாகவும் சொல்லிப் புறப்பட்டார். அவர் போய் ஒரு வாரம் இருக்கும். ஒரு நாள் எனக்கு இரண்டு கடிதங்கள் வந்தன. ஒன்று தந்தையிடமிருந்து. மற்றொன்று பொன்னனிடமிருந்து. தந்தையின் கடிதத்தை வாசித்தேன். அதில்,



கூடலூர், நீலகிரி.

சிரஞ்சீவி குமாரனுக்கு, 20—1—37.

ஒரு அவசரத்தின் நிமித்தமாக உன் வருகை அத்தியாவசியமாயிருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்.

தந்தை.

என்றிருந்தது. நண்பனின் கடிதத்தை வாசித்தேன். அதில்,

அன்பரே, கடவுளுக்கு ஸ்தோத்திரம். உங்கள் எண்ணம் கை கூடிவிட்டது. சென்றவாரம் இவ்விடம் பல நற்சாட்சிப் பத்திரங்களும், மெடல்களும் பெற்ற ஒரு ஜோதிடர் வந்திருந்தார். உங்கள் தந்தைக்கு ஜோதிடத்தில் பற்று அதிகம் [illegible]ன்று உங்களுக்கே தெரியும். உங்கள் வீட்டில், உங்களைப்பற்றி ஜாதகம் கணித்ததில், உங்களுக்கு இதே மீ 28 ஆந் தேதிக்குள்ளாகக் கலியாணமாகி விடவேண்டுமென்றும், இல்லையெனில் உங்கள் ஜீவியத்தையே பிரமச்சாரியாகக் கழிக்க நேரிடும் என்றும், உங்களு கேற்ற பெண் பொன்னாளே என்றும் சொல்லிப் போனார். அதற்கடுத்த நாள் என் மாமன் வீட்டி லிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், பொன்னாளின் ஜாதகத்திற்கும், சுந்தரத்தின் ஜாதகத்திற்கும் கிஞ்சித்தும் பொருத்தமில்லை என்றும், கலியாணம் நடக்கும் பட்சத்தில் அவர்களுடைய வாழ்க்கை சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்றும் கூறினதாகவும், ஆகையால் பெண் வேண்டாமென்றும் இருந்தது. அதே சமயம் அச்ஜோதிடர் எங்கள் வீட்டிற்குவந்து அதேபோல் சொன்னார். இப்படி யிருக்கையில், அதற்கடுத்த நாள் [illegible]ங்கள் பெற்றோர் எங்கள் வீட்டிற்குவந்து, எப்படியாகிலும் 20 ஆந் தேதி [illegible]ன்கிழமை கலியாணத்தை முடித்து விடவேண்டுமென்றனர். உங்களுடைய தந்தையின் கடிதத்தை எதிர் பார்க்கவும்.

பொன்னன்.

இதை வாசித்தவுடன் எவ்வளவு சந்தோஷம் அடைந்திருப்பேனென்பதை நேயர்களே அறிவீர்களாதலால் சொல்லாமல் விடுத்தேன். உடனே பிரின்சிபாலிடம் தந்தையின் கடிதத்தைக் காட்டி லீவு வாங்கிக்கொண்டு, கல்லூரிச் சம்பளத்திற்கென்று வந்த ரூ. 55-யும் எடுத்துக்கொண்டு கிளம்பினேன். சென்னை மூர்மார்க்கெட்டில் புகுந்து என் காதலிக்கு 'அதுவும் இதுவுமாக' 15 ரூபாய்க்கு இனும் சாமான்கள் வாங்கினேன். அதன்பின் சரியாய் இரவு 9-30 மணிக்கு, புளூ மவுண்டன் எக்ஸ்பிரசில் ஏறினேன். வண்டியும் மறுநாள் பகல் 12 மணிக்கு என்னை ஒத்தையில் இறக்கிற்று. அங்கே தயாராயிருந்த ஒரு பஸ்ஸில் ஏறி சாயங்காலம் சரியாய் 6 மணிக்கு வீடுபோய்ச் சேர்ந்தேன். அங்கே பந்தல் [illegible]னைடிப்பக்கமெல்லாம் வெகு தடபுடலாய் நடந்துகொண்[illegible]டிருந்

தன. ஒன்றும் அறியாதவன்போல் என் தந்தையை வினவினேன். அவர் என்னை ஜோசியரிடம் அழைத்துக் கொண்டுபோய் எல்லாவற்றையும் விளக்கினார். ஜோசியர்மீது எனக்கு அளவு கடந்த பிரியம் உண்டாய்விட்டது. என் தந்தை போய்விட்ட பின்பு, மெதுவாக என் பணப் பையில் மீதியாயிருந்த ரூ. 30-ம் ஜோதிடருக்குக் கொடுத்தேன். கொடுத்துவிட்டு என் காதலிக்கு நான் வாங்கிக் கொண்டு வந்திருந்த இனாமோடு, அவள் வீட்டிற்குப் புறப்பட்டேன். நான் போகும்போது அவர்கள் கலியாணத்தைப்பற்றிப் பேசின வண்ணம் இருந்தனர். என்னைக் கண்டதும் பொன்னாவின் முகம் செந்தாமரையைக் காட்டிலும் அழகாக விளங்கிற்று. நான் வாங்கி வந்ததையெல்லாம் கொடுத்துவிட்டு, வீடு திரும்பினேன்.

கலியாண நாள் வந்தது. கலியாணமும் வெகு விமரிசையாய் முடிந்தது. டாக்டரும் கலியாணத்திற்கு இனாமாக ஒரு 'டீ செட்' அனுப்பியிருந்தார். அன்றுமாலை நானும் என் மனைவியும் கதவை அடைத்துக்கொண்டு உல்லாசமாய் உரையாடிக்கொண்டிருக்கையில் கதவு தட்டப்பட்டது. வெகு கஷ்டத்தோடு மனமின்றி, கதவைத் திறக்க கதவருகில் ஜோதிடரைக் கண்டேன். அவரையும் உள்ளே அழைத்துக் கதவைச் சாத்திவிட்டு நானும் என் மனைவியுமாக முழங்காலில் நின்று அவரைக் கும்பிட்டோம். அதன்பின் எழுந்திருந்து அவர் முகத்தை ஆவலோடு நோக்கினோம். ஜோசியரைக் காணோம். அதற்கு பதிலாக, பொய் மீசையையும் தாடியையும் களைந்துவிட்டு என் நண்பன் ராமநாதன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டோம். 'நண்பா!' என்றேன் கொஞ்சிய குரலில். என் மனைவிக்கு ஒன்றும் விளங்கவில்லை. திகைத்துப் போய்விட்டாள். ராமநாதன் தாம் நீலகிரி வந்து டாக்டரின் உதவியால் செய்த காரியங்கள் யாவற்றையும் ஆதியோடந்தமாகக் கூறினார். நான் ஆனந்தத்தால் நண்பனைத் தழுவிக்கொண்டேன். ஆனால், ஒரு வேளை என் தந்தை இதை அறிந்தால் கலியாணத்தை ரத்து செய்யச்சொல்லி விடுவாரோ என்று பயந்து, மறுபடியும் அவரைச் சந்நியாசியாகவே சிங்காரித்து கண் குளிரக் கண்டு மகிழ்ந்தோம். விடிந்தது. போக உத்தரவு கேட்டார். நான் கொடுத்த முப்பது ரூபாயையும் திருப்பிக் கொடுத்தார். நான் அதை வாங்கி அதனுடன் இருபது ரூபாய் சேர்த்து ஐம்பது ரூபாயாகக் கொடுத்து மிகுந்த விசனத்துடன் அவரை வழிவிட்டனுப்பினோம்.

அதன்பின் எனக்கு அதே தோட்டத்தில் தலைமை குமாஸ்தா வேலை கிடைத்தது. மாதம் எண்பது ரூபாய் சம்பளமும் கிடைத்தது. நானும், பொன்னனும், பொன்னாவும் இன்பமாகக் காலங் கழித்தோம். 'காதல் செழிக்க' 'நட்பு வளர்ந்தோங்குக.'